சிவ சிவ







தமிழரும் இந்துமதமும்





குச்சனூர் கிழார்

நமது திருநெறிய தமிழ் வேத நால்வர்



அருள்மிகு திருஞான சம்பந்த நாயனார் | அருள்மிகு திருநாவுக்கரசு நாயனார் | அருள்மிகு சுந்தரமூர்த்தி நாயனார் | அருள்மிகு மாணிக்கவாசக நாயனார்



நால்வர் பொற்றாள் எம் உயிர்த் துணையே

இரக்கப்படு இறைவனைக் காண்பாய்

- தவத்திரு முத்தானந்தசுவாமிக



குச்சனூர் ஆதினம்

குச்சனூர், தேனி மாவட்டம்–655 515

குச்சனூர், தேனி மாவட்டம் தொலைபேசி : (0452) 2302424 கைபேசி : 98421-9625

தேனியிலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்திலும், தேனி – குமுளி சாலையில் உள்ள சின்னமனூரிலிருந்து 6 கிலோ மீட்டர் தூரத்திலும் குச்சனூர் திருத்தலம் அமைந்துள்ளது.

சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை : 8–00 மணியிலிருந்து 12–00 மணிக்குள் வடகுருபகவான் கோயிலி அனைத்து தோசங்களுக்கும் பரிகார பூசை செய்து படையல் வழங்கப்படும்.

தமிழரும் இந்து மதமும்

குச்சனூர் கிழார்

வெளியீடு :

குச்சனூர் ஆதினம்
குச்சனூர்
தேனி மாவட்டம் - 625 515.
கைபேசி : 98421 96258

முதற் பதிப்பு : தை முதல் நாள் ஜனவரி 15, 2009

உரிமை : குச்சனூர் ஆதினம்.

விலை : ரூ. 70/-

அச்சிட்டோர் : © 0452-2533661

குட்லக் எஜூகேஷனல் பப்ளிஷர்ஸ்
பிளாட் நம்பர் : 46, அண்ணாநகர்,
மதுரை - 625 020.

5-1

முன்னுரை

சிவனே தமிழ்: தமிழே சிவன் என்றும் சைவ சமயமே இந்திய சமயம் என்றும் இந்து சமயம் என்றும் சொல்லலாம். ஆனால் ஆரியர்கள் இந்தியாவிற்குள் வந்த பிறகே இந்திய சமுகத்தில் ஏற்றத்தாழ்வுகள் சாதிமுறைகள் ஏற்பட்டன என்பதை பல அறிஞர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

சிவம் என்பதன் மறு பெயர் அன்பு, சைவம் என்பதன் மறு பெயர் அறம். இதில் தனிமனிதனால் உருவாக்கப்பட்ட மதத்திற்கு இடமில்லை. அறம் மட்டுமே பேசப்படுவது சைவம்.

அறவாழ்வே தமிழர்களின் பண்பாடு தனி நபர் வழிபாட்டிற்கு இங்கு இடமில்லை. அதுவே சிவ சமயமாக இந்தியா முழுவதும் பரவியிருந்தது என்பதற்கு தக்க சான்றுகள் கிடைத்துள்ளன. அறவாழ்வை அடிப்படையாகக் கொண்ட கிரேக்க ரோமானிய இனங்கள் அழிக்கப்பட்டதால் மேலை நாடுகளில் நூற்றாண்டுபோர், ஏழாண்டுப் போர், ரோஜாப்பூ போர் என்று தோன்றி பின்பு அது உலகப் போராக மாறியது என்பது வரலாறு. இந்தியாவில் தங்கள் இனத்தை வலுப்படுத்த ஆரிய இனம் சிவ வழிபாட்டை திட்டமிட்டு தாக்கியும் அழித்தும் வருகிறது என்பது கண்கூடு. இதனைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கில் அவ்வப்போது ஏற்பட்ட சிந்தனையின் அடிப்படையில் தமிழ் ஓசை நாளிதழில் பல தலைப்புகளில் கட்டுரைகள் எழுத நேர்ந்தது. அதனைத் தொகுத்து தமிழரும் இந்து மதமும் என்னும் பெயருடைய நூலாக குச்சனூர் ஆதினம் சார்பாக தமிழ் உலகிற்கு அளிக்கின்றேன்.

இக்கட்டுரைகளில் பலவும் இந்து சமய திறனாய்வாக அமைந்துள்ளன. இந்து சமயம் காக்கப்பட வேண்டும் என்பதும் தனிநபர் வழிபாட்டிற்கு இடமளிக்கக்கூடாது என்பதுமே இந்நூலின் நோக்கம், ஆரிய பிராமனர்களை விளக்கிவைக்க வேண்டும் என்பதல்ல நோக்கம்.

சிவ சமயமே உண்மையான இந்து சமயம் என்று சொல்லக் கூடிய நல்ல பிராமணர்களும் இங்கு உள்ளனர். அவதாரம் என்ற பெயரில் இராமன் கிருஷ்ணர் ஆஞ்சநேயர் போன்ற மனித மற்றும் விலங்குகள் வழிபாட்டிலிருந்து மாறி சிவ வழிபாட்டை மேம்படுத்தி இந்து சமயம் காக்க மற்றவர்களும் முன்வர வேண்டும்.

இந்நூலில் அடங்கியுள்ள பல கட்டுரைகளையும் வெளியிட்டு உதவிய 'தமிழ் ஓசை' நாளிதழ் மற்றும் அதன் இணைப்பாக வெளி வரும் களஞ்சியம் ஆசிரியர் திரு. யாணன் அவர்களுக்கும் மற்றும் ஆசிரியர் குழுவினருக்கும் என் நன்றி உரியது.

இக்கட்டுரைக் கோவையைச் சிறப்பாக அச்சிட்டுப் பதிப்பித்த 'குட்லக்' பதிப்பகத்தாருக்கும் நன்றி.

குச்சனூர் கிழார்

மதுரை

15.1.2009

பொருளடக்கம்

1. உயர்வற உயர்ந்த ஒருவன்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

உயர்வற உயர்ந்த ஒருவன் யார்? அவனே சிவன். இதனை நல்லார் நாமம் நமச்சிவாயவே என்ற ஞானசம்பந்தப் பெருமானின் தேவார வரிகள் தெளிவுபடுத்துகின்றன.

உலகின் முழு முதற்கடவுள் சிவபெருமான். அவனே உலகில் நடைபெறுகின்ற அத்தனை செயல்களுக்கும் காரணகர்த்தாவாக உள்ளான். இதனை மாணிக்கவாசக சுவாமிகள்.

தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கும் மற்றை
மூவர்கோனாய் நின்ற முதல்வன்

என்கிறார். சிவன் இந்திரன் இராமன் கிருஷ்ணன் போன்றவர்களாலும் கூட அறியப்படாத மாதேவன். உலகங்களைப் படைத்துக் காத்துத் துடைக்கும் தொழில் பூண்ட கடவுளர் எவரும் இல்லை. சிவ வழிபாட்டை அழிப்பதற்காக இட்டுக்கட்டிக் கூறப்படும் மூவர்க்கும் முதல்வன் என்பதால் அவனே உயர்வற உயர்ந்த ஒருவனாக உள்ளான் எனலாம்.

சிவன் என்பதன் பொருள்

சிவன் என்பதற்குச் சிவந்தவன் என்பது பொருள். ஞாயிற்றுச் செங்கதிர் என்பதும், மற்றொரு பெயர். இதனை வலியுறுத்தும் வகையில் ந.சி. கந்தையா பிள்ளை தமது சிவன் என்னும் நூலில்,

கடவுளும் ஆண் கடவுளரேயாவார். ஞாயிறு ஒவ்வொரு மாதத்திலும் தங்கும் வீடும் ஒவ்வொரு வடிவுடையதாகக் கொள்ளப்பட்டு மக்களால் வழிபடப்பட்டது'' என்று ஹிராஸ் பாதிரியார் கூறுவதாகக் கூறுகிறார்.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு

என்பது குறள்.

பிலிப்பைன்ஸ் தீவுகளில் சிலவற்றில் இன்றும் மக்கள் சிவனைச் சிவப்பன் என வழங்குகின்றனர் என்று இந்தியாவும் பசிபிக் உலகமும் என்ற தனது நூலில் ஓர் ஆராய்ச்சியாளர் குறிப்பிட்டுள்ளார். இதனால் பண்டைய மக்கள் ஆண் என்பதற்கு சிவப்பு என்னும் அடை கொடுத்து வழங்கினார்கள் எனக் கருதலாம். ஆண் அன் ஆனபோது சிவப்பு ஆண், சிவப்பன் ஆகிப் பின் சிவப்பன் சிவன் என்னும் சொல்லின் உற்பத்தியைக் கூற வந்த ஆசிரியர்கள் எல்லோரும் சிவன் என்பதற்குச் சிவந்த கடவுள் என்னும் பொருளே கூறியுள்ளார்கள். **(It has been suggested that the name is derived from the Tamil word for Red** (சிவ) **because he is red God and that name Rudra the red one is a Sanskrit Translation of the Tamil name - Stone age in India P.P. 48 and 49 - P.T.S. Iyengar).**

காலம்

தமிழ் மொழியின் தொன்மை எவ்வளவோ அவ்வளவு தொன்மை வாய்ந்தது சிவ வழிபாடு. உலகின் தென்கோடியில் அமைந்திருந்த பகுதி லெமூரியா கண்டம் என்பதாகும். உயிர் உற்பத்தி முதன் முதலில் இங்கு தான் தோன்றியிருக்க வேண்டும் என உயிர் நூலார் கருதுகின்றனர். இன்று ஏற்பட்டுள்ள சுனாமி போல் அன்று ஏற்பட்ட

பேராழிகளால் நிலங்கள் துண்டாடப்பட்டு, பல்வேறு துண்டு நிலங்களாகப் (இன்றுள்ள கண்டங்களாக) பிரிந்து போயிருக்கலாம் என்பதைப் பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள் ஒத்துக் கொண்டுள்ளனர். கீன் என்னும் ஆசிரியர் மனித குடும்பத்தின் தொட்டில் மலாய ஆசியா (யாவா மனிதன்) வாக இருக்கலாம் என்றும் இங்கிருந்து மக்கள் வடக்கு ஆசியா மேற்கு ஆப்பிரிக்கா கிழக்கு மேற்கு ஒசேனிய உலகம் என்பவைகளுக்குச் சென்று பரவினார்கள் என்றும், அக்காலத்தில் தரைத் தொடர்பு இருந்தது என்றும் பிற்காலங்களில் நிலங்கள் கடலுள் மறைந்து சுருங்கிவிட்டன என்றும் தமது இந்தியாவும் பசிபிக் உலகமும் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைக்குப் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அமெரிக்காவில் சிவ வழிபாடு இருந்தது. வெள்ளையர்கள் அமெரிக்காவிற்குச் செல்வதற்கு முன்பே அங்கு இரண்டு வகையான இந்தியர்கள் இருந்தார்கள். அவர்கள் கொலராடோ என்ற நதிக்கரையில் வசித்தனர். இங்கு 1858-ல் தங்கம் கண்டுபிடிக்கப்படும் வரை இப்பகுதி யாருக்கும் தெரியாது. ஆனால் அதன் பிறகு அங்கு சென்ற வெள்ளையர்கள் அங்கிருந்த நதிக்கரையில் இருந்த சிவன் கோயிலைக் கண்டனர். இதனை 1937 செப்டம்பர் 23ம் தேதியில் லண்டனியிருந்து வெளியாகும் (13ம் பக்கம்) நியூஸ் ரிவ்யூ என்ற செய்தித்தாள் வெளியிட்டுள்ளது. இப்படத்தை ந.சி. கந்தையாபிள்ளை தமது சிவன் என்னும் நூலில் பதிப்பித்துள்ளார். எனவே சிவ வழிபாடு தமிழர் வழிபாடாக இருந்து பின்பு உலக முழுவதும் பரவியிருந்தது. இதன் காலம் பத்தாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகும் என ஊகிக்கலாம்.

உலகிற்கு முதல்வன்

கிரேக்க நாட்டில் பக்கஸ் **(Bacchus)** தயோனிசஸ் **(Dionisus)** வழிபாடுகள் தொடர்பில் சில லிங்கங்கள் வழிபடப்பட்டன. கிரீசில் பக்கஸ் விழாவில் லிங்கம் வீதிவலம் செய்யப்பட்டது. எகிப்தியரின் ஒசிரிஸ் என்னும் தெய்வம் பக்கஸ் என்பதன் இன்னொரு வேறுபாடே

பக்கஸ் வழிபாடு இத்தாலியில் மிகவும் பரவியிருந்தது. பக்கஸ் கெபன் **(Hebin)** அல்லது கம்பானியா **(Campania)** என்னும் பெயருடன் வழிபடப்பட்டார். பக்கசுக் கடவுளுக்கு இடபமும் (சிவன் காளை) புலியும் மிகப் பிரியமானவை.

அமெரிக்காவின் பல பகுதிகளில் சிறப்பாக மெக்சிக்கோ, மேரு, கைதித்வு **(Hyde)**-களில் சிவலிங்கம் வழிபடப்பட்டது. இஸ்பானியர் **(Spanish)** முதன் முதலில் அமெரிக்காவிற்குச் சென்றபோது ஆலயங்களில் சிவலிங்கங்கள் வைத்து வழிபட்டதைக் கண்டார்கள் **(Opiolateria The Indigion of Japan by A.C. Underwood - P41)** என ஏ.சி. அண்டர்வுட் என்பார் விவரித்துள்ளார் என்று ந.சி. கந்தையா பிள்ளை தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் சிவன் மலை அல்லது சிவன் ஒளி மலை என்னும் ஒரு மலை உள்ளது. இம்மலை லிங்க வடிவமாயிருந்தமையால் இப்பகுதியில் பயணம் செய்த அரேபிய இஸ்லாமிய மாலுமிகள் இதனை ஆதம் மலை என்றார்கள். ஆதம் என்னும் ஆதிப்பிதாவைக் குறிக்க லிங்க வடிவமே கையாளப்பட்டதெனச் சொல்லப்படுகிறது.

The Arabic sailors who saw the phallic Cone of Ceylon calling it al maha and the *Adam* a Common Indo Musalman name or euphemism for the Lingam - Short Studies in The Science of Comparative Religions.

இப்படி உலகின் பல்வேறு நாடுகளிலும் வழிபாட்டில் தனி மனிதனுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அறநெறியில் சிவலிங் கமே கடவுளாக வழிபடப்பட்டது. இதை நன்கு அறிந்திருந்த வள்ளுவப் பெருந்தகை சிவ பெருமானைக் கருதியே,

ஆதி பகவன் முதற்றே உலகு என்று கூறுகிறார்.

பல கடல் கோள்களினால் லெமூரியாவின் சிறு சிறு பரப்புகள் நீரிலே ஆழ்ந்து இந்துமாக்கடல் தோன்றியது. தமிழ்மொழியோடு

ஒத்த மொழிகள் இன்று உலகின் பல பகுதிகளில் இருப்பது இதனால் தான் என்று தமிழ் ஆய்வாளர் தங்க வயல் லோகிதாசன் தமது தமிழ் மாலை என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் தென்பகுதியாகிய அழிந்து போன லெமூரியாவில் வாழ்ந்த மக்கள் முதன் முதலில் சிவனை வழிபட்டுப்பின்பு அது உலகம் முழுவதும் மக்களால் வழிபடப்பட்டதால் மணிவாசகர்,

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

என்று பாடுகிறார்.

எண்குணத்தான்

கடவுளுக்கு நன்மை செய்யும் குணம் மட்டுமே உண்டு என்று எண்ணுவது உலகியலார் இயல்பு. ஆனால் சிவனுக்கு எட்டு வகையான குணங்கள் உள்ளன என்று வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார்.

கோளில் பொறியிற் குணமிலமே என்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

மெய்கண்டார் சத்தாய் உள்ள சிவம் என்கிறார். சிவம் சத்தாய் உள்ளது. எனவே, அது சித்தாய் உள்ளது என்பதும் தெளிவு. இங்ஙனம் சத்தாயும், சித்தாயும் நிற்றலே பதியின் உண்மை இயல்பாகிய சொரூப இலக்கணம் ஆகும்.

சத்தும், சித்தும் ஆகிய இவற்றோடு ஆனந்தத்தையும் கூட்டி இறைமைக் குணங்களை மூன்றாகக் கூறுதல் உபநிடதங்களிற் காணும் வழக்கு. அவற்றை எட்டாக விரித்துக் கூறுதல் சிவநெறி வழக்கமாகும் என்று ஆராய்ச்சியாளர் ஆ. ஆனந்தராசன் தமது சிவஞான போதம் வழித்துணை விளக்கவுரை என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

திருநாவுக்கரசு சுவாமிகளும் ஈசன் எண்குணத்தான் என்று குறிப்பிடுகிறார். அவர் காட்டும் குணங்கள் யாவன. ஈசன் எண்குணத்தர், அவர் சூடும் இன மலர்கள் எட்டு, அவருக்குரிய தோள்கள் எட்டு, அவரால் படைக்கப்பட்ட திசையும் எட்டு இப்பொருளில் அப்பர் பாடிய பாட்டு.

எட்டுகொ லாம்அவர் ஈறில் பெருங்குணம்
எட்டுகொ லாம்அவர் சூடும் இனமலர்
எட்டுகொ லாம்அவர் தோளினை யாவன
எட்டுகொ லாம் திசை யாக்கின தாமே

என்பதாகும் இதனையே சுந்தரமூர்த்தி சுவாமிகளும்

இறையவனை மறையவனை
எண்குணத்தி னானை

என்று கூறுவது ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

எண்குணத்தான் தாளை வணங்காத் தலை என்ற குறளுக்குப் பரிமேலழகர்,

எண்குணங்களாவன : தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவில்லாற்றலுடைமை, வரம்பின்பமுடைமை என சிவனுக்குள்ள குணமாகக் கூறுகிறார். இவை அனைத்தும் சைவாகமத்துக் கூறப்பட்டுள்ளதால் சிவனே உயர்ந்த ஒருவன் என்பதனைப் புரிந்து கொள்ள இயலும் என்று தமது திருநாவுக்கரசர் தேவாரத்தில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் என்னும் நூலில் முனைவர் ச. சாம்பசிவனார் குறிப்பிடுகின்றார்.

எனவே, உலகில் எட்டுக் குணங்களை உடைய வேறு கடவுள் இல்லை என்பதால் சிவனே உயர்ந்த ஒருவன் என்பதும் அவன்

இவ்வுலகில் மனிதனாகப் பிறந்து இன்ப துன்பங்களை அனுபவித்து இறந்து போனவனும் அல்ல என்பதும் நமது முன்னோர்களின் முடிவு.

மாற்றினாலும், மாறாதவன்

பண்டைக் காலத்தில் இவ்வுலக மக்கள் எல்லோருக்கும் பொதுவான கொள்கைகள் பல இருந்தன. அவைகளுள் கடவுள் கொள்கையும் ஒன்று. எல்லா மக்களும் ஒரே வகையான வழிபாட்டைக் கைகொண்ட சமயமே நாளடைவில் சிறிது சிறிதாக வேறுபட்டு இன்றைய பல சமயங்களாகக் காணப்படுகிறது. அனைத்து மதங்களின் பழைமையை நோக்கி ஆராய்ந்து பார்த்தால் அவை அனைத்தும் ஒரு தனிச் சமயத்திற் சென்று முடிவடைதலைக் காணலாம்.

உலகம் முழுவதும் வாழ்ந்த மக்கள் துவக்கத்தில் சிவபெருமானையே வெவ்வேறு பெயர்களில் வழிப்பட்டனர் என்பதை மேலே கூறினோம். எனவே, சிவனை என்ன பெயரிட்டு அழைத்தாலும் அது அவனையே சாரும் என்பதால் அவனே உயர்ந்த ஒருவனாகிறான்.

தனக்குவமை இல்லாதான்

உலகில் தோன்றிய எல்லா மதங்களுக்கும் அதனைத் தோற்றுவித்த தலைவன் உண்டு. அவற்றிற்கெனத் தனி நூல்களும் உள்ளன. ஆனால் சிவபெருமானை (சிவசூரியனை) முழு முதற்கடவுளாகக் கொண்ட சைவ சமயத்திற்கு யார் தலைவன்? மற்றைய மதங்களைப் போல் அதற்கு ஒரே ஒரு வேத நூல் உண்டென்று சொல்ல முடியுமா? உலகில் எங்கெல்லாம் மனித இனம் அறவழியில் நின்று செயல்படுகிறதோ அதுதான் தமிழர் கண்ட வேதம். இதனை மனதில் கொண்டு தான் திருவள்ளுவப் பெருந்தகை

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது

என்கிறார்.

மாணிக்கவாசகர் சிவபெருமானுக்கு அவதாரம் இல்லை என்பதை உணர்ந்ததால்தான் சிவபெருமான் பிறப்பு, இறப்பு இல்லாதவன் என்பதை உணர்த்தும் வகையில்,

ஆதியும் அந்தமும் இல்லா
அரும்பெருஞ் ஜோதியை யாம்பாட

என்று பாடுகிறார்.

அதனால் உயர்வுற உயர்ந்த ஒருவன் சிவபெருமானைத் தவிர வேறு யார் இருக்க முடியும்?

சிவபெருமான் விருப்பு வெறுப்பற்றவன், இதனை

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல

என்கிறார் வள்ளுவர்.

நல்ல பல குணம் இல்லாதவர்களும் கொலைக்குற்றம் செய்தவனும் தன்னிடம் வந்து கசிந்து நிற்கும்போது அவர்களை மன்னித்து ஏற்றுக் கொள்ளும் குணம் படைத்தவன் சிவன் என்கிறார். திருஞானசம்பந்தப் பெருமான். இதனை அவரது தேவாரப் பாடல்கள் எடுத்தியம்புகிறது :

கொல்வாரேனும் குணம்பல நன்மைகள்
இல்லாரேனும் இயம்புவராயிடின்
எல்லாத்தீங்கும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சிவாயவே.

இந்துக்கள், சைவம், வைஷ்ணவம், சாக்தம், கௌமாரம் என்ற பல பிரிவுக் கடவுளை வணங்கினாலும், சிவன் உலக உயிர்களுக்கு அருள்பாலிக்கும் நாளாகக் கருதப்படும் சிவராத்திரி

அன்று தான் அனைவரும் தங்கள் முழுமுதற் கடவுள் வழிபாட்டை மேற்கொள்கின்றனர். இது சிவனுக்கே உரிய பெருமை என்பதால் அவனே உயர்வற உயர்ந்த ஒருவன் எனலாம்.

உயர்வற உயர்ந்தவன்

திருமால் பல அவதாரங்களைப் பெற்றாலும் அவன் தன்னிச்சையாக ஏதும் செய்ய இயலாமல் போனது. சிவ பூஜையின் பயனாலேயே அவன் தான் எண்ணியவற்றை அடைந்தான்.

இதனைக் கீழ்க்கண்ட செய்திகளின் மூலம் செங்கல்வராயன் பிள்ளை தமது சிவபூஜை மாண்மியம் என்ற நூலில் விளக்கிக் காட்டுகிறார்.

பிரமனுக்கும், திருமாலுக்கும் ஒரு முறை அகந்தை ஏற்பட்டுத்தாமே கடவுள் என வாதிட்டனர். இறுதியில் தங்கள் தவறை உணர்ந்து சிவனது திருவடியை வணங்கி ஐயனே, நாங்கள் அகந்தையால் பிழை செய்தோம், அப்பாவம் அகல சிவ பூஜை செய்கின்றோம் என்று வேண்டியதால் தங்கள் தீவினையிலிருந்து நீங்கினர்.

இதனை உணர்ந்த திருமூலர் சிவபெருமானைப் போன்றதொரு கடவுளை எங்கு தேடினாலும் காண இயலாது. அவனுக்கு நிகரான தேவர்களோ, மனிதர்களோ இல்லை. ஆதலால் தன்னியல்பினால் உலகைக் கடந்து நின்று உணர்வுச் சுடர் ஒளியாய் (ஞானசூரியனாய்) விளங்கும் முழுமுதற் கடவுள் அவனே என்பதை உணர்த்தும் வகையில்,

"சிவனோடு ஒக்குந் தெய்வம் தேடினும் இல்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரையானே"

என்றும்

"அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவது ஒன்றில்லை
அவனன்றி ஊர்புகுமாறு அறியேனே''

என்றும் பாடியுள்ளார்.

திருமால் வராக உரு எடுத்துச் சிவலிங்கத்தின் அடியைக் காண முற்பட்டு, முடியாமல் தனது பாவம் தீர வேண்டித் திருவண்ணாமலையில் சிவனை வழிப்பட்டார். இதனை மாணிக்கவாசகர்,

திருமாலும், பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை என்பார்.

ஆரியர்களின் கதைகளிலும், புராணங்களிலும், வரும் ராமனும், கிருஷ்ணனும் பூசித்தது சிவ பெருமானையே என்பது உண்மை. திருமாலின் அவதாரமாக இவர்கள் சித்தரிக்கப்பட்டவர்கள். ராமன் தனக்குத் துன்பம் ஏற்பட்ட போதெல்லாம் சிவனது திருவருளை வேண்டிப் பூஜை செய்து அனைத்து நன்மைகளும் பெற்றான்.

கிருஷ்ணன் பல பெண்களைக் கொண்டிருந்தாலும் குழந்தை இல்லாதவனாக இருந்தான். பின்பு தனக்குக் குழந்தை வேண்டிச் சிவ பூஜை செய்யச் சிவனது அருள் பெற்றுக் குழந்தை இன்பம் பெற்றான். இவை சிவனே உயர்வற உயர்ந்தவன் என்பதை எடுத்தியம்புகிறது.

நாவலர் சோமசுந்தர பாரதியார் தமது தமிழும் தமிழரும் என்ற நூலில், சிவன் என்பது நல்ல தமிழ்ச் சொல், செவ்வை, செவ்வீது என்று வழங்கும் எல்லாம் தமிழ்ச் சொற்களாவது வெளிப்படை. ஆரியரின் ஆதி வேதங்களில் உருத்திரனையன்றி, சிவன் என்னும் பெயரே கேட்கப்படாமையும் ஈண்டு உற்று உணரத்தக்கது. அவர் தம் உருத்திரன், அழிக்கும் ஒரே தொழிலுடைய ஒரு தெய்வம் தமிழரின் சிவன் எல்லாம் வல்ல

இறைவனாவான். ஒன்றே கடவுள், ஒருமையே அவன் அறம் என்பது பழந்தமிழர் கொண்ட கொள்கைகளாம் என்பதால் சிவனே உயர்வற உயர்ந்தவன் எனலாம். இதனைத் திருமூலரும்,

ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்கிறார்.

எனவே, சைவத்தின் மேற்சமயம் வேறிலை அதிற்சார்சிவமாந் தெய்வத்தின்மேற் தெய்வமில்லை

என்பதே பெரியோர் கண்ட உண்மையாகும்.

நாடும் நகரமும் நற்றிருக்கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமானென்று
பாடுமின் பாடிப்பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே.

- திருமூலர்

2. தரணி தலைக்க தமிழ் புத்தாண்டே வருக

பொங்கலோ பொங்கல்,
பால்ப்பானை பொங்கல்,
பட்டி பெருக! பார்த்த கண் வெடிக்க,
நோயும் பிணியும் தெருவோடுபோக
பொங்கலோ பொங்கல்!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தனிப் பெருமையும் புகழும் கொண்டு விளங்கிய கரிகாலன், கரை கட்டப்பட்ட காவிரி முழுவதையும் கண்ணால் காண விரும்பினான். தன்னுடைய பரிவாரங்கள் புடைசூழ, பட்டத்து யானையின் மீது ஏறிப் புறப்பட்டான். அது தை முதல் நாள் என்பதால் காவிரிக் கரைகளில் அமைந்திருந்த ஊர்களில் எல்லாம் வாழை கமுகு மரங்களும் மாவிழைத் தோரணங்களும் புத்தாண்டை வரவேற்கும் வகையில் அலங்கரிக்கப்பட்டு இருந்தன.

காவிரியின் அழகினைப் பார்த்துக்கொண்டே வந்தான். காவிரிக் கரைகளில் குடியிருந்த மக்கள் தங்கள் வீடுகளில் தங்களுக்கு உதவியாக இருக்கும் ஆடு மாடு போன்ற கால்நடைகளை காவிரியில் நீராட்டி திருநீறு சந்தனம் பூசி (அப்போது குங்குமம் வழக்கத்தில் இல்லை), அழைத்துச் செல்வதையும் வீட்டு முற்றத்தில் பெண்களும், குழந்தைகளும் கதிரவனுக்கு நன்றி செலுத்தும் வகையில் பொங்கலிட்டு மகிழ்ச்சியுடன் உற்றார் உறவினர்களுடன் ஆடிப்பாடி விளையாடுவதையும் கண்ணுற்றான். அவ்வாறு அவன் பார்த்துக் கொண்டு வந்த போது சோழ நாட்டு மக்களின் அன்பைக் காணவும் முடிந்தது.

அவன் செல்லும் பொழுது, சோழ நாட்டு மக்கள் அனைவரும் அவனைப் பேரன்புடன் வரவேற்றனர். அந்தந்த ஊர் மக்கள் தமது

வயல்களில் நெல், வாழை, கரும்பு, மஞ்சள் போன்ற பயிர்கள் விளைந்து பெருகப் போகும் வளப்பதை நினைத்து மகிழ்ச்சியும் ஊக்கமும் கொண்டார்கள். தன் நாட்டு மக்களின் மகிழ்ச்சியைக் கண்டு களித்த கரிகாலன் திருவானைக்கா முதலிய தலங்களுக்குச் சென்று இறைவன் திருவருளை நினைத்து மகிழ்ந்த வண்ணம் சென்றான் என்கிறது வரலாறு.

ஞாயிறு போற்றதும், ஞாயிறு போற்றதும் என்கிறார் இளங்கோவடிகள். தமிழர்களின் இறை வழிபாடு ஞாயிறு வழிபாடு என்பதற்கு இது சான்றாக உள்ளது. சிந்துச் சமவெளியிலும் தமிழர்கள் வாழ்ந்த காலத்தில் ஞாயிறு வழிபாடு இருந்தது. அதன் அடையாளமாக தனி மனிதனுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் சிவலிங்கங்களை கடவுளின் அடையாளமாக அமைத்து வழிபட்டனர் ஏன்பது அங்கு கண்டெடுக்கப்பட்ட புதை பொருள்களிலிருந்து அறிய முடிகிறது. அங்கு வாழ்ந்த தமிழ்மக்கள் தற்போது நடைபெறும் ஏறுதழுவுதல் (ஜல்லிகட்டு) போன்ற விளையாட்டுக்களையும் மேற்கொண்டனர் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பண்டைத் தமிழர்கள் வாழ்ந்த பகுதி அதாவது லெமூரியா கண்டம் என்பது தற்போதுள்ள ஆப்பிரிக்காவிற்கும், ஆஸ்திரேலி யாவிற்கும் இடைப்பட்ட பகுதி என அறிஞர் கூறுவர். அப்பகுதியில் இருந்த பெரும்பாலான நாடுகள் கடல்கோளால் அழிக்கப்பட்டு விட்டன. தெற்காசியாவிலிருந்து 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழர்கள் ஆஸ்திரேலியாவில் குடிபெயர்ந்து சென்றதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். தற்போது இவர்கள் பேசும் மொழி இவர்களின் நிறம், கலை, பண்பாடு, இணஉறவுமுறை மற்றும் இவர்களின் எறி ஆயுதமான வளரி ஆகியவை தமிழரோடு ஒப்புமை உடையன என்கிறார் தமிழ் ஆய்வாளர் அருணாச்சலம். அங்கு அவர்கள் கதிரவனை சிவப்பன் (சிவப்பன் மறுவி சிவன் ஆனது) (Red God) என்று அழைக்கின்றனர். எனவே, பண்டைக் காலம் தொட்டே கதிரவன் மட்டுமே தமிழர்களால் கடவுளாக வழிபடப்பட்டு வந்துள்ளது என்பது தெரிகிறது. இது கருதியே

திருவள்ளுவர் ''பிறப்பென்னும் பேதைமை நீங்க சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு'' என்கிறார். செம்பொருள் என்பது செங்கதிர்களை உடைய செம்மையான பொருள் என்பதாகும். அதுமட்டுமின்றி 'தனக்குவமை இல்லாதான்' என்பதால் கதிரவனுக்கு இணையாக யார் கடவுளாக முடியும்? என்பது வள்ளுவரின் கருத்து.

ஆரியர்களின் மற்றும் களப்பிரர்களின் வருகைக்குப் பின் தமிழர்களின் மரபுகளும் விழாக்களும் மற்றும் அவர்களது சிந்தனைகளும் மறைக்கப்பட்டன: மழுங்கடிக்கப்பட்டன. அவற்றை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் 1912-ம் ஆண்டு தமிழ் அறிஞர்கள் கூடி திருவள்ளுவர் ஆண்டை நடைமுறைப்படுத்த முயற்சித்தனர். ஆயினும் முடியவில்லை. ஆனால் தற்போது தமிழக அரசின் முயற்சியால் மீண்டும் தை மாதத்தை தமிழர்களின் ஆண்டின் முதல் மாதமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதை நடைமுறைப்படுத்தும் வகையில் இந்த ஆண்டு (2009) சில நாள் காட்டிகளில் தமிழ் மாதங்களுக்கு பண்டைய பெயர்களே சூட்டப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

தற்போது 12 மாதங்களுக்குரிய சித்திரை வைகாசி என்ற 12 மாதப் பெயர்களை மாற்றி விட்டு பழைய தமிழ் மாதப் பெயர்களான சுறா (தை) கலசம், கெண்டை, ஆடு, ஏறு, ஆடவை, அலவன், அரிமன், கன்னி, துாக்கு, நளி, வில் போன்ற தமிழ்ச் சொற்களை நாட்காட்டியில் பதிவு செய்யலாம். பழைய மாதப் பெயர்களை அருகில் அடைப்புக் குறிக்குள் விடலாம். பள்ளிக்குழந்தைகள் படிக்கும் வகையில் பாடப் புத்தகங்களிலும் அறிமுகப்படுத்தலாம். பழைய தமிழ் எழுத்துக்களை மாற்றிவிட்டு புதிய (பெரியார்) சீர்திருத்த எழுத்துக்களை நடைமுறைக்கு கொண்டு வர முடிந்தது என்றால் இதனையும் ஏன் அவ்வாறு நடைமுறைப்படுத்த முடியாது. ஆங்கிலேயர் காலத்தில் பம்பாய், என்றும், கல்கத்தா என்றும் மாற்றப்பட்டதை தங்களுக்கு இழுக்கு என்று கருதியதால் பாரதிய ஜனதா கட்சி ஆட்சியிலிருந்தபோது கல்கத்தாவை

கொல்கத்தா என்றும், பம்பாயை மும்பை என்றும் பெயர் மாற்றினர் என்றால் நாமும் ஏன் அவ்வாறு மாற்ற முடியாது?

உலக நாகரீகங்களில் சிறந்தவற்றை வரலாற்று முறையில் ஆராய்ந்த டாயின்பி என்ற பேராசிரியர் அத்தகைய நாகரீகங்களில் இந்திய நாகரீகத்தினையும் குறித்து வைத்து ஆராய்ந்துள்ளார். "இந்திய நாகரீகத்தின் சிறந்த கூறாகத் தமிழ் நாகரீகமும், தமிழர்களும் விளங்குகிறார்கள் எனலாம்" என்கிறார்.

தமிழர் நாகரீகம் மீண்டும் தலையெடுத்து விடக்கூடாது என்ற கருத்தில் சிலர் சித்திரையே தமிழ் ஆண்டின் முதல்மாதம் என்று வாதிடுகின்றனர். வழக்குகள் தொடுக்கின்றனர். இதற்கு பதில் அளிக்கும் வகையில் முதல்வர் கலைஞர் கருணாநிதி தை முதல் நாள் தான் இனி தமிழர் ஆண்டின் முதல் நாள், இதை சில புலவர்கள் எதிர்க்கின்றனர். நக்கீரன் காலத்தில் குயக் கொண்டான் என்ற புலவர் இருந்தார். ஆரியம் நன்று தமிழ் தீது என்று உரைத்த அவர் நக்கீரன் தந்த சாபத்தால் உயிரிழந்தார். மற்ற புலவர்கள் வேண்டியதன் பேரில், தமிழின் பெயரால் வெண்பா பாடி, அவரை மீண்டும் உயிர் பிழைக்கச் செய்தார் நக்கீரன். அதுபோல கரிகால குயக் கொண்டார்களுக்கும் நக்கீரன் வந்துசாபம் கொடுப்பார் என்று அப்போது பேசினார் என்பது குறிப்பிட்டத்தக்கது.

ஆரிய மாயை ஒரு பக்கமும் அந்நிய மோகம் மற்றொரு பக்கமுமாக இருந்து தமிழனை தலை நிமிர விடாமல் தடுத்தாலும் தமிழர்கள் தங்கள் கலாச்சாரத்திலிருந்து இன்னும் விலகி விட வில்லை என்பதனைக் குறிப்பதற்கு அடையாளம் தான் தமிழர் திருநாளாம் தைத் திருநாள். தமிழர்கள் வெவ்வேறு சமயத்தை சார்ந்தவர்கள் என்றாலும் வாழை மரம் கட்டாமல் திருமண நிகழ்ச்சி நடத்துவதில்லை. பெண்கள் காலில் மிஞ்சி (மெட்டி) அணியாமலும், கையில் வளையல்கள் அணியாமலும் இருப்பதில்லை. தமிழர் திருநாளன்று தங்கள் வீடுகளில் பொங்கல் வைத்து உண்டு மகிழ்கிறார்கள்.

இந்தியா இன்று தொழிற்சாலைகள் பல பெற்று மேலோங்கி வருகிறது. இருந்தாலும் உழுதுண்ணும் நாடாகவே இது சிறக்க வேண்டுமென நம் வயிறும் வாயும் வேண்டிக் கொள்கின்றன என்பார் தமிழ் அறிஞர் தெ.பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

உழவினை மிகச் சிறந்த தொழிலாகத் தமிழர்கள் கருதி வந்தார்கள். தமிழர்கள் என்று எழுதத் தொடங்கினார்களோ அன்றிலி ருந்து எழுதப்பட்ட எழுத்துக்களில் உழவு என்பது பற்றிய செய்திகளை நமக்கு பல்வேறு சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

தற்காலத்தில் போரில் வெற்றி பெறுவதையும் பிற நாடுகளை ஆக்கிரமிப்பதும் மத அடிப்படையில் பயங்கரவாதத்தைப் பரப்புவதையுமே வெற்றி என்று பேசுகிறார்கள். ஆனால் தமிழன் கண்ட வெற்றி அவ்வகையான போலித்தனமான வெற்றி அல்ல. அவன் கண்டது மனித குல நலனுக்காக செய்யப்படும் உழவுத் தொழிலிலே வெற்றி பெறுவதே உண்மையான வெற்றியாகும். இதனை நம் சங்கப் புலவர்கள் ஏர்க்களத்தைப் போர்க்களமாகவே நினைத்துப் பாடியிருக்கிறார்கள்.

ஏரோர்களவழி என்பது தொல்காப்பியர் கூற்று (புறம் 369ம் பார்க்க) உலகத்தை ஊட்டுபவன் உழவனே ஆதலின் உதவி விருந்து, முதலியன எல்லாம் வேளாண்மை என்றும் வேள்வி என்றும் வழங்கலாயின. ஏர்க்களத்தில் நெல்லைப் போராகக் குவித்தவுடன் பகுத்துண்டு வாழ்கிறான் உழவன். பகுத்துண்டு பல்லுயிரோம்புதல் நூலோர் தொகுத்தவற்றுளெல்லாம் தலை என்ற அறமே களத்து மேட்டில் தான் முகிழ்கின்றது.

அறத்தை அடிப்படையாகக் கொண்டதே தமிழரின் வாழ்க்கை. அறத்தின் அடிப்படையில் கதிரவனைக் கடவுளாக்கி கால்நடைகளுக்கும் விழா நடத்தி உலக உயிர்கள் இன்பமாக வாழ வழிவகுத்த கதிரவனுக்கு நன்றி செலுத்தும் வகையில் தைப் பொங்கல் என்றும், தனக்கு உதவியாக உள்ள ஆடுமாடு போன்ற கால்நடைகளுக்கு ஒரு

நாளாக மாட்டுப் பொங்கல் என்றும், கொண்டாடுகிறார்கள். பொங்கலுக்கு முதல் நாளாகிய போகிப்பண்டிகையை சிலர் போகி என்பவரது பெயரால் கொண்டாடப்படுகிறது என்கின்றனர். உண்மை அதுவல்ல. உழவர்கள் விழாவின்போது "நோயும் பிணியும் தெருவோடு போக" என்பதால் தீயவை அகலட்டும் என்பதுதான் போகி என்ற சொல்லின் பொருள் ஆகும். தமிழர் திருநாளாகக் கொண்டாடத் துவங்கியது தை முதல் நாள். அதையே அவன் வருடத்தின் முதல் நாளாகவும் முதல் மாதமாகவும் கருதியதில் வியப்பொன்றும் இல்லை. அவர்கள் வழியில் நடப்போம் அறம் வளர்ப்போம் இன்பம் பெருகட்டும் உலகம் உய்யட்டும்.

திருச்சிற்றம்பலம்

3. கிரியை நடத்த தமிழில் மந்திரம் இல்லையா?

மனித குலத்தின் முதல் மொழி தமிழ் தமிழை தாய்மொழியாகக் கொண்ட தமிழர்களே முதன் முதலில் இறைவழிபாட்டைக் கடைப்பிடித்தவர்கள். அவர்களே வழிபாட்டிற்கான வேதத்தையும் உருவாக்கியவர்கள். இவர்களைப் பின்பற்றியே பிற்கால மக்கள் வழிபாட்டு முறைகளை வெவ்வேறு முறைகளில் பின்பற்றினார்கள் என்பது ஆய்வாளர்களின் கருத்து அப்படிப்பட்ட மொழியில் கிரியை நடத்த முடியாது என்பது போன்ற அறியாமையை சிலர் திட்டமிட்டுப் பரப்புகிறார்கள்.

'பண்டைத் தமிழ் தாய்' என்னும் நூலில் சங்க வழிபாட்டு முறையை விவரிக்க வந்த முனைவர் மொ.அ. துரை அரங்கசாமி (பக்கம் 32).

சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு என்பதால் அக்கால கோவில்களில் ஆண்டுதோறும் சிறப்பென்னும் விழாவும், நாள்தோறும் முழுக்காட்டு முதலிய பூசனைகளும் நடைபெற்று வந்தமை அறியலாம் என்கிறார்.

நாம் குட முழுக்கு என்று இன்று அறியும் சொல் 'கும்பாபிஷேகம்' என்ற வடமொழிச்சொல்லின் மொழி பெயர்ப்பாகும். கும்பாபிஷேகம் என்று கூறுவதை இளங்கோவடிகள் 'கடவுள் மங்களம் செய்தல்' என்று கூறுகிறார் இதனை,

'வேள்வியும் விழாவும் நாள்தோறும் நிறுத்தி கடவுள் மங்கலம் செய்கென எயினேன்'' என்று வரும் சிலப்பதிகார அடிகளால் அறியலாம்.

வேள்வி என்ற சொல் சங்ககாலத்திலேயே இருந்து வந்திருக்கிறது வேள்வியின்போது ஓதிய மந்திரம் தமிழ்தான் என்பதற்கு இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்?

கிரியைகள் நடத்துவதற்கு தமிழில் மந்திரம் இல்லை என்று சொல்பவர்களுக்கு முனைவர் பா. சுலோச்சனா எழுப்பும் வினாவிற்கு பதில் சொல்லட்டும்.

வடமொழி மந்திரங்களுக்கு ஒலி அதிர்வுகள் அதிகம் என்றால் ஆயிரக்கணக்கான திருக்கோயில்கள் ஒரு நேரப் பூசைகூட இன்றி மூடிக் கிடப்பதேன்? திருக்குட நன்னீராட்டுகளால் வேள்விச் சாலை நெருப்பில் எரிந்து போவது ஏன்? ஆகமம் கற்றோர் எனச் சொல்லிக் கொள்வோர் திறமையுடன் தப்பித்துப்போக வேடிக்கை பார்க்க வந்தவன் வீணாக வெந்துபோவதேன்''

தமிழ் நூல் வரிசையில் மிகப் பழமையானதாகக் கருதப்படுவது தொல்காப்பியம் பண்டைத் தமிழரின் வழிபாட்டின் போது மந்திரங்கள் ஓதப்பட்டன என்பதை "நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழிதானே மந்திரம் என்ப'' என்று தொல்காப்பியமும்,

"மந்திரவிதியின் மாபுளி விழா அது அந்தணர் வேள்வி ஓர்க்கும் ஓர்முகம்'' என்று திருமுருகாற்றுப்படையும் சுட்டிக் காட்டுகின்றன.

"சைவம் தென்னிந்தியாவில் மிகப்பழைய வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட சமயம் ஆகும். அது ஆரியருக்கு முற்பட்ட காலத்திலிருந்தே வழக்கில் இருந்து வருகிறது'' என்று ஜி.யு. போப் குறிப்பிடுகிறார். ஆரியர்களுக்கு முன்பே சைவம் இருந்திருக்கிறது என்றால் தமிழர்கள் திருமணம் போன்ற கிரியைகள் நடத்துவதற்கு மந்திரங்கள் இல்லாமலா இருந்திருப்பார்கள்? கண்ணிருந்தும் குருடராகலாமா?

கிரியை என்பது சடங்குகளைக் குறிக்கும் உலகம் தீமையிலிருந்து விடுதலை பெறுவதற்காகச் சம்பந்தர் சிவபெருமானிடமிருந்து பொற்காசுகள் பெற்று தம் தந்தையரிடம் வந்து வேள்வி செய்யுமாறு கூறினார். (பெரியபுராணம் 28,429) தமிழரை வேள்விக்கு தொடர்பு இல்லாதவர் என்று சொல்லலாமா? கிரியை நடத்துவதற்கு சம்பந்தர் சமஸ்கிருத மொழியையா பயன்படுத்தச் சொல்லியிருப்பார்?

ஆறுமுக நாவலர் இலங்கை நா.சி. கந்தையாபிள்ளை, காசுப்பிள்ளை மற்றும் மறைமலையடிகள் ஆகியோரின் நூல்களைக் கற்றுத் தேர்ந்தால் கிரியைச் செய்ய தமிழில் மந்திரம் இல்லையென சொல்ல மனம் வராது. ஒரு தந்தை தன் பிள்ளைகளுக்காகச் சொத்துக்களைத் தேடி வைத்திருக்கிறார். ஆனால் அவற்றை இன்ன இன்ன காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டுமென்று எழுதிவைக்கவில்லை. தேவையும் இல்லை. தேவையானவற்றிற்கு அவற்றைப் பயன்படுத்தலாம். அதே போன்றுதான் தேவாரம், திருவாசகம் அடங்கிய திருமுறைகளில் உள்ள பாடல்களைத் திருமணம் போன்ற கிரியைகளுக்குப் பயன்படுத்தலாம், பயன்படுத்தக்கூடாது என்று நாம் நினைத்தால் அது நம்முடைய அறிவீனமாகும். “சம்பந்தர் இறைவனை நம் தந்தையாகக் கொண்டார். இறைவன் புகழை புறத்தே பாடுவதும் அகத்தே நினைத்தலும், கிரியை நெறியாக அமைந்தன” என்கிறார் ஆய்வாளர் தேவசேனாதிபதி **(The Philosophy of Saiva Siddhantha - K. Sivaraman Thesis Unpublished 1963, Banaras Hindu University page:650)**.

ஒரு சில ஆதீனகர்த்தர்களின் தவறான பொய்ப் பரப்புரை உயர்ந்த நிலையில் இருந்த தமிழ் இசை தமிழருக்கே உரிய கிரியை மந்திரங்கள் போன்றவைகள் வீழ்ச்சி அடையக்காரணமாக இருந்திருக்கின்றன. இதன் விளைவு சமஸ்கிருதத்தில் மட்டுமே மந்திரம் உள்ளது என்று பொய் சொல்லி கோவில் கருவறைக்குள் நுழைந்துவிட்ட ஆரிய பார்ப்பனர்கள் கைநிறைய காசு சம்பாதிக்கவும், திருமுறை ஓதுவார்கள் வாயில்களில் பிச்சைக்காரர்களைப் போல உட்காரவும் நேர்ந்து விட்டது.

ஞானசம்பந்தரும், அப்பரும் மன்னர்களையும் கூட எதிர்த்து நின்று தமிழையும், சைவத்தையும் காக்கப் போராடினார்கள். வாதாடினார்கள். ஆனால் இன்றோ தமிழ் கோயிலுக்குள் நுழைய முற்பட்டால் சிறைபட்டு நிற்கிறது.

4. யார் இந்த தீட்சிதர்கள்?

மனித இனம் முதலில் தோன்றிய இடம் லெமூரியா கண்டம் என்றும் அவர்கள் பேசிய மொழி தமிழ் என்றும் ஆராய்ச்சியாளர் பலர் கூறுகின்றனர். உலகில் வழங்கும் மொழிகளுக்கெல்லாம் முற்பட்ட தொன்மையுடையது நம் செந்தமிழ். இக்காலத்தில் ஏற்பட்டுள்ள சுனாமி போன்ற கடல்கோள்களால் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு உலகம் சிதறுண்டு பல நிலங்களாக மாறிய போது ஒன்றாக வாழ்ந்த தமிழ் இனம் பல்வேறு இடங்களில் பிரிந்து வாழ நேரிட்டது.

உலகில் வாழும் அனைத்து மக்களும் உறவினர் என்பதனால்தான் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்றும் ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்றும் தமிழனால் சொல்ல முடிந்தது.

பழங்காலம் முதல் தமிழர்கள் தங்கள் தாய் மொழியிலேயே பேசியும் வழிபாடு நடத்தியும் வந்தனர் என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. ஆனால் ஆரியர்களின் தொடர்பால் தமிழ் மொழியில் மாற்றங்கள் ஏற்பட்டன. தமிழ் தனது தனித்தன்மையை இழந்தது.

தமிழகத்தில் குடியேறிய ஆரியர்களில் பல பிரிவினர் இருந்தனர். அவர்களில் ஒரு பிரிவினர்தான் தீட்சிதர்கள். இவர்கள் வருவதற்கு முன்பே தமிழர்களின் சிவ வழிபாட்டுத் தலங்களில் சிறப்பிடம் பெற்று விளங்கியது சிதம்பரம் என்னும் திருத்தலம். சிதம்பரம் கோவிலில் தமிழர்கள் தங்கள் வேதமாகிய திருமுறையை ஓதிப் பல சிறப்பு வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடித்து வந்தனர்.

சோழ மன்னர்களின் மரபு பற்றி விரிவாகக் கூறும் காப்பியங்களிலே ''லெய்டன்'' அன்பில், திருவாலங்காட்டு, செப்புப்

பட்டயங்கள் சிறந்தவை என்பது பட்டய ஆராய்ச்சியாளர்களின் முடிவு மனு மாந்தாதா, சிபி, முதலிய புராண காலத்து அரசர்களையும் சென்னி, கிள்ளி, கரிகாலன், செங்கணான் என்ற சங்க காலத்து அரசர்களையும் சூரிய மரபுச் சோழர்களின் ஆதி முன்னோர்களாக அப்பட்டயங்கள் கூறுகின்றன. இவருள், செங்கணான் என்பவன் பொய்கையாரது களவழிப்பாடல் கொண்ட பேரரசன் என்பது, களவழி நாற்பது முதலில் சங்க நூல்களால் புகழ்பெற்றது. இச்சங்க காலத்து அரசருள்ளே கரிகாலனுக்குப்பின் கோச்செங்கணான் ஆட்சி செய்தவன் என்று கூறுவதில் அம்மூன்று செப்பேடுகளும் ஒத்துள்ளன. ஆனால் செங்கணானையடுத்துக் கோக்கிள்ளி என்பானை லெய்டன் பட்டயம் குறிப்பிட, அச்சோழற்குப்பின் அவன் மகன் ஒருவனைப்பற்றி அன்பிற்பட்டயங் கூறுகின்றது. அதுபற்றி அச்சாசனங்கூறும் வடமொழிச் சுலோகத்தின் மொழி பெயர்ப்பு வருமாறு :

'கரிகாலன் உலகெலாம் ஆட்சிபுரிந்து சென்றபின் கோச்செங்கணான் என்ற வேந்தன் அவர் வழியில் உதித்தனன். அவன் கௌரீசனான சிவபிரானுக்கு எல்லா நாடுகளிலும் ஆலயங்கள் அமைத்தான். அவனுக்கு நல்லடிக்கோன் என்ற அரசர் சூடாமணி பிறந்தான். "நல்லடிக்கோன் என்ற பெயருக்கு நன்மைக்கு மூலமான அரசன் என்பது பொருளாகும். நன்மைக்கு அடியான காலத்தை 'நல்லடிக்காலம்' என்பர் முன்னோர் என்று மு.இராகவ ஐயங்கார் தமது கட்டுரைமணிகள் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

"நன்மைக்கு மூலமான அரசன்" என்று இங்குக் குறிப்பிட்டிருப்பது யாருடைய, நன்மைக்காக? என்பதனைத் தமிழர்கள் சிந்திக்க வேண்டும். கரிகாலன் கோச்செங்கணான் போன்ற மன்னர்களின் காலத்தைவிட நல்லடிக்கோன் காலம் சிறந்தது என்று வடமொழிப் பட்டயம் குறிப்பிடுவதால் இவர் காலத்தில்தான் சிதம்பரம் கோயிலுக்குள் திருமாலுக்குச் சிலை வைக்கப்பட்டு அது திருச்சித்திரக்கூடம் என்று அழைக்கப்பட்டது என்பதை நாம் சிந்திக்க இடமுண்டு. பொதுவாக ஆழ்வார்கள் திருமாலையும், திருமாலைப் புகழ்பவர்களை மட்டுமே

தங்கள் பாடல்களில் புகழ்ந்துள்ளனர். கரிகாலனைப் புகழ்ந்து பாடாத திருமங்கையாழ்வார் "எண் டோளீசற்கணிமாடம் எழுபது செய்து உலக மாண்டவன்" என்று கோச்செங்கணானைப் புகழ்ந்து பாடுகிறார். சிதம்பரம் சிவன் கோவிலில் திருமால் வழிபாட்டிற்கும் வடமொழியை வழிபாட்டு மொழியாக ஆக்கிக் கொடுத்த கோச்செங்கணானைத் திருமங்கையாழ்வார் புகழ்ந்து பாடியிருப்பதும் இயல்புதானே. கோச்செங்கணானின் காலத்திற்குப் பின்பு அவனுடைய மகன் நல்லடிக்கோனைத் தங்களின் பசப்புச் சொற்களால் மயக்கி பல சிவன் கோயில்களில் திருமால் வழிபாட்டிற்குத் தீட்சிதர்கள் வித்திட்டனர். பிற்காலத்தில் நமது வேதமாகிய தமிழ்த் திருமுறைகளை அழிக்கப்போகிறார்கள் என்பதனை உணராத கோச்செங்கணான் தீட்சிதர்களின் பொய்யான சொற்களை நம்பி அவர்களுக்கு வீடு, நிலம் முதலியவற்றைத் தானமாக அளித்து அவர்களையும் பாதுகாத்தான்.

எனவே தமிழர்கள் கோயில்களில் வடமொழி புகுந்தது கோச்செங்கணான் மற்றும் அவனது மகன் நல்லடிக்கோன் காலமாகும் என்பதனை ஆராய்ச்சியாளர்கள் அறிவர்.

சிதம்பரம் கோவிலில் அர்ச்சகர்களாகவும் வடமொழியைப் போற்றித் திருமாலையும் வழிபட உரிமை பெற்ற தீட்சிதர்கள் அம்மன்னன் காலத்தில் அனைத்து உரிமைகளையும் பெற்று வாழ்ந்தனர். இவர்கள் தில்லை மூவாயிரவர் என்றும் தில்லைவாழ் அந்தணர் என்றும் பிற்காலத்தில் போற்றப்பட்டனர். இதனைத் திருமங்கையாழ்வார், "மூவாயிரநான் மறையாளர்" என்றும், "திருச்சித்திரகூடம் தன்னுள் அந்தணர்கள் ஒரு மூவாயிரரேத்தி" என்று குலசேகர ஆழ்வாராலும் புகழ்ந்து பாடப்படுவதாலும் இச்செய்தி அறியப்படும்.

கோயிலுக்குள் திருமுறை ஓதும் பூசகர்களைப் போல் நுழைந்துவிட்ட தீட்சிதர்கள் உண்மையான பூசகர்கள் அல்லர். இவர்களைப் பற்றி மு. இராகவய்யங்கார் இவ்வாறு கூறுகிறார். "தீட்சிதர்கள் மற்றைச்

சிவாலயப் பூசகர்கள் போல, ஆதிசைவ பிராமணர்கள் அல்லர். ஆதிசைவரெல்லாம் ஆகமமுறையில் தெய்வப் பூசை புரிபவர்கள். ஆனால் மலைநாட்டிலும் (கேரளா) தில்லையிலும் உள்ள மூவாயிரவர்களோ வைதீக நெறியில் அவ்வழிபாட்டை நடத்துபவர்கள் இவ்விரு வகையாரும் ஆதிசங்கராச்சாரியாரின் கொள்கையை அனுட்டிக்கும் அத்வைத மஸ்தர்களே, இவருள் மலைநாட்டவரான அந்தணர்கள் இப்போது நம்பூதிரிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்களும் தில்லை வாழந்தணர்களும் "பூர்வசிகை" (முன்குடுமி) வைத்துக் கொள்பவர் என்பதும் அறியத்தக்கது.

நல்லடிக்கோன் தீட்சிதர்களை ஆதரித்துச் சிவாலயங்களில் திருமால் வழிபாட்டை ஊக்குவித்து வந்தான். இக்காலகட்டத்தில் சிவ வழிபாட்டையே தன் உயிர்மூச்சாகக் கொண்டிருந்த கூற்றுவ நாயனார் என்ற சிற்றரசர் மிக்க வீரதீரமுடையவராய் வாழ்ந்து வந்தார். சிவன் கோயில்களில் திருமால் வழிபாட்டை எதிர்த்து மூவேந்தர்களையும் தோற்கடித்துத் தமிழ்நாடு முழுவதையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார். இவரின் வெற்றியையும், தீவிர சிவ பக்தியையும் கண்ட தில்லை வாழ் தீட்சிதர்கள் கூற்றுவ நாயனாருக்கு முடிசூட்ட மறுத்துவிட்டனர். மன்னனின் கோபத்திற்கு ஆளான தீட்சிதர்கள் மலைநாட்டிற்குத் (கேரளா) தப்பி ஓடிவிட்டனர். பின்பு தில்லைக் கோயிலில் திருமுறை ஓதும் சைவர்களைப் பூசனையாளர்களாக அமர்வித்து மீண்டும் தமிழ் வழிபாட்டிற்கு வித்திட்டவர் கூற்றுவ நாயனார் எனக்கருத இடமுண்டு.

கூற்றுவ நாயனாருக்குப் பிறகு சிறந்த சிவபக்தனாக விளங்கியவன் இரண்டாம் குலோத்துங்கன் என்ற சென்னி குலோத்துங்கன் என்பவனாவான். இவனது காலம் கி.பி.1135இலிருந்து 1146 என்பர் வரலாற்று அறிஞர்கள். தில்லைக் கோயிலில் திருச்சிற்றம்பலத்திற்கு அருகில் திருமால் வழிபாட்டிற்காக அமைக்கப்பட்ட திருச்சித்திரக் கூடத்தை அழித்துத் திருமால் சிலையைக் கடலில் வீசிய வீரனாவான் இவன். இதனை இவனது அவைக்களப் புலவராக விளங்கிய கூத்தர்.

*"பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பனைத்தும்
முன்னைக் கடலகழின் முழ்குவித்த-சென்னி திருமகன்"*

என்று பாடியதால் தெரிந்து கொள்ளலாம். சேக்கிழாரால் பெரியபுராணத்தில் சிறப்பிக்கப்பட்டவன் இச்சோழ வேந்தனே திருநீற்றுச் சோழன் என்றும் அனபாயன் என்றும் இவன் போற்றிப் புகழப்பட்டான். இவனுடைய காலத்தில் சிதம்பரம் கோயில் புதுப்பிக்கப்பட்டு அங்குத் தொடர்ந்து தமிழ்த் திருமுறை நெறியில் வழிபாடு நடத்துவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன என்பர் வரலாற்று ஆசிரியர்கள்.

சென்னிக்குலோத்துங்கன் ஆட்சிக்காலத்திலிருந்து தொடர்ந்து சுமார் 412 ஆண்டுகள் தில்லைக் கோயிலில் தமிழ்த் திருமுறை வழிபாடு தொடர்ந்து நடந்து வந்தது. திருமால் வழிபாடும் இல்லாமல் இருந்தது. ஆனால் காலப்போக்கில் தமிழகத்தில் சோழர்களின் ஆட்சி முடிந்து பார்ப்பணர்களின் அடிவருடிகளாக விளங்கிய விசயநகர மன்னர்களின் ஆட்சி மேலோங்கியது. இயற்கையாகவே விசயநகர மன்னர்கள் ஆரிய ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டு அவர்கள் காட்டும் வழியில் நின்றவர்கள் சமயத்தை எதிர்பார்த்திருந்த ஆரியர்கள் விசயநகர மன்னரான அச்சுததேவ மகாராயர் உதவியுடன் மீண்டும் தில்லைக் கோயிலில் கி.பி.1539ஆம் ஆண்டு மே மாதம் 3ஆம் தேதி திருமாலுக்குக் கோவிந்தராசப் பெருமாள் என்ற பெயரில் சிலை அமைத்து வழிபடத் தொடங்கினர். அப்பொழுது சிவாலயத்தில் இருந்த தமிழ் திருமுறை ஓதுவா மூர்த்திகள் கோயிலிலிருந்து வெளியேற்றப்பட்டு அங்கு வைதீக முறையை மீண்டும் புகுத்திப் பூசனைகள் செய்தனர் என்பது வரலாற்று உண்மை.

இவ்வாறு குறுக்குவழியில் நமது கோயில்களுக்குள் நுழைந்து விட்ட பிராமணர்கள் ஆகமம் என்ற பூச்சாண்டி வார்த்தையைக் காட்டி சிவபக்தர்களான நந்தனார், வள்ளலார் போன்றவர்களை தில்லைக் கோயிலுக்குள் நுழைய அனுமதி மறுத்தனர். தற்போது

ஆறுமுகம் என்ற சிவனடியார் திருச்சிற்றம்பலத்தில் நமது வேதம் தேவாரம், திருவாசகம் பாட முயன்றபோது அவரின் கையை ஒடித்து வெளியே அனுப்பி விட்டனர்.

ஆகமம் என்றால் பூசைமுறை அல்லது வழிபாட்டு முறை என்பது பொருள். தமிழர்கள் கட்டிய கோயில்களில் பிராமணர்கள் தங்கள் முன்னோர்களின் பெயரில் கடவுள் சிலையை வைத்தனர். அங்கு வைதீக பூசனை முறைகளைப் புகுத்தியும் தமிழ்த் திருமுறைகளை ஒதுக்கியும் ஏதும் அறியாத தமிழர்களை அவர்கள் கூறும்படி வணங்கச் செய்தும் வந்தனர். தவிரத் தங்களை வளப்படுத்திக் கொள்வதற்காகவும் பிராமணர்கள் ஆகமம் என்ற பூச்சாண்டிச் சொல்லை அடிக்கடி பயன்படுத்துகிறார்கள். இதனைத் தமிழர்கள் சிந்திக்க வேண்டும்.

தமிழ்நாட்டை ஒரு தமிழர் ஆட்சி செய்தபோதும் நமது கோயிலுக்குள் நமது வேதத்தை ஓத முடியாத நிலை உள்ளது. காரணம் சட்டச் சிக்கல் என்கிறார்கள் அரசியல்வாதிகள். அவர்களுக்கு ஒன்று கூறுவேன்.

பல நூற்றாண்டுக் காலமாகத் தொடர்ந்து வழிவழியாக நமது நாட்டை ஆண்டு வந்த மன்னர்களை வீட்டிற்கு அனுப்ப சட்டம் இடம் கொடுக்கிறது. தமிழகத்தில் கணக்குப் பிள்ளை மற்றும் நாட்டாண்மையாகப் பதவி வகித்து வந்தவர்களின் பதவியை முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவசரச்சட்டத்தின் மூலம் ஒரே நாள் இரவில் பறித்துக் கொண்டார் என்பதனை நாடே அறியும். பதவியை பறிகொடுத்த ஆயிரக்கணக்கான பேர் நீதிமன்றம் சென்றும் பயனில்லை. அப்படியிருக்கத் தில்லைக் கோயில் தீட்சிதர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்பதற்கும் சிதம்பரம் திருச்சிற்றம்பலத்தில் தமிழ் நெறியில் திருமுறை ஓதமுடியாது என்பதற்கும் காரணமாக இருப்பது சட்டச் சிக்கலா? அல்லது அரசியல்வாதிகளின் சூழ்ச்சியா? என்பதைக் காலம்தான் முடிவு

செய்ய வேண்டும். தமிழர் தலைவர் என்று மக்களால் போற்றப்படும் கலைஞர் ஆட்சியில் தில்லைச் சிற்றம்பலத்தில் நமது வேதம் திருமுறை ஓத முடியாது என்றால் இனி யார் காலத்தில் இது முடியும்?

5. சொக்கர் அருளும் மதுரைப் புகழும்

தெய்வம் மணக்கும் செந்தமிழ் நாடு கோயில்களுக்கு பெயர் பெற்றது. மேலை நாட்டவர் உள்ளங்களைக் கவர்ந்து வியப்படையச் செய்யும் பல கலைக்கருவூலங்களை கொண்டவை. இத்திருக் கோயில்களில் எல்லாம் முதன்மை பெற்றுத் திகழ்வது மதுரை மீனாட்சியம்மன் கோயில் இல்லை....... இல்லை........ சொக்கநாதர் திருக்கோயில். ஆம்... தனது அருட்பார்வையால் பாண்டிய மன்னனையும் மக்களையும் இன்பக்கடலில் சொக்கவைத்ததால் சிவபெருமானை சொக்கலிங்கப்பெருமான் என்று இக்கோயிலைக் கட்டுவித்த குலசேகரபாண்டியன் அழைத்ததாக வரலாறு கூறுகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தற்போது மதுரை என்று அழைக்கப்படும் இடம் கடம்ப மரங்கள் சூழ்ந்த ஒரு காடாக இருந்தது. அதனால் கடம்ப வனம் என்றும், தென்மதுரையும் கபாடபுரமும் கடல்கோளினால் அழிந்த பிறகு பழந்தமிழ்ப் புலவர்கள் இங்கு கூடி தமிழை ஆய்வு செய்ததால் கூடல்மாநகர் என்றும் அழைக்கலாயிற்று என்று ஆய்வாளர்கள் கூறுவர். கடல் கோளால் அழிவுற்ற தென்மதுரையை நினைவுபடுத்தும் வகையிலேயே மதுரை என்று பாண்டிய மன்னர்கள் பெயர் சூட்டினர் என்றும் கருத இடமுண்டு.

சேர, சோழ பாண்டிய நாடுகளில் பாண்டிய நாடே மிகப்பழமையானது என்பதை மாணிக்கவாசகர் 'பாண்டி நாடே பழம்பதி' என்று குறிப்பிடுகிறார். கி.மு.320ல் சந்திரகுப்த மௌரியர் அரசவைக்கு வருகை தந்த கிரேக்க தூதன் மெகஸ்தனீஸ் தனது இண்டிகா என்னும் நூலில் பாண்டிய நாட்டின் பெருமைகளைக் குறிப்பிட்டுள்ளார். இவர் மதுரையைப் பற்றி கூறும் பொழுது மதுரை நகரம் 'பாண்டே' என்னும் பெண் அரசியால் ஆளப்பட்டது: 365 ஊர்களின் வருமானம் அவ்வரசிக்கு உட்பட்டது. ஒவ்வொரு ஊரும் ஒவ்வொரு குறிப்பிட்ட நாளில் அரசிக்கு கப்பம் செலுத்த வேண்டும். அவ்வரசிக்கு 500

யானைகள், 4 ஆயிரம் குதிரை வீரர்கள், 13 ஆயிரம் போர் வீரரர்கள் கொண்ட பெரும்படை இருந்தது என்கிறார். தவிர கிரேக்க ரோமானிய எகிப்து மற்றும் பாபிலோன் போன்ற நாடுகளோடு பண்டைய பாண்டிய மன்னர்கள் வணிக தொடர்பு வைத்திருந்தனர் என்கிறது வரலாறு.

சிறப்புமிக்க இத்திருகோயில் அமைவதற்கு சில வரலாற்று மற்றும் புராணச் செய்திகள் உள்ளன. லெமுரியாக் கண்டத்தில் ஆட்சி செய்து வந்த பாண்டிய மன்னர்கள் கடல்கோளால் தென்மதுரையையும், கபாடபுரத்தையும் இழந்த பிறகு தங்களது தலைநகரை மாற்றியமைக்க முயற்சித்து கடல் எல்லையிலிருந்து சற்று வடக்கு நோக்கி தற்போதைய மதுரைக்கு கிழக்கில் வந்து தங்கினர்.

ஒருநாள் தனஞ்சயன் என்ற வணிகன் தன் தொழில் காரணமாக காட்டின் வழியே சென்ற போது அங்கு ஒரு சிவலிங்கம் இருப்பதைக் கண்டு பூசைகள் செய்து வணங்கி வேண்டிய வரம் பெற்றான். இங்கு வாழ்ந்த மக்கள் தங்கள் திருமண நிகழ்ச்சிகளை இக்கோயிலில் நடத்தினால் வாழ்வு செழிப்படையும் என்பதையும் வாழ்வில் கணவன், மனைவியிடையே மனமுறிவு ஏற்படுவதில்லை என்பதையும் உணர்ந்தனர். மணவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்த குலசேகர பாண்டிய மன்னரிடம் தனஞ்சயன் இச்செய்தியைச் சொல்ல மன்னரும் மக்களும் சேர்ந்து கடம்ப வனத்தை அழித்து அங்கு சிவபெருமானுக்கு ஒரு கோயில் கட்டி புதிய நகரை உருவாக்கினர் என்பது வரலாறு. இந்திரன் தனது தோசத்தைப் போக்கிக் கொள்ள சிவபெருமானை பூசிக்க இப்பகுதிக்கு வந்த போது அங்கு இந்த சிவ லிங்கத்தை வழிபட்டு தனது தோசம் நீங்கி சிறப்புற்றான் என்பது புராணச் செய்தி.

குலசேகர பாண்டியன் மற்றும் அவனுக்கு பின் ஆட்சி செய்த பாண்டிய மன்னர்கள் சிவபெருமானுக்கு கோயில் கட்டியபோது அறம் வளர்த்த சங்கப் புலவர்களையும், அவர்கள் படைத்த இலக்கியங்களையும் தமிழர்களுக்கும் உலக மக்களுக்கும் அறிமுகப்படுத்தும் வகையில்

அவர்களுக்கும் அக்கோயிலுக்குள்ளேயே கோயில் ஒன்றையும் கட்டினான். (அப்போது மீனாட்சியம்மனுக்கு கோயில் எழுப்பப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது). இது பற்றிய செய்தியை மீனாட்சி சுந்தரேஸ்வர் கோயில் உள்ளே அறிவிப்பு பலகை ஒன்றில் இவ்வாறு எழுதி வைக்கப்பட்டுள்ளது. அது வருமாறு.

"பாண்டிய அரசர்கள் சங்கப் புலவர்களை சிறப்பிக்கும் வகையில் இத்திருக்கோயிலை அமைத்தனர். கடைச்சங்கப் புலவர் 49 பேருக்கும் இங்கு கோயில் இருக்கிறது. அவ்வையார், ஒக்கூர் மாசாத்தியார், வெண்ணிக்குயத்தியார், காவற்பெண்டிர், ஆகிய பெண்பாற் புலவர்களும் இந்த 49ல் அடங்குவர். திருவாலவுடையார் பாணபத்திரர் பொருட்டுச் சேரமான் பெருமான் நாயனாருக்கு எழுதிய திருமுகப் பிரசுரம் இங்கு கல்வெட்டாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. சிவபெருமானே தமிழ்ச் சங்கத்தலைவராக புலவரோடு புலவராக சேர்ந்து அமர்ந்து தமிழ் ஆராய்ந்ததைப் புலப்படுத்துகிறது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை கடைச்சங்கத்தில் வீற்றிருந்த புலவர்கள் படைத்தவை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதிணென் கீழ்க்கணக்கு என்ற 36 நூல்கள் ஆகும். தருமி என்ற இளைஞர் ஆலவாய்ப்பெருமானை வழிபட்டுத் தன் வறுமை தீரும்படி இறைவன் பால் கொங்குதேர் வாழ்க்கை எனத் தொடங்கும் பாட்டினைப்பாடி பாட்டில் குறை கூறிய நக்கீரரைக் கண்டிக்கும் பொருட்டு சிவபெருமான் ஒரு புலவர் வடிவாக வந்து அருள்பாலித்துள்ளார்''. இது கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இறையனார் என்பவரால் பாடப்பெற்றது என்று அக்குறிப்பில் உள்ளது.

பாண்டிய நாட்டின் தலைநகரமாகத் திகழ்ந்த மதுரையில் நிறுவப்பட்டிருந்த கடைச்சங்கம் கி.பி.2ம் நூற்றாண்டில் முடிவுற்றது. அத்தோடு பாண்டிய மன்னர்களின் ஆட்சியும் முடிவுக்கு வந்தது. கி.பி. 3 முதல் 6ம் நூற்றாண்டு வரை களப்பிரர்கள் ஆட்சி நடைபெற்றது. அதன் பிறகு மீண்டும் பாண்டியர்கள் மதுரையைத் தலைநகராக்கிக்

கொண்டு ஆட்சி செய்தனர். சுல்தானியர்களின் ஆட்சிக் காலத்தில் மதுரை பொழிவிழந்தது. பின்பு நாயக்க மன்னர்கள் பாண்டியர்களை வெற்றி கொண்டனர். நாயக்க மரபிலே வந்த விசுவநாத நாயக்கர் நாயக்க வம்சத்தைசேர்ந்த மீனாட்சி என்ற அரசிக்கு கோயிலும் கோபுரங்களும் கட்டி வழிபாடு நடத்தினார் என்கிறது வரலாறு.

நீண்ட நாட்களாகப் பூட்டப்பட்டு இருட்டறையில் கிடந்த புலவர் கோயிலை மீட்டு பக்தர்களின் பார்வைக்கு கொண்டு வந்தவர் அப்போதைய மதுரை பல்கலைக்கழக துணை வேந்தர் மு. வரதராசனார் என்பதை அங்கிருந்த கல்வெட்டிலிருந்து அறிய முடிகிறது. மு. வரதராசனாரின் தலைமையில் அப்போதைய முதல்வர் கருணாநிதி 14.09.1974-ல் இப்புலவர் கோயிலை திறந்து வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய கோயில் தக்கார் கருமுத்து கண்ணன் பதவி யேற்றபோது பல ஆண்டுகளாக கோயிலில் கிளிக்கூட்டிற்கு அருகில் உள்ள காசி விசுவாநாதர் கோயில் கவனிக்கப்படாமல் பூட்டிக்கிடந்தது. அதேபோல் சுவாமி சன்னதி அமைந்துள்ள இரண்டாம் பிரகாரத்தின் வடமேற்கில் பாண்டிய மன்னர்களால் அமைக்கப்பட்ட சங்கப் புலவர் கோயிலும் கவனிப்பாரற்று இருந்தது. தக்கார் பொறுப்பிற்கு கருமுத்து கண்ணன் வந்த பிறகு காசி விசுவநாதர் கோயில் திறக்கப்பட்டு பக்தர்கள் காசி விசுவநாதரை வழிபட அனுமதிக்கப்பட்டது. மூடிக்கிடந்த புலவர் கோயிலில் தினமும் எண்ணெய் விளக்கு ஏற்றவும் அனுமதிக்கப்பட்டது. இச்செய்தி பக்தர்களுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது.

சங்கப் புலவர் கோயிலை பாண்டிய மன்னர்கள் வருங்காலத் தமிழர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திற் காகத்தான் கட்டினார்கள். (நீண்ட காலமாக சங்க புலவர்கள் கோயில் மக்களின் பார்வைக்கு திறந்துவிடபடாமலே இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது).

சங்கப்புலவர்களின் கொள்கை அன்பும் அறனும் ஆகும் அக்கொள்கைகளின் அடிப்படையில் அவர்களால் படைக்கப்பட்ட கடவுள் கொள்கை மற்றும் சங்க இலக்கியங்கள் தமிழக மக்களுக்கு மட்டுமல்லாமல் உலக மக்களுக்கு மட்டுமல்லாமல் உலக மக்களுக்கே வழிகாட்டியாக உள்ளது.

தமிழ்நாடு இப்பொழுது புத்துயிர் பெற்று வருகின்றது. இயல், இசை நாடகம் என்னும் முத்தமிழும் பொதுமக்களின் ஆதரவைப் பெற்று முன்னேறுகின்றன. இவ்வாண்டு (2009) தை முதல் நாளை தமிழர்களின் ஆண்டின் துவக்க மாதமாக தமிழக அரசு அறிவித்து கொண்டாடி வருவதால் தமிழர்களிடையே பண்டைய தமிழ் உணர்வு மேலோங்கி வருகிறது.

பண்டைய தமிழர்கள் பல சிறு தெய்வ வழிபாட்டை உடையவர் களாயினும் சிவனையே முழுமுதற்கடவுளாக வழிபட்டனர். தாங்கள் வணங்கிய கடவுளுக்கு மனித உருவம் கொடுக்காமல் சிவலிங்கத்தை அமைத்தனர். சிவலிங்கத்தின் அடிப்பகுதியை பெண்ணாகவும், மேற்பகுதியை ஆணாகவும் இரண்டையும் இணைத்துப் பார்க்கும் போது அலியாகவும் கருதி இறைவனால் படைக்கப்பட்ட எல்லா உயிர்களிலும் இந்த மூன்றில் ஆண், பெண், அலி என்ற பிரிவு மட்டுமே உண்டு என்று நம்பினர். "ஆணாகிப் பெண்ணாகி அலியாகி என்பது" ஞான சம்பந்த பெருமானின் வாக்கு. இதனையே அவர்களது கடவுள் தத்துவமாகவும் கொள்ளலாம். அதனாலேயே அவர்கள் சாதிய சமய பேதமற்ற சமுதாயமாக வாழ்ந்து வந்தனர் என்பதை சங்க இலக்கியங்களிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. அது கருதியே பாண்டிய மன்னன் தனக்கு அருள்பாலித்த சிவபெருமானுக்கு சொக்கலிங்கர் எனப் பெயர் சூட்டி புலவர்கள் கூடிய கூடல் மாநகரில் கோவில் அமைத்தான். சங்கத்தமிழர்களின் அடையாளமாக விளங்கும் இத்திருக்கோயிலை சொக்கநாதர் கோயில் என்று அழைப்பதே சாலப்பொருந்தும்.

ஒரு இன மக்களின் இலக்கிய படைப்புகளும் நினைவுச் சின்னங்களும் மறைக்கப்படுமானால் அம்மக்களின் நாகரீக நிலையினை இளைய தலைமுறை அறிந்து கொள்ள இயலாமல் போய்விடும்.

“ரோம் போன்ற பழைய பேரரசுகள் தாங்கள் வென்ற நாடுகளின் மொழிப்பற்றிக் கவலைப்படாததால் பெயரிழந்து போயின. அவர்களது புகழ்ப்போதை பழைய நாடுகளை மட்டுமல்ல பழங்கால ஆவணங்களையும் மறைத்து விட்டது. ரோம ராணுவ வீரர்கள் பண்டைக்கால ஸ்பானிய இலக்கியங்கள் கார்த்தேசியர், பினிசியர் ஆகியோரின் நாகரீக சின்னங்கள் பிரிட்டனிலும், பிரான்ஸிலும் வாழ்ந்த பண்டைய துருத பூசாரிகளின் மதிப்பிற்குரிய நிறுவனங்கள் ஆகியவற்றை அழித்தனர். எகிப்தியரின் விளங்காத படவெழுத்துச் சான்றுகளை மட்டும் விட்டுவிட்டு அவர்களது இலக்கியத்தை இல்லாததாக்கினர். இது சாவியில்லாத பூட்டை விட்டுச்சென்றது போன்றது” என்கிறார் கீழ்த்திசை மொழியியல் ஆய்வாளர் ஜான் லெய்டன்.

“மேற்கத்தியர்களால் கீழை நாட்டு ஏதென்ஸ்” என்று போற்றப் படும் மதுரை நகருக்கு அழகு சேர்க்கும் சொக்கநாதர் கோயில் பாண்டிய மன்னர்களுக்குமட்டுமல்லாது சங்ககால மக்களின் கலைக்கும் பக்திக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இத்திருக்கோயிலும் சங்கப் புலவர்கள் இயற்றிய இலக்கியங்களும் போற்றிப் பாதுகாக்கப்பட்டு மக்களின் பார்வைக்கு கொண்டு வருவோமானால் தமிழர்களுக்கு மட்டுமல்லாது எதிர்காலத்தில் உலக அமைதிக்கு வழிகாட்டும் கோயிலாக இது அமையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

திருச்சிற்றம்பலம்

6. தமிழர் வழிபாட்டில் அவதாரங்கள் வந்தது எப்படி?

"யுகங்கள் நான்கு கிருத்யுகம் 17 இலட்சத்து 28 ஆயிரம் ஆண்டுகள் இந்த யுகத்தில் பரந்தாமனின் முதல் ஆறு அவதாரங்களான மச்சம் (மீன்), கூர்மம் (ஆமை), வராகம் (பன்றி), நரசிங்கம் (சிங்கமுகம்), மனித உடல் (வாமன்) பரசுராம அவதாரங்கள் நிகழ்ந்தன. ஏழாவதான இராமவதாரம் கிரேதாயுகத்தில் நிகழ்ந்தது. இதற்குரிய ஆண்டுகள் 12 இலட்சத்து 96 ஆயிரம். எட்டாம் அவதாரமான பலராம அவதாரம், ஒன்பதாம் அவதாரமான கிருட்டினாவதாரம் ஆகியவை துவாபரயுகத்தில் நடந்தது. இதற்குரிய ஆண்டுகள் 8 இலட்சத்து 64 ஆயிரம். கலியுகத்தின் ஆண்டுகள் 4 இலட்சத்து 32 ஆயிரம். ஆனால் இப்போது 5 ஆயிரத்து 106 ஆண்டுகளைக் கடந்து சென்று கொண்டிருக்கிறோம்.

இப்போதே கலியின் அட்டகாசம் தாங்கமுடியவில்லை. இன்னும் 4 இலட்சத்து 27 ஆயிரம் ஆண்டுகளைக் கடப்பதற்குள் என்னவெல்லாம் நிகழுமோ என அச்சப்படும் இவ்வேளையில் இப்போதே பத்தாம் அவதாரமான கல்கி அவதாரத்தை எடுத்துப் பரந்தாமன் வந்து விடமாட்டாரா? என உலகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது".

இதுபோன்ற செய்திகளை நாளேடுகளும், ஆன்மீக இதழ்களும் பரப்பி வருவதையும், கோயில்களில் நடக்கும் ஆன்மீக பிரச்சார மேடைகளிலும் நாம் படித்தும் கேட்டும் வருகிறோம். ஆனால் நாம் கடவுள் அவதாரம் பற்றி எப்போதாவது சிந்தித்தது உண்டா? ஆரிய பார்ப்பனர்கள் கூறும் இராமர் பாலம் எவ்வளவு பொய்யோ அவ்வளவு பொய்யானது கடவுளுக்கு அவதாரம் என்பது.

தமிழர்கள் உலகின் முதல் மனிதர்கள் என்று அறிவியலாளர் களும் புவியியலாளர்களும் கருதுகிறார்கள் என்றால் தமிழர்கள்தான்

ஆன்மீக உலகின் முன்னோடிகளாக இருக்க முடியும்? தமிழர்கள் தாங்கள் வாழ்ந்த நிலத்தைக் குறிஞ்சி முல்லை நெய்தல் மருதம் பாலை என ஐந்தாகப் பிரித்து நிலத்திற்கு ஒரு கடவுளாக அதாவது குலதெய்வமாக வழிபட்டாலும் எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவன் உண்டு அவனே முக்கண்ணன் (சிவ பெருமான்) என்று நம்பி வந்தனர். ஆனால் தாங்கள் வழிபடும் கடவுளுக்கு அவதாரம் உண்டு என்பதை அவர்கள் நம்பவில்லை. அப்படி அவர்கள் நம்பியிருந்தால் திருவள்ளுவர், அவ்வை போன்றவர்களை கடவுளாக வழிபட்டிருப்பார்கள். அவர்களுக்கு கோயிலும் கட்டியிருப்பார்கள் அது பற்றிய செய்திகளை சங்க இலக்கியங்களிலும் பதிவு செய்திருப்பார்கள். ஆனால் அப்படி ஏதும் இல்லை.

மேலும் தாங்கள் வழிபட்ட முழுமுதல் கடவுளுக்கு மனித வடிவத்தைக் கொடுக்காமல் லிங்க வடிவத்தைக் கொடுத்து அதை வணங்கி வந்தார்கள். மனிதனைக் கடவுளாக்கினால் அது மனிதர்களுக்குள் சிக்கல்களை ஏற்படுத்திப் பெரும் துன்பத்திற்கு வழிவகுத்துவிடும் என்பது கடல்கோளால் அழிந்து போன இலெமுரியா கண்டத்தில் வாழ்ந்த நமது முன்னோர்களின் முடிவு இதை உறுதிப்படுத்தும் வகையில் திருவள்ளுவர் கடவுளுக்குச் சமமாக யாரையும் ஒப்பிட முடியாது என்று கூறி அந்தக் கடவுளை வணங்காதவர்கள் ஒருபோதும் தங்கள் கவலையை மாற்ற முடியாது என்கிறார். இது பொருள் பொதிந்த குறள்.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந் தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது என்பதாகும்.

இதையே வலியுறுத்தி மாணிக்கவாசகர் கடவுள் ஒருவரே. அவரே பிறப்பு இறப்பு இல்லாத சோதி வடிவிலானவன் என்பதை ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி, என்கிறார். கி.மு. ஆறாம் நூற்றாண்டில் மேற்காசியாவில் வாழ்ந்த சௌராஷ்டிரர் என்ற ஞானியும் கடவுள் ஒருவரே என்றும் அவர் சோதிவடிவமானவர் என்றும்

கூறுகிறார். தற்காலத்தில் வாழ்ந்த வள்ளலாரும் 'அருட்பெரும்சோதி என்று கடவுளைக் குறிப்பிடுகிறார்.

தமிழர்கள் வழிபட்ட சிவன் மனிதனல்ல. அவர்கள் ஆதியில் காலையில் எழுந்தவுடன் சூரியன் சிவப்பாக இருப்பதைக் கண்டனர். அதற்குள் கடவுள் இருப்பதாக உணர்ந்தனர். அதனை 'சிவப்பன்' என்று அழைத்தனர். அது உலகம் முழுவதற்கும் ஒளியை அளிக்கவல்லது என்பதை உணர்ந்து வழிபட்டனர். அதுவே காலப்போக்கில் சிவன் என்று மருவி தமிழர்களால் அழைக்கப்பட்டது. இதனைத் திருவள்ளுவர் 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்றும், மாணிக்கவாசகர் திருவாசகத்தில் 'தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்று பாடுவதிலிருந்தும் அறிந்து கொள்ளலாம். கடவுளுக்குச் சமமாக யாரும் இருக்க முடியாது. கடவுள் ஒருவரே அவரே உயர்ந்தவர் என்ற கொள்கையே தமிழர்களின் கொள்கையாக இருந்தது. இக்கொள்கையே இந்தியா முழுவதும் பரவியிருந்தது என்பதற்கு சிந்து சமவெளியில் கண்டெடுக்கப்பட்ட சிவலிங்கங்கள் சான்றாக உள்ளன.

இறைவனால் படைக்கப்பட்ட மனிதன் விலங்கு உள்பட அனைத்து உயிர்களுக்கு மட்டும்தான் அவதாரம் உண்டு என்பதனை அருணகிரி நாதர் வார்த்தைகள் மெய்ப்பிக்கின்றன:

"எழுகடல் மணலை அளவிடின்
எனதிடர் பிறவி அவதாரம்"
என்கிறார்.

ஆனால் ஆரிய பார்ப்பனக் கூட்டத்தாரின் வருகை இந்திய மக்களின் கடவுள் கொள்கையை சிதறடித்து அவதாரம் என்ற பெயரில் கடவுளுக்குப் பல பெயரிட்டுத் தங்கள் வாழ்க்கையை உயர்த்திக் கொண்டு இந்தியர்களை அடிமைப்படுத்துவதற்கும் இந்தியாவின் சில பகுதிகள் வீழ்ச்சியடைவதற்கும் காரணமாக அமைந்து விட்டன. தங்களுக்குச் சமமாக யாரும் இருந்து

விடக்கூடாது. தாங்களே உயர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்பது ஆரிய பிராமணர்களின் கொள்கை. அதைக் கருத்தில் கொண்டே தங்கள் இனத்தின் பெயரில் ‘பிரம்மா’ என்பதனை படைப்புக் கடவுளாக்கி விஷ்ணுவைக் காக்கும் கடவுளாக்கி அவர்களின் அழிப்புக் கடவுளாகிய ருத்திரனை சிவபெருமானுக்கு சூட்டி இந்திய மக்களை ஏமாற்றி வந்துள்ளனர். தமிழர்கள் வழிபட்ட திருமால் வழிபாட்டில் அவதாரம் இருப்பதாக சங்க இலக்கியங்கள் எதிலும் காணப்படவில்லை. ஆனால் உண்மையான திருமால் வழிபாட்டை மறைத்து அதனைத் தங்கள் முன்னோரின் பெயரால் இராமவதாரம் கிருஷ்ணவதாரம் என்று கூறி தமிழர்களை இன்னும் ஏமாற்றி வருகின்றனர்.

7. தமிழர்கள் மீள்வது எப்போது?

புத்தர் வாழ்ந்த காலத்திலிருந்து அசோகர் காலம் வரை புத்தருக்கு சிலைகள் வடிக்கப்படவில்லை. புத்தருக்கு கோவில் கட்டி திருவிழாக்கள் நடத்தப்படவில்லை. அது ஹீனயானம் எனப்பட்டது. ஆனால் கனிசுகர் வாழ்ந்த காலத்தில் புத்த மதத்தின் ஒரு பிரிவான மகாயானம் தோற்றுவிக்கப்பட்டு புத்தருக்கு சிலைகள் வடிக்கப்பட்டு பூசைகள் நடத்தி கோவில் திருவிழாக்கள் நடத்தப்பட்டன.

ஆரியர்கள் வடநாட்டில் தங்களின் முன்னோர்களாகிய பிரம்மா, விசுணு, நாராயணன், ராமன், கிருட்டினன், துர்கை லட்சுமி, சரசுவதி பெயரில் கோவில்கள் கட்டி, சிலைகளை அமைத்து வழிபடத் துவங்கி பல புதிய விழாக்களை புகுத்தி மக்களை மயக்கினர். மக்களும் புத்தமதத்தை விடுத்து ஆரிய பார்ப்பனர்களின் பொய்ப்பிரச்சாரத்தில் மயங்கி அவர்கள் பின்செல்லத் துவங்கினர். இதனைக் கண்ட கனிசுகர் தமது நாடெங்கும் புத்தருக்கு கோவில்கட்டி சிலைகள் வைத்து வழிபடவும் விழாக்கள் நடத்தவும் ஆணையிட்டார். இருப்பினும் மக்கள் நாளடைவில் புத்த சமயத்தை மறந்து பார்ப்பனர்களின் வழிகாட்டலி ல் பின் தொடர்ந்தனர். பார்ப்பன சமயம் புத்துயிர் பெற்றதாலும் பாகவத சமயத்தின் எழுச்சியாலும் புத்த சமயத்தின் புகழ் மங்கத் தொடங்கியது.

பொதுவாக மனிதர்களை கடவுளாக கோவிலில் சிலை வடித்து வணங்கும் வழக்கம் பூர்வீக இந்தியர்களிடம் காணப்படவில்லை. ஆனால் ஆரியர்களின் தவறான கொள்கை இந்திய மன்னர்களையும் அவ்வாறு செய்யத் தூண்டியதில் வியப்பில்லை.

இந்தியாவின் வடபகுதியில் புத்த, சமண சமயங்களை அழித்து பின்பு தங்கள் விழாக்களை சைவ கோவில்களில் புகுத்தி சிவ வழிபாட்டையும் அழித்தனர். இதே கொள்கையை பார்ப்பனர்களின் அடிவருடிகளாக மாறிப் போன பிற்கால சோழ மன்னர்களின் உதவியுடன் தமிழக சைவக் கோயில்களிலும் புகுத்தினர். அந்த வகையில் வந்ததுதான்

விநாயக சதுர்த்தி நவராத்திரி என்று அழைக்கப்படும் சரசுவதி பூசை, துர்க்கை வழிபாடு போன்றவைகள்.

தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட ஆரிய பார்ப்பனர்கள் ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு கடவுள் வழிபாட்டை துர்கை, காளி, சரசுவதி, லட்சுமி என்ற பெயரில் தமிழக சைவ கோவில்களுக்குள் புகுத்திவிட்டனர். இதனைக் கண்ட சேரன் செங்குட்டுவன் தமிழ் இனத்திலும் அன்னையர் வழிபாடு உண்டு என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டும் வகையில் இமயமலை சென்று கல்லெடுத்து கண்ணகிக்கு சிலை வடித்து கோவில் கட்டினான். விழாவிற்கு இலங்கை மன்னன் கயவாகுவை அழைத்து சிறப்பித்தான். நாடெங்கிலும் கண்ணகி வழிபாடு சிறப்புடன் விளங்குவதை கண்டு பொறுக்காத ஆரியப் பார்ப்பனர்கள் காலப்போக்கில் அவற்றை துர்க்கை மற்றும் பகவதி வழிபாடாகவும் மாற்றி விட்டனர்.

பிற்கால தமிழக மன்னர்களின் துணையும் ஆரிய பார்ப்பனர்கள் செய்த இத்தவறான போக்கை கண்டிக்க முடியாத பாமரத் தமிழன் 'ஈசனைப் பெண்ணாக்கி பெண்ணை பெருமாளாக்கிய கதை' என்ற பழமொழியை சொல்லி வைத்தான். அன்று செல்வத்திற்கு ஒரு கடவுள், கல்விக்கு ஒரு கடவுள் என்று சொல்லி நவராத்திரி விழாவை சைவக் கோயில்களில் புகுத்தி அலங்கரிக்கப்பட்ட பொம்மைகளில் ராமன், கிருட்டிணன் சீதையை தமிழர்களுக்கு அறிமுகப்படுத்தி மயங்கச் செய்தனர். இன்று தமிழர்களுக்கு தொடர்பில்லாத கிருட்டிண செயந்தி என்ற பெயரில் தமிழக இளைஞர்களை ஈர்ப்பதற்காக உரியடித் திருவிழாவை தமிழகத்தில் ஆங்காங்கு திட்டமிட்டு அறிமுகப்படுத்தி வருகின்றனர். ஆரியக் கூட்டத்தாரின் பொய்யான விழாக்களில் மயங்கிப்போகும் தமிழர்கள் சிவராத்திரி, பங்குனி உத்திரம், தைப்பூசம், ஆடிப்பெருக்கு, கார்த்திகை தீபம் போன்ற தங்களது முன்னோர் வகுத்த விழாக்களை எதிர்காலத்தில் மறந்தாலும் மறந்து போவார்களோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

'இவ்வுலகில் எத்தனையோ கலைகள் உள்ளன. அவை மற்றவர்களுக்கு இன்பம் அளிக்கும். அவற்றால் மற்றவர்களையும்

இன்புறச் செய்யலாம். அத்தகைய கலைகளில் ஒன்றையாவது நான் கற்கவில்லை. ஆதலால் நாம் இன்பம் அடைய வழியில்லை. கலைஞர்களுடன் சேர்ந்து வாழாததால் 'அறிவற்றவனாகி விட்டேன்' என்ற கருத்தை மையமாக வைத்து திருநாவுக்கரசர் சிவபெருமானிடம் 'கற்றிலேன் கலைகள் ஞானம் கற்றவர் தங்களோடும் உற்றிலேன்'. என்று வருந்தி பாடுகிறார். கலைகள் எதுவாயினும் அளிக்க வல்லவன் சிவபெருமானே என்பது நமது முன்னோர் முடிவாகும். இதனை விடுத்து ஆரியர்கள் தங்கள் முன்னோர்களின் நினைவாக துர்கை, சரசுவதி, காளி, என்ற பெயரில் புகுத்திய வழிபாட்டில் இருந்து தமிழர்கள் மீள்வது எப்போது?

8. தமிழர் விழாக்கள் மறைக்கப் படுவது ஏன்?

ஆன்மீகமானாலும், அரசியலானாலும் வடக்கிலிருந்து வருவதே உண்மை என்று எண்ணி வேதியர்களின் காலைத் தொட்டு வணங்குவதில் மகிழ்ச்சியடைகிறார்கள் விவரமான தமிழர்கள்.

தமிழர்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலத்தை ஐந்தாகப் பிரித்து நிலத்திற்கு ஒரு தெய்வ வழிபாடும் குல தெய்வ மற்றும் சிறு தெய்வ வழிபாட்டையும் வைத்திருந்தாலும் தங்கள் முழு முதற் கடவுள் சிவபெருமானையே போற்றி வணங்கி வந்தனர் என்பதை சங்க இலக்கியங்கள் வாயிலாகவும் ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட சிவலிங்க உருவங்களுமே சான்றாக விளங்குகின்றன.

சிவனையே முழு முதற்கடவுளாகக் கொண்ட இந்தியர்கள் அவன் பெயரால் பல திருவிழாக்களை ஏற்படுத்தி, ஆண்டின் பல மாதங்களில் இத்திருவிழாக்கள் நடத்தப்பட்டன.

மிகப் பழங்காலம் முதல் நிறைமதிப் பெருவிழாவை தமிழர்கள் கொண்டாடி வருகின்றனர். இவ்விழாக்களைப் பற்றி பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம் தமது தமிழ்நாட்டு விழாக்கள் என்ற நூலில் கூறுகையில், "இவ்விழாவை மக்கள் வீட்டுக்குள்ளேயே இருந்து விளக்கேற்றி வழிபட்டவர்கள் மார்கழியிலும், தையிலும் தண்ணீர் தடம் படிந்து பொய்கையில் நீராடி மகிழ்ந்தவர்கள், மாசியிலும் பங்குனியிலும் வசந்தத்தையும் இளவேனிலையும் எதிர்நோக்கியிருந்தவர்கள். அப்பங்குனியில் மலரும் வசந்தம் வளமாரப் பூத்துக்குலுங்கும் சித்திரையில் மகிழாதிருப்பார்களா? என்று கூறுகிறார்.

தமிழர்கள் கொண்டாடிய விழாக்கள் பல. அவை அனைத்தும் சிவனை மையமாக வைத்தே கொண்டாடப்பட்டது. இவ்விழாக்களின்

போது சிவபெருமானின் உருவம் (சிவலிங்கம்) தேரில் ஏற்றப்பட்டு ஊர்கள் தோறும் மக்கள் வணங்கும்படியாக மேளதாளங்களுடன் அழைத்துச் செல்வது வழக்கமாக இருந்து வந்தது.

நாட்டில் பசியும் பிணியும் நீங்கி உயிர்கள் இன்பமாக வாழ வேண்டும் என்பதற்காகவே தமிழர்கள் விழாக்களைக் கொண்டாடினர். விழாவன்று மட்டும் மக்கள் மகிழ்ச்சியாக இருந்தால் போதாது. மறுநாள் நாட்டின் நிலை மாறினாலும் பயன் இல்லை. நாடு திருந்த வேண்டும் அதற்கான சூழ்நிலைகளை மன்னன் அமைத்துத் தரவேண்டும் நீதி பெருகின் வான்மழை காத்து மக்கள் இன்பமாக வாழ்வர் என்ற அடிப்படையிலேயே விழாக்கள் கொண்டாடப்பட்டன.

காவிரிப்பூம்பட்டினத்தில் விழாவினை மக்கள் அறிய முரசறைந்த வள்ளுவ முதுமகன்,

"பசியும் பிணியும் பகையும் நீங்கி

வசியும் வளமும் சுரக்கென வாழ்த்தி"

விழாவினை மக்களுக்கு அறிவித்தான் என்ற சங்க கால இலக்கிய பாடலிலிருந்து நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

தமிழர்கள் கொண்டாடிய விழாக்கள் பல. அவை பொங்கல் விழா, மாசி சிவராத்திரி விழா, பங்குனி உத்திர விழா, சித்திரை விழா, வேனில் விழா, வைகாசி விசாகத் திருவிழா, ஆடி 18-ஆம் பெருக்கு விழா, காத்திகை தீப விழா, மார்கழி நோன்பு, தைப்பூசத் திருவிழா, ஆனி திருமஞ்சனத் திருவிழா, திருவாதிரைத் திருவிழா, இந்திர விழா என்பனவாகும். ஆனால் ஆரிய பார்ப்பனர் வருகைக்குப் பின் இவ்விழாக்கள் மக்களிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கின.

பிற்கால சோழர்கள் காலத்தில் தமிழர்களின் திருக்கோயிலுக்குள் நுழைந்து விட்ட பார்ப்பனர்கள் தமிழர் திருவிழாக்களை நாயக்க

மன்னர்களின் உதவியுடன் மக்களிடமிருந்து மறக்கடித்து வைணவத்தை உயர்த்தும் விதமாக விநாயகர் சதுர்த்தி, கிருட்டின செயந்தி, ராமநவமி, தீபாவளி போன்ற விழாக்களை மக்களிடம் புகுத்தினர். தமிழகத்தை ஆட்சி செய்த தமிழ் நாட்டு மன்னர்களும் பார்பபனர்களின் பொய்ப்பு புராணங்களை நம்பி பண்டைய தமிழர்களின் விழாக்களை புறக்கனித்தனர். சுதந்திரம் அடைந்த பின்பு நமது நாட்டை ஆட்சி செய்த தமிழர் வழிபாடு திருவிழாக்கள் பற்றி ஏதும் அறியாத ஆட்சியாளர்களும் பார்ப்பனர்களின் விழாக்களுக்கு ஏற்ப இசைவளித்து அரசு விடுமுறையும் அளித்து வருகின்றனர்.

தமிழர் மட்டுமல்லாது இந்தியர்கள் அனைவரும் கொண்டாடப்படும் பெரும் விழாக்களில் சிவராத்திரி பெருவிழாவும் ஒன்று. சிவராத்திரி விழாவின்போது தான் இந்தியர்கள் தங்கள் குலதெய்வ வழிபாட்டிற்காக வெவ்வேறு இடங்களுக்குத் தங்கள் குடும்பத்தாருடன் சென்று, ஏறத்தாழ ஒரு வார காலம் பூசைகள் செய்து வணங்கி வருகின்றனர். ஆனால் தற்போதைய ஆட்சியாளர்கள் மாசி சிவராத்திரி விழாவினை ஒரு விழாவாகவே கருதுவதில்லை.

இந்து மதத்தைச் சேர்ந்த சைவர்கள் 'அன்பே சிவம்' என்ற கொள்கையை உடையவர்கள் என்பதாலோ என்னவோ அனைத்துப் பிரிவினராலும் எள்ளி நகையாடப்படுவதோடு அவர்களது விழாக்களாகிய முருகப் பெருமானுக்குரிய கார்த்திகை தீபத் திருவிழா, பங்குனி உத்திர பெருவிழா, தைப்பூசத் திருவிழா மற்றும் சிவராத்திரி பெருவிழா, ஆடிப் பெருக்குவிழா, போன்றவை சிவ மற்றும் முருக பக்தர்களான தமிழர்களால் மட்டுமே கொண்டாடப்பட்டு வருகின்றன.

மாசி மாதத்திலே வரும் சிவ்ராத்திரி பெருவிழா இந்தியா முழுவதும் கொண்டாடப்பட்டு இடையிலே ஆரிய பார்ப்பனர்களின் சூழ்ச்சியால் மறைக்கப்பட்ட அந்த விழா மீண்டும் நமது நாட்டில் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் குச்சனூர் ஆதீனம்

சார்பாக அதன் நிர்வாகியால் (குச்சனூர் கிழார்) தமிழக அரசுக்கு 11.12.2006 அன்று கடிதம் மூலம் அரசு விடுமுறைக்காக வேண்டுகோள் விடுத்து கடிதம் எழுதப்பட்டது. ஆனால் 'தங்களது கோரிக்கை ஏற்க இயலவில்லை' என்ற கடிதம் அரசிடமிருந்து எங்களுக்குக் கிடைக்கப் பெற்றது கண்டு மிக்க அதிர்ச்சி அடைந்தோம்.

தமிழகத்தில் கடந்த ஆண்டுகளில் தமிழனுக்குத் தொடர்பில்லாத கிருட்டிண செயந்தி, வினாயக சதுர்த்தி, சரசுவதி பூசை போன்ற விழாக்களுக்கு அரசு விடுமுறை அளிக்கப்பட்டு இன்றும் அது நீடித்து வருகிறது. தமிழனுக்கு நேரடித் தொடர்புடைய சமய விழாக்களுக்கு விடுமுறை இல்லை. இதற்கு உரிய விடை பெறுவது யார்?

இந்தியாவில் இந்துக்கள் அனைவரும் சிவராத்திரி பெருவிழா அன்றுதான் தங்கள் தங்கள் குல தெய்வ வழிபாட்டை மேற்கொண்டு வருகின்றனர். இவ்விழாவின் போது தமிழர்கள் ஏறத்தாழ ஒருவார காலம் வெளியூர்களில் உள்ள தங்களது குலதெய்வ வழிபாட்டிற்கு சென்று வருகின்றனர். வட ஆரியர்களால் புகுத்தப்பட்ட பல்வேறு விழாக்களுக்கு தமிழக அரசு விடுமுறை அளித்துள்ளது. ஆனால் சிவராத்திரி விழாவிற்கு விடுமுறை அளிக்கவில்லை. இதன் காரணமாக தமிழக அரசுக்கு குச்சனூர் ஆதினம் கடித மூலம் மேற்படி விழாவிற்கு விடுமுறை அளிக்க வேண்டுமாய் வேண்டுகோள் வைக்கப்பட்டது. ஆனால் அவ்வேண்டுகோள் ஏற்கப்படாதது ஏன் என்று தெரியவில்லை.

பொது (பல்வகை)த் துறை
தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.

கடித எண். 9533/2007/-1 நாள் 3-5-2007

அனுப்புநர்

திரு. குமார் ஜயந்த், இ.ஆ.ப.,
அரசு கூடுதல் செயலர்.

பெறுநர்

திரு. குச்சனூர் கிழார்,
குச்சனூர் ஆதினம்,
அருள்மிகு முத்தானந்தசிவன் குருபகவான் ராஜயோக பீடம்,
குச்சனூர், தேனி மாவட்டம்.

அய்யா,

பொருள் : விடுமுறை - சிவராத்திரி அன்று அரசு விடுமுறை நாளாக அறிவிக்க வேண்டியது குறித்து.

பார்வை : 1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தாங்கள் அனுப்பிய 11.12.2006 நாளிட்ட கடிதம்.

2. தனி அலுவலர், முதலமைச்சரின் தனிப்பிரிவு, கடிதம் எண்.எப்/41994/கடலூர்/2007, நாள் 19.12.2006,

3. தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள் 10.1.2007.

4. பொது (அ.ஒ-4)த் துறை, நாள்9.2.2007

பார்வையில் 1-ல் குறிப்பிட்டுள்ள கடிதத்தில் அனுப்பப்பட்ட தங்களின் கோரிக்கை கனிவுடன் பரிசீலிக்கப்பட்டது.

2. தங்களது கோரிக்கை ஏற்க இயலவில்லை என்பதை தெரிவிக்கப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

9/5/07

அரசு கூடுதல் செயலருக்காக.

9. கொள்ளை போன அருந்தமிழ்ப் பெயர்கள்

கடந்த மாதம் 'மயானம்' என்ற தங்களது ஊரின் பெயரை மாற்றக்கோரி பல ஆண்டுகளாக ஊர் மக்கள் போராட்டம் செய்து வருகின்றனர் என்ற செய்தியை செய்தித்தாள் ஒன்றில் படிக்க நேர்ந்தது. சாதாரணமாக மக்கள் தாங்கள் நினைத்தாலும் கூட தங்கள் ஊர் பெயரை மாற்ற இயலாமல் இருக்கும்போது தாய் மொழியாம் செந்தமிழில் நம் முன்னோர்களால் ஆழ்ந்து ஆராய்ந்து சூட்டப்பட்ட பெயர்களை நமது நாட்டில் குடியேறிய ஆரிய பார்ப்பனர்கள் எப்படியெல்லாம் மாற்றியுள்ளனர் என்பதை ஆராய்வோம்.

பொதுவாக தமிழர்கள் ஒரு செயலைத் துவங்குவதற்கு முன்பு உலக நாயகனாக விளங்கும் சிவபெருமானை மனதில் கொண்டு 'உ' என்ற வார்த்தையை சுவரில் எழுதி வைத்தனர். பிற்காலத்தில் அறிவு பெற்றபின் எழுதத் துவங்குவதற்கு முன்பும் அதே பழக்கத்தைக் கடைப்பிடித்து வந்தனர். உலகத்தை படைத்துக் காத்து, அருள் செய்து அழிக்க வல்ல உலக நாயகனாக விளங்கும் சிவபெருமானே உனது அருளால் இத்தொழிலை செய்ய முயற்சிக்கிறேன் என்று தொடங்குவர்.

ஆரிய பார்ப்பனர்கள் இந்தியாவிற்குள் குடியேறிய பிறகு சிவபெருமான் வழிபாட்டை அழிக்கும் விதமாக சிவனை தங்கள் அழிக்கும் கடவுளாகிய ருத்திரன் என பெயரை மாற்றி தாங்கள் கண்டுபிடித்த கணபதி வழிபாட்டை இந்திய மண்ணில் நிலை நிறுத்துவதற்காக 'உ' என்ற தமிழ் எழுத்தை 'பிள்ளையார் சுழி' என்று மாற்றி விட்டனர்.

உலக நாயகனாகிய சிவபெருமானின் நாமம்தான் 'உ' என்பதன் பொருள், அதனை பிள்ளையார் சுழி என்று மாற்றிய பார்ப்பனர்கள்

கோவிலுக்குள் நடக்கும் பூசை முறைப் பெயர்களையும் வடமொழியில் மாற்றினர். கோயில் திருக்குடமுழுக்கு என்பதனை 'கும்பாபிஷேகம்' என்றும் இறை முழுக்காட்டு என்பதை 'அபிஷேகம்' என்றும் இறைவனுக்கு படைக்கப்பட்டு பக்தர்களுக்கு வழங்கிய படையலை 'பிரசாதம்' என்றும் சிவன்காளை என்பதை நந்தி என்றும் தெய்வச்சிலை அமைந்துள்ள கருவறையை 'மூலஸ்தானம்' என்றும் இறை முழுக்காட்டு புனித நீரை 'தீர்த்தம்' என்றும் இப்படி பலவாறாக செந்தமிழ் பெயர்களை மாற்றி மக்களிடையே ஒருவித மயக்கத்தை ஏற்படுத்தினர்.

தொன்றுதொட்டு பார்ப்பனர்களால் தமிழ் பெயர்கள் அழிக்கப்பட்டு வருவதைக் கண்ட தமிழறிஞர் காசுப்பிள்ளை தமது தமிழ்நாட்டு இந்து சமயங்களின் வரலாறு (1927) என்ற நூலில் 'அதீஷதர்களான சுமார்த்தர்கள் தமிழை சூத்திர பாஷை என்றிகழுகிறார்கள். அறியாமை மிக்க ஆதிசைவன் அச்சுமார்த்தர்களது செல்வ அதிகாரத் தோற்றம் பொலிவு கண்டு மயங்கி, சமசுகிருதமே பிராமணர்களுடைய பாஷை என்ற தப்புக் கொள்கைக்கு இறையாகி விடுகின்றான்' என்று கூறுகிறார்.

தேவாரம் பாடி சிவ பெருமானைப் புகழ்ந்த மூவரில் அப்பர் என்ற திருநாவுக்கரசரும் ஒருவர். அவர் வாழ்ந்த காலத்தில் 'குடமூக்கு' என்ற திருத்தலம் சிவபெருமானின் உறைவிடமாக இருந்தது. இங்கு மன்னர்கள் காலத்தில் பல்வேறு திருவிழாக்கள் கொண்டாடப்பட்டன என்பது வரலாறு.

சிவபெருமானை தியானித்து 'குடமூக்கு' என்ற பெயரை உச்சரித்தாலே இம்மையின் வினைகள் நீங்கப் பெற்று சிவபெருமானின் திருவடியை அடையலாம் என்பது திருநாவுக்கரசரின் திருவாக்கு. இவ்வளவு சிறப்பு வாய்ந்த இத்திரு மண்ணில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை 'கும்பமேளா' நடப்பதை இன்றும் நாம் கண் கூடாகக் கண்டு வருகிறோம். தமிழ் மக்களிடம் சிறப்புப் பெற்று விளங்கிய இத்திருத்தலத்தை திருநாவுக்கரசர்

'குடமூக்கே குடமூக்கே' என்பீராகில் கொடுவினைகள் தீர்ந்தானைக் குருகலாமே'

என்று பாடுகிறார். 'குடமூக்கே' என்ற இத்திருப் பெயரை ஆரிய பார்ப்பனர்கள் கும்பகோணம் என்று மாற்றி தமிழர்களாகிய நம்மையும் அவ்வாறு அழைக்க வைத்துள்ளனர்.

இதே போல் 'திருமறைக்காடு' என்பதை வேதாரண்யம் என்றும் திருமுதுகுன்றம் என்பதை விருத்தாசலம் என்றும் மாற்றினர்.

மதுரைக்கு அருகில் உள்ள பழமுதிர்சோலை முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது.

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இதனை தாம் பாடிய திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் "பழமுதிர்சோலை மலை கிழவோனே" என்று முருகப் பெருமானைப் புகழ்ந்து பாடுகிறார். மன்னரும் மக்களும் போற்றி வணங்கிய முருகப் பெருமானின் பெயரை மங்கச் செய்யும் வகையில் ஆரிய பார்ப்பனர்களும் மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களும் இணைந்து ஆழ்வார்களின் துணையுடன் பழமுதிர்சோலை என்பதை மறைத்து 'அழகர்மலை' என்றும் திருமாலி ருஞ்சோலை என்றும் மாற்றிப் பாடினர் என்பது வரலாறு. சரி அதோடு நின்று விட்டதா? இன்று என்ன நடக்கிறது?

மதுரை வைகை ஆற்றில் அழகர் இறங்கும் விழா சிறப்பானது. மலையிலிருந்து வரும் அழகரை கள்ளழகர் என்று அழைப்பதுதான் மரபு. ஆனால் பார்ப்பனர்கள் அந்தப் பெயரையும் மாற்றி வரதராசப் பெருமாள் என்றும் சுந்தரராசப் பெருமாள் என்றும் மாற்றிக் கூறி வருகின்றனர்.

பழமுதிர்சோலை மலையில் அமைந்துள்ள நீருற்று அல்லது சோலைமலை சுனை என்பதனை அனைவரும் அறிவர். அதனை சிலப்பதிகாரம் 'சிலம்பாறு' என்று குறிப்பிடுகிறது. இப்பெயரையும் மாற்றி 'நூபுரகங்கை' என்று வடமொழியில் மாற்றி தற்போது

பார்ப்பனர்களும் அவர்களுக்கு ஆதரவான செய்தித்தாள்களும் பரப்புரை செய்து வருகின்றன.

இதேபோல் திருச்செந்தூர் முருகனை 'ஜெயந்திநாதர்' என்று வடமொழியில் மாற்றி பொய்ப்பரப்புரை செய்து வருகின்றனர்.

5.8.2009 அன்று திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்பாக தினமணி தமிழ் நாளிதழில் விளம்பரம் ஒன்று கண்டோம். அதில் மூலவர் சண்முகர் - வெங்கடாசலபதி விமானங்களுக்கு குடமுழுக்கு விழா ஒட்டிய மண்டலாபிஷேக நிறைவு விழா நடைபெறுகிறது. என்று இருந்தது கண்டு அதிர்ச்சியுற்றோம். முருக்ன் கோயிலுக்குள் வெங்கடாசலபதி எப்படி வந்தார். சைவர்களே சிந்தியுங்கள் எதிர்காலத்தில் முருகன் வெங்கடாசலபதியாக மாற்றப்பட்டாலும் ஆச்சிரியமில்லை.

சேது மன்னர்கள் இறைவனை வணங்கி வந்த திருத்தலம் 'சேதுபதி' என்று அழைக்கப்படுகிறது. 'பதி' என்றால் இறைவன் சிவன் என்பதாகும். ஆனால் பார்ப்பனர்கள் சேது மன்னர்களை மயக்கி தங்களது முன்னோராகிய இராமனின். பெயரால் இராமேசுவரம் என்று மாற்றி கடவுளையும் இராமநாதசுவாமி என்று மாற்றி விட்டனர். இப்படியே எழுதிக் கொண்டு போனால் இடம் போதாது.

சரி போகட்டும். தனி ஒரு மனிதன் அல்லது ஊர்ப் பெயரை மாற்றுவதற்கு முன் அனுமதி பெற வேண்டும் என்ற சட்டம் இருக்கும் பொழுது அரவமில்லாமல் தமிழில் உள்ள கடவுள் மற்றும் ஊர் பெயர்களை கோவிலுக்குள் இருந்து கொண்டு ஆரிய பார்ப்பனர்கள் மாற்றுவதற்கு இந்திய அரசியல் சட்டம் இடம் தருகிறதா? அல்லது பார்ப்பன பூசாரிகள் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டார்களா? இதை மக்களுக்குத் தெரிவிப்பது யார்?

தமிழர்கள் மட்டுமில்லாது அருகில் உள்ள கன்னடர், ஆந்திரர், மலையாளிகள் அனைவரும் முருகப் பெருமானை 'முருகா' 'முருகா' என்று அழைக்கும்போது முருகப் பெருமானுக்காக அமைக்கப்பட்ட

திருக்கோயில்கள் 'பாலதண்டாயுதபாணி திருக்கோயில்' என்றும் 'பாலசுப்பிரமணியர் திருக்கோயில்' என்றும் வடமொழிப் பெயரிட்டு அழைப்பதற்கான காரணம் யாது?

மதுரையில் பாண்டிய மன்னர்களால் சிவபெருமானுக்காகக் கட்டப்பட்ட திருக்கோயில் 'சொக்கநாதர் திருக்கோயில்' என்பதாகும். இதனை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் என்று மாற்றியவர்கள் யார்? மாற்றியதற்கான காரணம் யாது? என்பதனை தமிழ் ஆய்வாளர்கள் ஆராய வேண்டும்.

10. ஆதீனங்களுக்கு சில வினாக்கள்!

இந்தியாவில் ஒவ்வொரு இன மக்களும் தங்களுக்கென்று கோவில் வழிபாட்டு முறைகள் வைத்துள்ளனர். அந்த வழிபாடுகளின் மூலம் அவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். இதை யாரும் சட்டத்தின் மூலம் தடுத்து நிறுத்தி விட முடியாது என்பதற்குப் பல முன்னுதாரணங்கள் உண்டு.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன் கோவில்களில் யாரும் விலங்குகளை உயிர்ப்பலியிடக்கூடாது என்று தமிழக அரசு சட்டம் கொண்டு வந்து மக்களைக் கட்டுப்படுத்த முயன்றது. ஆனால் அது இயலாமல் போனது.

இந்து மதத்தில் இப்படித்தான் திருமணம் செய்ய வேண்டும். இப்படித் தான் ஈமக்கிரியைகள் மற்றும் குடமுழுக்குப் போன்ற சடங்குகள் செய்ய வேண்டும் என்ற நியதி இல்லை. யார் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் எந்த மொழியிலும் மந்திரங்கள் சொல்லி திருமணம் குடமுழுக்கு போன்ற சடங்குகள் செய்து கொள்ளலாம். அதுதான் நடைமுறையில் உள்ளது. ஆனால் ஆரிய பார்ப்பனர்களின் மதமான சனாதனதர்மத்தின் சடங்கு முறைகளை சிவபெருமானை மட்டுமே முழுமுதற் கடவுளாக வழிபட்டு வந்த உண்மையான இந்தியப் பூர்வீக இந்து மக்கள் மீது திணிக்க முயலுவது அவர்களது சுதந்திரத்திற்கு அல்லது உரிமைகளுக்கு எதிரானதாகும்.

தமிழர்கள் காலம் காலமாக தொன்று தொட்டு தங்களுக்கென்று சில சடங்கு முறைகளைப் பின்பற்றி வந்தனர் என்பதற்கு சங்ககாலச் சான்றுகள் பல உள்ளன. இடைக்காலத்தில் களப்பிரர்களின் படையெடுப்பால் அந்த சடங்கு முறைகளும் கோயில் பூசை முறைகளும் அழிக்கப்பட்டு அங்கும் இங்குமாக சிற்சில இடங்களில் மட்டும் தமிழர்களின் பழைய சடங்கு முறைகள் நடந்த வண்ணம் இருந்தன

களப்பிரர்களின் கொடிய ஆட்சிக்குப்பிறகு தோன்றிய திருமூலர், அப்பர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் போன்ற சிவனடியார்கள் இந்து மதமாகிய சைவத்திற்கு உயிரூட்ட எண்ணி சிவத்திருத்தலங்கள் தோறும் சென்று பாடிய பாடல்களே நமக்கு இன்று திருமுறையாக உள்ளது. இவற்றை கிரியைகளுக்கு பயன்படுத்தக்கூடாது என்று அவர்கள் யாரும் சொல்லவில்லை.

மனிதன் இறைஞானத்தை அடைவதற்கு நமது முன்னோர் நான்கு வழிகளைச் சுட்டிக் காட்டியுள்ளனர். அவைகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாகும். இதுபற்றி தமிழறிஞர் தெ. முருகசாமி தமது கட்டுரை ஒன்றில் இவ்வாறு கூறுகிறார்.

'சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பதை நெறியாகக் கூறும்போது தாசமார்க்கம், சத்புத்திர மார்க்கம், சகமார்க்கம், ஞானமார்க்கம் என்பதாகக் கூறுவர். சரியை என்பது தொண்டு. நந்தவனத்தில் பூக்கொய்து, மாலையாக்கல், உழவாரப் பணி செய்தல் போன்ற பூசை வழிபாட்டிற்கான உதவிகளைச் சரியை என்பர்.

கிரியை என்பது பூசை வழிபாடு செய்தல், தனக்கும் பிறருக்குமாகச் செய்யப்படும் ஆன்மார்த்த பூசை, பரார்த்த பூசை எனப் பூசை இரு வகைப்படும். இப்படியாகச் சரியை கிரியைகள் செய்யச் செய்ய ஏற்படும் மன ஒருமைப்பாடு தான் யோகம். இம்மன ஒருமைப்பாட்டில் மாறாமல் என்றும் நிலைத்து நிற்பது ஞானம்' என்கிறார்.

இந்து சமயத்தில் நடக்கும் சடங்கு முறைகளை இப்படித்தான் செய்ய வேண்டும் என்று கூறி யாரையும் கட்டாயப்படுத்த முடியாது. கிரியைகள் செய்யும்பொழுது அவரவர் விருப்பப்படி தேவாரம் திருவாசகம் அடங்கிய திருமுறையைப் பாடித்தான் நாயன்மார்கள் இறைவனை அடைந்திருக்கிறார்கள். தன்னையும் பிறரையும் மகிழ்ச்சி செய்து இறை உணர்வை ஊட்டுவதற்காகத்தான் திருமணம், புதுமனைப்

புகுவிழா, குடமுழுக்கு, ஈமக்கிரியைகள் போன்ற சடங்குகள் செய்யப்படுகின்றன.

கிரியைகள் நடத்தும்போது பாடுவதற்காகவும் கிரியையில் சம்பந்தப்பட்டவர்களைச் சொல்லச் செய்வதற்காகவும் தான் திருமுறை படைக்கப்பட்டதேயன்றி கோவில் வாசலில் பிச்சைக்காரர்களைப் போல் நின்று பாடிவிட்டுப் போவதற்காக அல்ல.

திருமுறையை அளித்த நால்வரும் மற்றும் அதனை ஆய்வு செய்த தமிழறிஞர்களான ஆறுமுக நாவலர், மகா வித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, காசுப்பிள்ளை, மறைமலை அடிகள் போன்ற தமிழ் அறிஞர் பெருமக்களுக்கும் எட்டாத சிந்தனை இன்றைய சைவ மடாதிபதிகளில் சிலருக்கு ஏற்பட்டிருப்பது வியப்பை அளிக்கிறது. ஆரிய மாய வலைகளில் வீழ்ந்து தமிழில் கிரியை செய்ய மந்திரம் இல்லை என்று சொல்லும் இவர்கள் நாளை நமது கோயி லில் சிவசிவ என்றும் முருகா என்றும் சொல்லக்கூடாது என்று சொன்னாலும் வியப்பில்லை. இப்படிப்பட்டவர்களால் தமிழையும் சைவத்தையும் எப்படிக் காப்பாற்ற இயலும்?

“தமிழ் மொழியின் அமைப்பும் அதன் இயற்கையும் சைவ சமய உண்மையோடு மிகவும் ஒன்றுபட்டிருக்கலாம். அதனை எல்லாரும் நன்றாகக் கற்று வேறு மொழிக் கலப்பில்லாமற் செவ்வையாகப் பேசவும் எழுதவும் அதில் புதிய புதிய நூல்கள் இயற்றவும் பழகிக் கொள்ளுதல் வேண்டும்” என்று ‘சிவனடியார்களுக்கு அறிவுரை கூறும் மறைமலை அடிகள் உண்மையான சிவத்தொண்டராக வாழ்ந்து சிவப்பணி புரிந்து மறைந்தவர்.

சைவத்தைக் காக்கவும், வளர்க்கவுமே ஆதீனங்கள் தோற்று விக்கப்பட்டன. ஆனால் அவை தங்கள் பணிகளிலிருந்து விலகியிருப்பது வியப்பிற்குரியது.

ஆதீனங்கள் செய்யத் தவறியவை என்ன?

1. கல்வியறிவு இல்லாத மக்களிடம் திருமுறையின் மாண்பை எடுத்துக்கூற நடவடிக்கை ஏதும் எடுத்தார்களா?

2. தமிழுக்கு இசை தந்த மூவரைப்பற்றி எங்காவது சென்று பரப்புரை செய்ததுண்டா?

3. முறைப்படி தேவார திருவாசகப் பயிற்சி அளித்துப் பயிற்சி பெற்ற ஓதுவார்களின் நலனுக்காக எப்போதாவது குரல் கொடுத்ததுண்டா?

4. அறநிலையத்துறையின் கீழ் உள்ள நூற்றுக்கணக்கான சிவன் கோயில்களில் முறைப்படி பூசை நடக்கிறதா? இல்லையா என்பதை கவனித்ததுண்டா?

5. கோவில்களில் உள்ளே நின்று பூசை செய்யும் ஆரிய பார்ப்பனர்கள் கடவுளின் பெயர்களை சமசுகிருதத்தில் மாற்றிப் பொய்ப் பரப்புரை செய்வதை எப்பொழுதாவது கண்டித்ததுண்டா?

6. ஆதீன மடத்துச் சொத்து தனி நபர் சொத்தல்ல. அது சைவத்தை வளர்ப்பதற்காக சிவம் பெருக்கும் சீலர்களால் வழங்கப்பட்டது. அவற்றைப் பயன்படுத்தி சிற்றூர்களில் கல்விச்சாலைகள் மற்றும் தேவார திருவாசகத் திருமுறை பாடசாலைகளை எங்காவது நிறுவினார்களா?

இப்படி எத்தனையோ வினாக்களைத் தமிழர்கள் எழுப்பும் காலம் விரைவில் வரும்.

11. இன்னும் நாம் சூத்திரர்கள்தானா?

மத்தியஅமைச்சர் வயலார் ரவியின் மகன் குருவாயூர் கிருஷ்ணன் கோவிலுக்கு வந்து சென்ற பிறகு தீட்டுப்பட்டு விட்டதாகக் கருதி கோயிலை நம்பூதிரிகள் சுத்தப்படுத்தினர் என்ற செய்தி படித்தவர்களிடையே ஒரு கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

மத்திய அமைச்சர் வயலார் ரவி அவரது மகன் ரவிகிருஷ்ணா, மருமகள் நிஷா ஆகியோர் கடந்த மாதம் குருவாயூர் கோவிலுக்குச் சென்றனர். அப்போது ரவி கிருஷ்ணாவின் குழந்தைக்கு சோறூட்டும் சடங்கை அவர்கள் நடத்தினர். வயலார் ரவியின் மனைவி மேழ்சி கிறித்தவர் என்பதால் கோயிலுக்கு வரவில்லை. இருப்பினும் அமைச்சர் குடும்பத்தினர் கோவிலை விட்டுச் சென்ற பிறகு தீட்டுப்பட்டு விட்டதாகக் கருதி நம்பூதிரிகள் கோவிலைப் புனிதப்படுத்தும் நிகழ்ச்சியான புண்ணிய யாகம் நடத்தியுள்ளனர்.

சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் நாட்டில் தீட்டும் தீண்டாமையும் நீடித்திருப்பது வயலார் ரவிக்கு மட்டும் இழுக்கல்ல. ஒட்டுமொத்த இந்திய சமூகத்திற்கே அவமானமாகும். நாகரீகம் வளர்ந்து உலகமயமாக்கல் என்ற நிலைக்கு வந்துவிட்ட மனித குலத்தில் தீட்டும் தீண்டாமையும் நீடிக்கலாமா? பெரியார் நடத்திய வைக்கம் போராட்டத்தின் பயன் என்ன?

சமூக நீதியை வலியுறுத்தி கே. கேலப்பன், ஏ.கே. கோபாலன் ஆகியோர் 75 ஆண்டுகளுக்கு முன்பு போராடினர். சாதிப்பாகுபாடு, தீண்டாமை ஆகியவற்றை ஒழிப்பது சுதந்திரப் போராட்டத்தின் முக்கிய அம்சமாக விளங்கின. ஆனால் நாடு சுதந்திரமடைந்த பிறகும் இது போன்ற செயல் நீடிப்பது நாட்டின் வளர்ச்சிக்கும் சமூக ஒற்றுமைக்கும் உகந்தது அல்ல.

புண்ணிய யாகம் நடத்தியது பற்றி அக்கோவில் பூசாரி இராமன் நம்பூதிரியிடம் பத்திரிக்கையாளர்கள் கேட்டபோது,

"கோவில் விதிமுறைப்படி ஒரு நபரின் தாய்க்குரிய மதம்தான் மகனுக்குரியதாகக் கருதப்படுகிறது. ரவி கிருஷ்ணாவும் கிறித்தவராகக் கருதப்படுகிறார். இந்துவல்லாத ஒருவர் கோவிலுக்குள் நுழைந்தால் புண்ணிய யாகம் நடத்த வேண்டும் என்பது விதி. அதைத்தான் நாங்கள் செய்தோம். இந்த விதிமுறைகளை மாற்றினால் நாங்களும் அதற்கேற்றபடி நடந்து கொள்வோம். கோவில் நிருவாக நடைமுறைகள் மற்றும் பழக்கவழக்கங்களுக்கு பாதுகாவலர்களாக உள்ள நாங்கள் அவற்றைப் பின்பற்ற வேண்டிய கடமையில் உள்ளோம்" என்று தங்கள் மீது குற்றமில்லை என்பது போல காட்டி தப்பித்துக் கொண்டார். தீண்டாமை ஒரு குற்றம் என்ற அரசியலமைப்பு பெரிதா? நம்பூதிரிகளின் தந்திரம் பெரிதா? என்பதனை அரசியல்வாதிகளும் படித்தவர்களும் உணர வேண்டும்.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது தான் இந்து மதத்தின் அடிப்படைத் தத்துவம். இந்த வாசகத்தில் நம்பிக்கை கொண்டுதான் மேலை நாட்டவர்களும் கூட நமது கோவில்களுக்குள் தாராளமாக வந்து செல்ல முடிகிறது. ஆனால் ஆரிய பார்ப்பனர்கள் இந்து என்ற கருவியைக் கையில் எடுத்துக் கொண்டு தங்களின் சனாதன தர்மத்தை இன்னும் நிலைநாட்ட முயற்சிக்கின்றனர்.

ஒரு காலத்தில் இந்து கோவில்களுக்குள் நுழைய ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. மகாராஷ்டிரா, நாசிக்கின் பஞ்சவதி பகுதியில் 200 ஆண்டுகளுக்கு முன் எழுப்பப்பட்ட கலாராம் கோவிலிலும் இந்த நிலை இருந்தது. புஷ்வாஸ் குடும்பத்தை சேர்ந்தவர்களால் எழுப்பப்பட்ட இந்தக் கோவில் தலைமுறை தலைமுறையாக பூசை செய்து வருகின்றனர். 77 ஆண்டுகளுக்கு முன்பு 1930 மார்ச் 2-ஆம் தேதி அம்பேத்கார் தலைமையில் ஆயிரத்து 500 ஆதி திராவிடர்கள் இந்தக் கோவிலுக்கு தரிசனம் செய்ய அணிவகுத்து வந்தனர். கோவிலின் அப்போதைய தலைமை குரு மகந்த ராமதாசு புவா பூசாரி கோவிலின் கதவை அடைத்து அவர்களை உள்ளே அனுமதிக்க மறுத்து விட்டார். இதைத் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் அம்பேத்கார் தலைமையில் சத்தியாக்கிரக போராட்டம்

நடந்தது. தற்போது இந்தக் கோவிலின் 27-ஆவது தலைமை பூசாரியாக உள்ள மகந்த கதிர்தாசு தனது முன்னோர்கள் செயல்பாட்டுக்கு வருத்தம் தெரிவித்துள்ளார் என்பது வரலாற்று செய்தி.

இந்தியா சிவனையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு விளங்கிய நாடு என்பதற்கு ஹரப்பா நாகரீக மக்கள் பயன்படுத்திய தொல்பொருள்களே ஆதாரமாக விளங்குகிறது. ஆனால் ஆரியர்களின் வருகைக்குப் பின் அவர்களின் இனத்தவர்களை இந்திய மண்ணின் கடவுளாக்கக் கூடிய முயற்சி இன்னும் தொடர்ந்து நடந்து வருகிறது. இதனைப் புரிந்து கொள்ளாத படித்த அறிவு ஜீவிகள் மற்றும் செல்வந்தர்கள் இது போன்ற கோவில்களுக்குள் முண்டியடித்துக் கொண்டு செல்வதால் அப்பாவி ஏழைகளும் இவர்களைப் பின்பற்றிச் செல்கின்றனர். அதனால் பார்ப்பனர்கள் தங்கள் வாழ்க்கையை ஆகமம் என்ற பொய்யான வார்த்தையைக் காட்டி சுகமாக வாழ்கிறார்கள். மதியாதார் வாயில் மிதியாதே என்ற பழமொழியை நினைவில் கொண்டு இதுபோன்ற கோவில்களுக்கு படித்தவர்களும் செல்வந்தர்களும் செல்லாமல் இருந்து விட்டால் என்ன குடியா முழுகி விடும்? இது போன்ற மூடத்தனம் மக்களிடம் வந்து விடக்கூடாது என்பதால்தான் ஔவை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே

'மாசற்ற கொள்கை மனதில் அடைந்தக்கால்
ஈசனைக் காட்டும் உடம்பு' என்றார்.

அன்று அக்ரகாரத்திற்குள் நுழையாதே என்றார்கள். இன்று கோவிலுக்குள் வராதே என்கிறார்கள். இரண்டும் நம்முடையவை தான்.

பொய்ப் புராணங்களின் மூலம் தங்கள் முன்னோர்களாகிய இராமன் கிருஷ்ணன் மற்றும் ஆஞ்சநேயர் அனுமார் என்ற பெயரில் குரங்கை ஆரியர்கள் கடவுளாக்கி பசப்பு வார்த்தைகளைக் கூறி ஏமாற்றி வருகின்றனர் என்பதைப் புரிந்து கொள்ளாத வரை தமிழர்களாகிய நாம் சூத்திரர்கள்தான்.

12. இராமாயணத்தில் வருவது எந்த இலங்கை?

இராமர் இலங்கைக்குப் பாலம் அமைத்தார். அதற்கு அணில் முதற்கொண்டு அத்தனை உயிர்களும் உதவி செய்தன. அவ்வாறு உதவி செய்த அணிலின் முதுகிலே இராமர் தடவிக்கொடுத்தார். அணிலின் முதுகில் மூன்று கோடுகள் ஏற்பட்டதற்குக் காரணம் என்று கட்டுக்கதையையும் சேர்த்து வைத்தார்கள் இராம பக்தர்கள் என்று ஏறத்தாழ இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன் தான் ஏழுதிய "இராமாயணம் உண்மையும் புரட்டும்" என்ற நூலில், கே. முத்தையா மிகத் தெளிவான ஆதாரங்களுடன் பல உண்மைகளை வெளியிட்டுள்ளார்.

இப்போது அமெரிக்க விண்வெளி ஆய்வு அமைப்பான நாசாவின் மூத்த அதிகாரி மார்க்கேசு இராமர் பாலக் கட்டுக்கதைக்கும் தங்களது அமைப்பிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று மறுப்புத் தெரிவித்திருக்கிறார்.

ஒரு பொய்யைத் திரும்பத் திரும்ப மக்களிடத்தில் பேசினால் அது உண்மையாகிவிடும் என்ற கணிப்பில் ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் பரிவார இயக்கங்களான பாரதிய சனதா, விசுவ இந்து பரிசத் போன்ற இயக்கங்கள் நாடு முழுவதும் போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தி இராமர் பாலம் பற்றிப் பேசி பொய் பரப்புரைச் செய்து வருகின்றன.

இன்று உள்ள இலங்கை வேறு வால்மீகி இராமாயணத்தில் வரும் இலங்கை வேறு என்பதை வரலாற்று இதிகாசம் புவியியல் சான்றுகளுடன் டி. பரமசிவம் அய்யர், டி. அமிர்தலிங்க அய்யர், எச்.டி. சங்காலியா போன்ற வரலாற்று அறிஞர்கள் தங்களது நூல்களில் தெளிவுபடுத்தியுள்ளனர். அவர்கள் எழுதிய நூல்கள் வருமாறு :

1. **Ramanayana and Lanka** (இராமாயணமும் இலங்கையும்) எழுதியவர் டி. பரமசிவ அய்யர்.

2. **Ramanayana Vimarsa** (இராமாயண விமர்சனம்) இதை எழுதியவர் டி. அமிர்தலிங்க அய்யர் இவர்கள் இருவரும் சகோதரர்கள். நீண்ட காலமாக இராமாயணத்தைப் பற்றி ஆய்வு செய்தவர்கள். சமற்கிருத மொழியில் புலமை பெற்றவர்கள். மூன்றாவதாகப் புதை பொருள் ஆய்வாளர் எச்.டி. சங்காலியா எழுதிய **Ramanayana Myth or Reality** (இராமாயணம் கற்பனையா? உண்மையா?) என்ற நூலாகும்.

மேற்குறிப்பிட்ட மூன்று நூல்களும், ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. 'இராமாயணமும் இலங்கையும்' என்ற நூலில் பரமசிவ அய்யர் இலங்கை என்பது இன்றுள்ள சிறீலங்கா அல்ல. மாறாக மத்தியப் பிரதேசத்தில் விந்திய மலைகளிடையே உள்ள ஒரு நீர் சூழ்ந்த மலை என்று மெய்ப்பித்திருக்கிறார்.

வால்மீகி பாடிய பாடல்களில் வரும் இலங்காபுரிக்கே சவேலா என்று வால்மீகி காலத்தில் அழைக்கப்பட்ட ஒரு சிறு குன்று இருந்தது என்றும், அதிலிருந்து இராமர் தன் சேனைகளைத் தயார் செய்து கொண்டு யுத்தத்திற்கு ஆயத்தமானார் என்றும் குறிப்பிடப்படுகிறது. சுவேலா என்ற அந்தச் சிறு குன்றினைத் தன் அருகில் கொண்ட லங்கா என்ற மலையும் மத்திய பிரதேசத்தில் சபல்பூருக்கு அருகில் உள்ளது. இவை இரண்டும் ஒரு காலத்தில் தண்ணீரால் சூழப்பட்டிருந்தன. பெரிய நிலப்பரப்பை கடல் போன்று உருவாக்கியிருந்த ஆறுகள் நிறைந்த இந்த மலைகளில் தான் மக்கள் வசித்தனர். அவை இன்று தண்ணீர் வற்றி சிறுசிறு ஊற்றுக்களாகவும் ஓடைகளாகவும் காட்சி தருகின்றன.

இந்த இரு மலைகளையும், நோக்கி அனுமன், முதலில் சீதையைத் தேட ஆயத்தமான இடம் தான் மகேந்திரமலை. இது இலங்க, சுவேலா மலைகளுக்கு வடக்கே உள்ளது.

அந்த மகேந்திர மலைக்கும் அப்பால் சுக்ரீவன் ஒளிந்திருந்த ரிஷ்யமுகி என்ற மலைப்பிரதேசம் வாலி வசித்த இடமான 'கிஷ்கிந்தை' ஆகியவை பற்றி வால்மீகி தரும் விபரங்களைக் குறிப்பிடும் மத்திய பிரதேச புவியியல் வரைபடத்தைத் தயாரித்துள்ளார் பரமசிவ அய்யர்.

இராமாயணக் கதை என்பது கற்பனையா? உண்மையா? என்ற தன்னுடைய நூலில் எச்.டி. சங்காலியா கூறியுள்ளார்.

வால்மீகி என்ற பெயரில் ஒரு மாபெரும் கவிஞன் இருந்தான். அவன் எழுதியுள்ள இந்தக் காவியத்தில் குறிப்பிடும் பூகோள அமைப்பு இன்றுள்ள சிறீலங்காவை உள்ளிட்டது என்பது அல்லவே அல்ல. இராமன் இலட்சுமணன் ஆகியோர் விந்திய மலைக்குத் தெற்கே கோதாவரி ஆற்றைக் கடந்து வரவேயில்லை. இராவணன் என்பவன் இன்றைய இலங்கையில் வசித்த பூர்வீக அரசனல்ல. மாறாக மத்திய பிரதேசத்தில் மலைகளில் வசித்து வந்த 'கோந்த்' என்ற ஒருவகை மலைசாதியினரின் தலைவன். அதேபோல் வாலி , சுக்ரீவன் என்பவர்கள் இதே 'கோந்த்' இனத்தவர்கள் வசித்த பிரதேசத்திற்கு வடபகுதியில் வசித்து வந்த 'கொர்குக்' என்ற மற்றொரு மலை சாதியைச் சேர்ந்தவர்கள். இத்தகைய விபரங்களே வால்மீகி இராமாயணத்தில் உள்ளன என்கிறார். இதே கருத்தைச் சங்காலி யா தம்முடைய நூலில் உறுதிப்படுத்துகிறார்.

அமிர்தலிங்க அய்யர் வால்மீகி இராமாயணம் முழுவதையும் ஒவ்வொரு சுலோகமாக ஆய்வு செய்து இவற்றில் எது உண்மை? எது இடைச்செருகல்? என்பதைக் கண்டுபிடித்துள்ளார்.

அமிர்தலிங்க அய்யர் வால்மீகி இராமாயணத்தில் வரும் சுலோகங்கள் அடிப்படையில் தரும் விளக்கம்...

யுத்த காண்டம் 3-ஆவது சர்க்கம் 1-ஆவது சுலோகத்தில்

'சுவேலே ராகவம் சைலே
நிவிஷ்டம் பிரத்யவேதயன்'

ஒற்றர்கள் இராவணனிடம் கூறும் (சேதி) அவர்கள் சுவேலா மலையில் இராமன் தன் சைனியத்துடன் முகாமிட்டிருக்கிறான் என்பதைத் தெரிவித்தார்கள் என்பது பொருள். மேற்கூறிய சுலோகங்களிலிருந்து இராமாயண க்தை நருமதை ஆற்றுக்குத் தெற்கே நடக்கவில்லை என்பதை உறுதிப்படுத்த முடிகிறது. ஆனால் இராமன் இக்கால இலங்கைக்குப் பாலம் கட்டினான் என்று புனைந்துரைக்கப்பட்ட கட்டுக்கதை எப்பொழுது மாற்றி எழுதப்பட்டுள்ளது என்பதை ஆராய்வோம்.

பிற்காலத்தில் சுந்தரகாண்டம் பகுதி முழுவதையும் மாற்றி எழுதி பொய்யைப் புகுத்தியும் பரப்பியும் வந்தனர். இவ்வாறு இலக்கிய இடைச் செறுகல்களைச் செய்து தமிழர்களை, இந்தியர்களை ஏன்? உலக மக்களையே நம்பச் செய்தவர்கள் யார்?

கி.பி. 1010-1050 ஆண்டுகளின் வடக்கே உஜ்ஜயினி என்னும் நகரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த போசராசன் என்பவன் காலத்தில் உருவான இராமாயணத்தின் பெயர் சம்பு இராமாயணமாகும். இதில் இராவணனுடைய திரிகூட மலையிலி ருந்த லங்கா இன்றைய சிங்களத் தீவுதான் என்று குறிப்பிடப்படவுமில்லை. அந்தக் குழப்பம் அன்று ஏற்படவுமில்லை.

கி.பி. 330களில் இந்தியாவின் வடக்கே ஆட்சி செய்தவன் சமுத்திரகுப்தன். அதே நேரத்தில் சிங்களத்தை ஆட்சி செய்த மேகவர்மன் சமுத்திரகுப்தனுக்கு பரிசுகள் பல வழங்கியிருக்கிறான். அந்தச் சமயத்தில் எழுதப்பட்ட அரசு ஏடுகளிலோ, சிங்களம் இலங்கை என்று அழைக்கப்படவில்லை. மாறாக சிங்களம் என்றே குறிப்பிடப்படுகிறது.

தமிழகத்தில் கி.பி.1000களில் ஆட்சி செய்த இராசராசசோழன். அவனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த இராசேந்திர சோழன் காலத்தில் இலங்கைமீது படையெடுப்பு நடந்தது என்று மகாவம்சம் என்னும் நூல் கூறுகிறது. கி.பி.1064 வரை சோழ அரசர்கள் இலங்கை மீது படையெடுத்து ஆதிக்கம் செலுத்தினர். அக்காலத்தில் சிங்களத்தீவு பற்றிக் குறிப்பிடும் தமிழ் ஏடுகள் ஈழம் என்றே கூறுகின்றன. ஈழம்

என்னும் சொல் இலங்கையாக மாறி பின் 'லங்கா' வாக மாற்றப்பட்டது என்று பரமசிவய்யர் முடிவுக்கு வருகிறார்.

தென்னிந்தியாவிற்கு வந்த ஆரிய பிராமணர்கள் தங்கள் பேச்சு வன்மையால் தமிழகத்தில் பிற்கால சோழ மன்னர்களை மயக்கி முதலில் தமிழர்களின் கோயில்களுக்குள் பூசனையாளர்களாகப் புகுந்து விட்டனர். தமிழ் மன்னர்கள் சிங்களத்தின் மீது படையெடுத்துத் தாக்கிய அந்த வரலாற்று நிகழ்ச்சிகளை ஆதிகாலத்தில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் இராம இராவணச் சண்டையுடன் ஒப்பிட்டும் பேசியும் பரப்பியும் வந்தனர். இதற்கு உறுதுணையாகத் தமிழகச் சோழ மன்னர்களையும் ஆழ்வார்கலையும் பயன்படுத்திக்கொண்டனர். ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால் பிராமணர்களால் உருவாக்கப்பட்ட ஆழ்வார்கள் அந்தக் காலத்து ஆர்.எஸ்.எஸ். காரர்கள் என்பது தெரிய வரும்.

தொடக்கத்தில் உதாரணமாகப் பயன்படுத்தப்பட்ட இராமாயண நிகழ்ச்சிகள் தென்னிந்தியாவில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளாகக் காலப்போக்கில் மாற்றப்பட்டன. இராசேந்திர சோழன் சிங்களத்தவன் 'மீது படையெடுத்தது இராமன் படையெடுத்ததாக மாற்றப்பட்டு இரு வேறு காலத்தில் நடந்த இருவேறு நிகழ்ச்சிகள் ஒரே நிகழ்ச்சியாக மாற்றப்பட்டன. தமிழர்களின் படையெடுப்பை எதிர்த்த சிங்கள மக்கள் அரக்கர்களாகச் சித்தரிக்கப்பட்டனர். இவ்வாறு படிப்படியாகப் பண்டைக்காலத்தில் இராவணனது லங்கா, சிங்களத்தின் பெயராக மாற்றப்பட்டது. இதை இராமாயண இலக்கியத்தில் தேவையான மாற்றங்களுடன் இராசேந்திர, குலோத்துங்க சோழன் அரசவைப் புலவர்களும் புராணீகரப் பிரச்சாரகர்களும் வெற்றிகரமாகச் செய்தனர். ஒட்டக்கூத்தர் இராமாயணத்திற்குச் சமசுகிருதத்தில் உத்தரகாண்டம் என்று ஒன்றை எழுதிச் சேர்த்தார். இதைக் கம்பன் தன் இராமாயணத்தில் சேர்க்கவில்லை என்று பரமசிவய்யர் குறிப்பிடுகிறார்.

சேது மன்னர்கள் ஆண்ட பகுதி சேது என்று அழைக்கப்படுகிறது. இன்றுள்ள இராமேசுவரம் அன்று சேதுபதி என்று அழைக்கப்பட்டது. 'பதி' என்றால் இறைவன் (சிவன்) என்பது பொருள். சேது மன்னர்கள் வழிபட்ட தலம் சேதுபதி என அழைக்கப்பட்டது. இக்கோயில் கிபி.12-ஆம் நூற்றாண்டு வரை ஒரு சிவனடியார் பூசை செய்து வர சேது மன்னர்கள் வணங்கியும் பேணிக் காத்தும் வந்தனர். சோழர்களின் இலங்கை படையெடுப்பிற்குப் முன்பே சேது மன்னர்களும் ஆரிய பிராமணர்களின் வலையில் வீழ்ந்தனர்.

இராமன் இலங்கைக்குச் செல்லும் வழியில் இந்தத் தீவிலிருக்கையில் சிவ லிங்கத்தை நட்டு அதற்கு வழிபாடு நடத்தியதாக இலக்கிய பொய்யர்கள் கூறினர். இதை சேது மன்னர்களும் நம்பி சேதுபதி என்பதை இராமேசுவரம் என மாற்றம் செய்ய ஒப்புதல் அளித்தனர்.

இராமனும் அவன் தாயும் விட்ணு பக்தர்கள் என்பதே வால்மீகியின் கருத்து. அயோத்திய காண்டம் சர்க்கம் 1, 7-ஆவது பாடலிலும் பாலகாண்டம் சர்க்கம் 75 பாடல்கள், 11லிருந்து 20 வரையிலும் விட்ணுவை உயர்த்தியும் அது சிவனுக்கு மேலான தெய்வம் என்றும் குறிப்பிடப்படுகிறது. அதனால்தான் இராம பக்தர்களான பாரதிய சனதாவினர் ஆட்சிக்கு வந்தும் கூட சிவராத்திரிக்கு அரசு விடுமுறை அளிக்க முன்வரவில்லை. மாறாக ராமநவமி, கிருட்டிணன் பிறந்த நாள் போன்ற விழாக்களுக்கு அரசு விடுமுறை அளிக்கப்பட்டது. இந்திய மக்களால் வணங்கப்படும் முழு முதல் கடவுளான சிவபெருமானுக்காக நடத்தப்படும் சிவராத்திரியை அரசு ஏற்பளிக்காதது ஏன் என்று இப்போது புரிகிறதா?

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே இராமன் தன் தெய்வசக்தியால் பாலம் கட்டியது உண்மைதான் என்று பேசியும் பரப்பியும் வருபவர்களுக்கு ஆய்வாளர் அமிர்தலிங்கய்யர் ஒரு வினா வைக்கிறார்.

பிராமணர்களின் மந்திரங்கள், ஹோமங்கள், யாகங்கள் ஆகியவை தெய்வீக வலிமையானது எனில், அலெக்ஸாண்டரின் படையெடுப்பின் போதும், அதன்பின் சைத்தியர்களின் தாக்குதல்களின் போதும், ஹுணர்களின், முகலாயர்களின் படையெடுப்பின் போதும், அவர்களைத் தடுத்து நிறுத்த முடியாத காரணமென்ன?

இராம, இராவண சண்டை என்பதே வால்மீகியின் இராமாயணம், இதில் தெய்வீகத் தன்மை எதுவும் கிடையாது. தெய்வாதீனமாக நிகழும் நிகழ்ச்சி எதுவுமே இல்லை. நாராயணனின் திரு அவதாரம்தான் இராமன் என்று கூறுவதும் இராமாயண கதைக்குப் புறம்பானது. வால்மீகியின் சுலோகங்களுக்குப் பின்னால் உள்ள மூலக்கதை மிகச் சாதாரணமான இயற்கையாக ஒரு அரச குடும்பத்தின் வாழ்க்கையில் நிகழக் கூடிய நிகழ்ச்சிகளைக் கொண்ட ஒன்று தான் என்ற முடிவுக்கு வருகிறார் அமிர்தலிங்கய்யர்.

சேது கால்வாய் திட்டம் அமையும் பகுதியில் காணப்படுவது மணல் மேடுகளே அல்லாமல், பாலம் அல்ல அது. இது இராமன் கட்டியது அல்ல எனக் கடலியல் வல்லுநர் மறவன் புலவு சச்சிதானந்தம் ஒரு நேர்காணலில் விளக்கம் அளித்துள்ளார்.

அறிவியல் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழரே சற்று சிந்தியுங்கள்.

13. மண்ணும் மதமும்

மதம் ஒரு போதைப்பொருள் என்கிறார் **(Religion is the opium of the People)** காரல்மார்க்ஸ். ஏன் அவ்வாறு கூறினார் என்று ஆராய்ந்து பார்த்தால் 'குடிப்பழக்கத்திற்கு அடிமையான ஒருவன் குடிப்பதற்குப் பணம் இல்லை என்றால் யாரும் இல்லாத நேரத்தில் தன் வீட்டு நிலையைக்கூட பெயர்த்து எடுத்துச் சென்று விற்றுக் குடித்துவிட்டு சாவகாசமாக நடந்து வருவான். தன் வீட்டுப் பொருளை பெயர்த்து எடுத்ததும் விற்றுக் குடித்ததும் தனக்கும் தன் குடும்பத்தாருக்கும் அவமானம், இழுக்கு என்று கருதமாட்டான். அதைப் போல் மதத்திற்குள் விழுந்துவிட்டவன் இறைவனை மறந்து பிறருக்குத் துன்பம் செய்யவும் பிற உயிர்களைக் கொல்லவும் தயங்க மாட்டான்' என்பது தெரிய வரும். மதம் மனித குலத்திற்குத் துன்பம் விளைவிக்கும் என்பதைக் கருத்தில் கொண்டே வள்ளலார் 'மதமான பேய் என்னைப் பிடியாதிருக்க வேண்டும்' என்கிறார்.

மனித குலத்திற்கு தீங்கு விளைவிக்கும் செயல் என்பதால் தான் புத்தர் ஆரிய பார்ப்பனர்களின் பொய்யான வேள்வி முறைகளையும் அவர்களது மத சம்பிரதாயங்களையும் எதிர்ப்பதற்காகத் தன் அன்பான மனைவியையும், அழகான குழந்தையையும் விட்டுப் பிரிந்து அரண்மனை வாழ்வையே துறந்து வெளியேறினார். அப்பொழுது அவருக்கு வயது 29 என்பது வரலாறு.

அதோடுமட்டுமா? மனித குலத்தை வாழவைப்பதற்காகத் தான் ஆட்சி செய்த மண்ணிற்கு (நாட்டிற்கு) வாரிசு இல்லையே என்று கூட நினைக்காமல் பிற்காலத்தில் தன் ஒரே மகன் இராகுலனையும் துறவியாக்கித் தெருவில் தன்னுடன் பிச்சைப் பாத்திரத்துடன் அழைத்துச் சென்றாரே அந்த உத்தமனின் பெயர் இந்திய மண்ணில் நிலைபெற்றுவிடாமல் புத்தவிகாரங்கள் அழிந்து போவதற்குக் காரணமாக இருந்த பொய்ப்பிரச்சாரகர்கள் தான் இன்று இராமர் பாலம் என்று கூச்சல் போடுகிறார்கள் காரணம் மதம்....

எந்த புத்தர் பார்ப்பனர்களின் பொய்ப் பரப்புரையை எதிர்த்தாரோ அதே புத்தரை விஷ்ணுவின் அவதாரம் என்று கூறி பூர்வீக இந்துக்களை சிவபக்தர்களை மூளைச் சலவை செய்து விட்டனர்.

ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன் என்று சொன்ன அறிஞர் அண்ணா மத சம்பிரதாயங்களை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் திருமூலர் கூறிய 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதை ஏற்றுக் கொண்டார். மதவாதிகள் மண்ணின் மீது ஆசை வைத்திருக்கிறார்கள். அதனால் அவர்கள் கொலை செய்வதற்குக்கூட அஞ்சுவதில்லை. மனிதநேயம் பார்ப்பவர்கள் இறைவன் மீது பற்றுக் கொண்டு அடுத்தவர்களுக்கு உதவி செய்து தான் ஆட்சி செய்த மண்ணையும் துறக்கத் தயாராகிறார்கள்.

கலிலியோ (1564-1642) இத்தாலிய நாட்டு மேதை இயற்பியல் கணிதம், வான இயல்களில் யாரும் கண்டறியாத அடிப்படை, விதிகளைக் கண்டுபிடித்து உலகிற்கு எடுத்துரைத்தவர். பூமி உருண்டை வடிவமானது என்றும் பூமி கதிரவனைச் சுற்றி வருகின்றது என்ற உண்மையையும் எடுத்துக் கூறினார். ஆனால், மேற்கத்திய மதவாதிகள் தங்கள் மதக் கோட்பாடுகளின்படி பூமி தட்டையானது **(Flat)** எனக் கூறினர். தங்கள் மதக் கருத்துக்களைப் பொய்யெனக் கருதிய அறிஞர் கலி லியோவிற்கு தண்டனை அளித்துச் சிறைப்பிடித்தனர். ஆனாலும், அஞ்சாது தனது கொள்கையை மக்கள் அறியும்படி செய்தார். கலி லியோவிற்கு இழைத்த கொடுமைக்காக பிற்காலத்தில் போப் ஆண்டவர் மன்னிப்புக் கோரினார் என்பது யாவரும் அறிந்த ஒன்றுதான்.

அறிஞர் அண்ணா 'வடக்கு வளருகிறது தெற்கு தேய்கிறது' என்று அன்றே குறிப்பிட்டார். இந்தியாவின் தென்பகுதி குறிப்பாக தமிழர்கள் எந்தத் துறையிலும் முன்னேறிவிடக் கூடாது என்பதில் வட நாட்டவர்கள் குறியாக உள்ளனர். தமிழர்களின் இசைக் கலையை தங்களது கலை என்றனர். தமிழிசை தந்த மூவரைத் தமிழர்களுக்கே தெரியாது செய்து விட்டனர். தமிழ்மொழியில் கிரியை செய்ய மந்திரம்

இல்லை என்கின்றனர். அதைப் போலவே சேது சமுத்திரத் திட்டத்தால் தமிழர்கள் பொருளாதார ரீதியாக முன்னேறிவிடக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளனர். இதைத் தமிழக் அரசியல்வாதிகள் புரிந்து கொண்டு தமிழர்கள் நலன் கருதி வடநாட்டவரின் பொய்ப்பிரச்சாரத்தை ஒன்று கூடி எதிர்க்கவேண்டுமே தவிர இதில் அரசியல் உள்நோக்கம் இருக்கக்கூடாது. அப்படி தமிழக அரசியல்வாதிகள் ஒன்றுபட்டுப் போராடும் நாள் எந்நாளோ அன்றுதான் தமிழர்களுக்கு நலன் தரும் நாளாகும்.

இராமரைப் பற்றி கருணாநிதி பேசியது கோடிக்கணக்கான இந்துக்களின் மனதைப் புண்படுத்திவிட்டது என பாரதிய சனதா கட்சியினரும் அவர்களது ஆதரவாளர்களும் பேசி வருகின்றனர். அவர்கள் இந்துக்கள் என்பவர்கள் யார்? என்பது பற்றி அறியாததால் இப்படிப் பேசி வருகின்றனர். சிவபெருமான் தான் இந்தியாவின் அடையாளம். இராமன் அல்ல. இந்துக்களாகிய பூர்வீகத் தமிழர்கள் தங்கள் குலதெய்வங்களாக முனியாண்டி, சடையாண்டி, கருப்பண்ணசாமியை வணங்குகின்றனர். இராமர் கிருட்டிணன் ஆரிய பார்ப்பனர்களின் குலதெய்வம். இது தற்போதுள்ள சங்கராச்சாரியார் தெரிவித்தக் கருத்து அதனால்தான் அவர் திருப்பதி கோவிலுக்கு சில ஆண்டுகளுக்கு முன் ஒரு கோடி ரூபாய் செலவில் பூணூல் காணிக்கையாக அளித்தார். சடையாண்டி, முனியாண்டி, கருப்பணன் என்று தங்கள் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டுவது அசிங்கம் என்று எண்ணும் ஆரிய பார்ப்பனர்கள் இந்திய மண்ணின் மீது ஆசை வைப்பது எந்த வகையில் நியாயம்? ஆனால் மதம் பற்றியும் இராமன் பற்றியும் ஏதும் அறியாத தமிழர்கள் மீது தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தி தங்கள் குல தெய்வப் பெயர்களை தமிழர்களுக்கு சூட்டி விட்டனர்.

இந்து என்ற பெயரில் வாக்கு வங்கியை உருவாக்கவும் தமிழர்களின் பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கவும், பாரதிய சனதா கட்சியினர் திட்டமிட்டு இராமர் பால சிக்கலை ஊதிப் பெரிதாக்கியுள்ளனரே தவிர இதில் வேறு நோக்கம் எதுவுமில்லை.

தமிழகத்திற்கு தண்ணீர் விட மறுக்கும் கேரளா, ஆந்திரா மற்றும் கருநாடக அரசுகளுக்கு எதிராகப் போராட முன்வராத பா.ச.க.வினர் சாதாரண மணல் மேட்டை, இராமர் பாலம் என்று கூறி இன்றும் தமிழர்களை அடிமைப்படுத்த நினைக்கின்றனர். இதைப் புரிந்து கொள்ளாத தமிழக அரசியல்வாதிகள் சிலரும் அவர்களுக்குப் பின்னால் நிற்பது வேதனைக்குரிய விசயம்.

ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால் மொத்தத்தில் இது ஆரிய திராவிடப் போர் என்பதை விட ஆரிய தமிழினப் போர் என்றுதான் சொல்ல வேண்டும். அன்று தமிழர் நாகரிகம் பரவியிருந்த சிந்து பகுதியை அழித்துத் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டியவர்கள் இன்று இராமர் பாலம் என்ற பெயரில் தமிழர்களின் நலனுக்கு உலைவைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர். இதில் தமிழர்கள் வாழப் போகிறார்களா? அல்லது தங்களது சொந்த மண்ணிலேயே வீழப்போகிறார்களா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

14. தேசியம் காக்கச் சில வழிகள்

''முன்னாளில் பாண்டிய வேந்தனொருவன் மேருவைச் செண்டாலடித்தானாம். சோழ அரசனொருவன் அம்மலையின் உச்சியில் வீரப் புலிக்கொடி நாட்டினான். சேர மன்னனொருவன் கைலாய மலைக்குச் சென்றான். இவையெல்லாம் இலக்கியக் கூற்று. புலவரின் புகழுரை என்று குறைத்து எண்ணுவதற்கில்லை. வரலாற்று நிகழ்வைச் சாற்றும் நிகழ்ச்சிகளே'' என்று எம்.எஸ். சுப்பிரமணி ஐயர் 1945-இல் வெளிவந்த தமது தஞ்சை நாயக்கர் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர்களின் நாகரிகம் இந்தியா முழுவதும் பரவியிருந்தது. தமிழ் மன்னர்கள் தங்கள் குல அடிப்படையில் சேர, சோழ, பாண்டியர் என்று பிரிந்து இருந்து ஆட்சி செய்தாலும் இந்திய நாட்டின் பண்பாட்டிற்கு ஆரிய படையெடுப்பால் ஊறு நேர்ந்த பொழுதெல்லாம் அதனைத் தடுத்து நிறுத்தும் வகையிலும் தேசியம் காக்கும் வகையிலும் பல போர்களை நடத்தியுள்ளனர். தேசியம் காப்பதற்காகத் தாங்கள் நடத்திய போரின் நினைவாக ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்றும், இமயவரம்பன் என்றும் தங்களுக்குப் பெயர் சூட்டிக் கொண்டனர். சேரன் செங்குட்டுவன், கண்ணகிக்குச் சிலை அமைக்க இமயமலை சென்று கல்லெடுத்து அக்கல்லை கங்கையில் புனித நீராட்டி எடுத்து வந்தான் என்றால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இமயமலையையும், கங்கையையும் தமிழர்கள் புனிதமாகவும் இந்தியாவின் அனைத்துப் பகுதியையும் தங்கள் நாடே என்றும் அங்கு வாழும் மக்கள் தம் மக்கள் என்றும் கருதினர் என்பதற்கு இதுவே சான்றாக உள்ளது.

இந்தியா விடுதலை அடைந்த பிறகு நம்மை நாம் ஒன்றுபட்டு ஆள்வதற்கு ஒரு புதிய அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றிக் கொண்டோம் அதனை நடைமுறைப்படுத்திய நாளை நினைவுகூறும் வகையில் ஒவ்வொரு

ஆண்டும் சனவரி 26-ஆம் நாளை குடியரசு நாளாகக் கொண்டாடி வருகிறோம். குடியரசு நாளுக்கு அரசு விடுமுறை அளித்து தேசியக் கொடி ஏற்றி மகிழ்ந்தால் மட்டும் போதுமா? தேசியம் காக்கப்பட வேண்டாமா? இந்தியா பல மொழிகள் பேசும் மாநிலங்களைக் கொண்ட நாடு நடுவனில் கூட்டாட்சி மாநிலத்தில் தன்னாட்சி என்பதுதான் நமது அரசியல் சட்டத்தின் முக்கியக்கூறு. இந்தியாவின் அனைத்து மக்களின் உணர்வுகள் மதிக்கப்படவில்லை என்றால் அது தேசியத்தை சின்னாபின்னமாக்கிவிடும் என்பதை உணர்ந்ததால்தான் இந்தியா மொழிவாரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. அதற்கு அன்றைய அரசியல் தலைவர்களும் உடன்பட்டனர்.

இந்தியத் தேசியம் காப்பதற்காக எடுக்கப்பட்ட முதல் நடவடிக்கை இந்தியாவின் இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் பட்டேல் தன்னாட்சி அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் (சுதேச சமஸ்தானங்களை இந்திய யூனியனோடு) இணைத்தது. இரண்டாவதாக இந்திய மாநிலங்கள் மொழி அடிப்படையில் பிரிக்கப்பட்டன.

ஆற்று நீர்ச் சிக்கல், இட ஒதுக்கீட்டுச் சிக்கல், அயல்நாடுகளில் வாழும் இந்திய மரபு வழியினர் சிக்கல், மதவாதமும் பயங்கரவாதமும் ஆகியவை தேசியத்திற்கு தடைக்கற்களாக இப்போது உள்ளன.

இந்தியா விடுதலை அடைந்தவுடன் இந்திய ஆறுகள் அனைத்தையும் தேசிய ஆறுகளாக அறிவித்து அவைகள் இணைக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொண்டிருக்க வேண்டும். அதைச் செய்யத் தவறியதால் இன்று ஆற்று நீர்ச்சிக்கல் மாநிலங்களுக்கிடையே கருத்து வேறுபாட்டை ஏற்படுத்தியுள்ளது. அண்டை நாடுகளான பாகிஸ்தான் வங்கதேசம், பூடான் போன்ற நாடுகளுக்கும் இந்தியாவிற்கும் இடையே இருந்த ஆற்று நீர்ச் சிக்கல்கள் தீர்க்கப்பட்டுள்ளன. ஆனால், இந்தியாவில் குறிப்பாகத் தென்னிந்தியாவில் உள்ள காவிரி, பெரியாறு, பாலாறு போன்ற ஆறுகளால் தமிழ்நாடு கருநாடகம், ஆந்திரம், கேரளம்

ஆகிய மாநிலங்களுக்கிடையே எழுந்துள்ள சிக்கல்களுக்குக் காரணம் யார் என்று ஆராய்ந்தால் தன்னலமிக்க அரசியல் கட்சிகள் தான் என்பது தெரியவரும். இந்த மாநிலங்களில் தங்களின் கட்சியை வலுப்படுத்தவும் ஆட்சியைப் பிடிக்கவும் முயற்சியில் ஈடுபடும் அரசியல் கட்சிகள் தேசியம் பற்றிச் சிந்திக்கவில்லை. தேசியத்தை அடிப்படையாக வைத்து அரசியல் நடத்தினால் ஆட்சியில் அமருவது எளிதல்ல என்பதைத் தெரிந்து கொண்ட தேசியக் கட்சிகள் கூட மாநிலத்திற்கு மாநிலம் வெவ்வேறு கருத்துக்களைக் கடைப்பிடிப்பது வேதனைக்குரிய விசயம்.

காவிரி ஆற்றுச் சிக்கல் இன்று நேற்றல்ல இராணி மங்கம்மாள் காலத்திலிருந்து நீடித்து வருவதாக வரலாறு கூறுகிறது. அன்று நடந்தது மன்னராட்சியாக இருந்திருக்கலாம். ஆனால் இன்று நடப்பது மக்களாட்சி இந்திய மாநிலங்களுக்கிடையே ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்து வைப்பது உச்சநீதிமன்றத்தின் பணி. உச்சநீதிமன்றத் தீர்ப்பை அனைத்து மாநிலங்களும் மதித்து நடக்க வேண்டும் என்று நமது அரசியல் சட்டம் கூறுகிறது. ஆனால் இங்கு நடப்பது என்ன? உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு விவாதத்திற்கு உள்ளாகும்போதும் அரசியல் கட்சிகள் தீர்ப்பை மதிக்கத் தவறும் பொழுதும் தேசியத்தின் வலிமை குன்றத் தொடங்கிவிடும் என்பதை அரசியல் கட்சிகள் புரிந்து கொள்ளாதது கவலையளிக்கக் கூடியது.

முல்லைப் பெரியாற்று அணையின் நீர் மட்டத்தை 142 அடி வரை உயர்த்திக் கொள்ளலாம் என்பது உச்சநீதிமன்றத் தீர்ப்பு. ஆனால் அதனை ஏற்கக் கேரள அரசு மறுத்துவிட்டது. இச்சிக்கல் குறித்துத் தமிழக அரசியல் கட்சிகள் கண்டனம் தெரிவித்ததோடு நின்றுவிட்டன. இதுபோல சிக்கல் காவிரி மற்றும் பாலாற்றுச் சிக்கல்களும் உள்ளன. உச்ச நீதிமன்றத் தீர்ப்பை நடுவண் அரசோ, மாநில அரசோ மதித்து நடக்கவில்லை எனில் தேசியத்தின் நோக்கம் சிதைந்து விடும் என்பதில் ஐயம் இல்லை.

நடுவண் அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்கு உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது. நாட்டின் பெரும்பான்மையான பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் உணர்வுகளைப் பாதித்துள்ளது. இந்தியா பல மதங்களையும் சாதிகளையும் உடைய நாடு என்பதால் இது ஒரு மதச்சார்பற்ற நாடு என்று அரசியலமைப்பு கூறுகிறது. ஆனால் நடுவண் அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் இதுவரை உயர்ந்த சாதியைச் சேர்ந்தவர்களே ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளனர். அக்கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்குவது நியாயமான ஒன்றுதான். ஆனால் உச்சநீதிமன்றம் இதற்குத் தடை விதித்துத் தீர்ப்பு அளித்திருப்பது எதிர்காலத்தில் படித்த பிற்படுத்தப்பட்ட இளைஞர்களிடையே தேசிய உணர்வை வளர்ப்பதற்கு வழிவகுக்குமா என்பது சிந்திக்கத்தக்கது. தேசியம் காக்கப்பட வேண்டுமானால் இந்திய இளைஞர்களிடையே நாட்டைப் பற்றிய உயர்ந்த நம்பிக்கையை அரசியல்வாதிகளும், நீதிமன்றங்களும் அளிக்க முன்வரவேண்டும்.

உலகின் பல்வேறு நாடுகளில் தமிழர்கள் உள்பட இந்திய மரபுவழியினர் வாழ்ந்து வருகின்றனர். ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் கூலிகளாகச் சென்ற இந்தியர்கள் இலங்கை, மலேசியா போன்ற நாடுகளில் குடியமர்த்தப்பட்டனர். இப்போது அந்நாடுகளில் அவர்களின் உரிமை வினாக்குறியாக உள்ளது. துருக்கி நாட்டில் அந்நாட்டு அரசுக்கும், மக்களுக்கும் எதிராக ஆங்கிலேய அரசு அன்று செயல்பட்டதை எதிர்த்து இந்தியாவில் அலி சகோதரர்கள் கிலாபத் இயக்கத்தை நடத்தினர். இந்திய மக்களின் உணர்வு மதிக்கப்பட வேண்டும் அப்பொழுது தான் தேசியம் காக்கப்படும் என்பதை உணர்ந்த காந்தியடிகள் 1919-ஆம் ஆண்டு கிலாபத் இயக்கத்திற்கு ஆதரவு தெரிவித்துப் போராட்டத்தில் பங்கு கொண்டார்.

இந்திய மரபுவழியினராகிய தமிழர்களின் உரிமைக்கு இப்போது இலங்கையிலும், மலேசியாவிலும் ஊறு நேர்ந்துள்ளது. தமிழர்களின்

உரிமைகளை அந்நாடுகளில் பாதுகாத்துக் கொடுப்பது நடுவண் அரசின் கடமையாகும். பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இலங்கையில் உணவும், மருந்தும் இன்றி அல்லல்படும் இவ்வேளையில் இலங்கை அரசால் அவர்கள் கொன்று அழிக்கப்படுகின்றனர். அண்மையில் சந்தேகத்தின் பெயரால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்களைக் கொழும்பில் இலங்கை அரசு கைது செய்துள்ளது. இதேபோல் மலேசியாவில் வாழும் தமிழர்கள் உள்பட இந்திய மரபுவழியினர் தங்கள் உரிமைகளைக் காக்கப் போராட்டம் நடத்தியபோது அவர்கள் அந்நாட்டு அரசால் தண்டிக்கப்பட்டுள்ளனர். இந்தியச் சிறுபான்மையினருக்கு எதிராக மலேசிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு இந்திய மரபுவழிமக்களுக்கான பன்னாட்டு அமைப்புக் கண்டனம் தெரிவித்துள்ளது.

மலேசியாவில் மற்ற மக்களுடன் சமமான தகுதிகளுடன் இணக்கமாகவும், அமைதியாகவும் வாழ்வதற்கேற்ற சட்ட அளவிலான உரிமைகளை அந்த அரசு அளிக்காததாலேயே இந்திய மரபுவழியினர் அங்கு போராட வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்பது உலகப் பார்வையாளர்களின் கருத்தாக உள்ளது.

அயல்நாடுகளில் வாழும் தமிழர் உள்பட இந்திய மரபுவழியினருக்கு ஏற்படும் துயரத்தை நடுவண் அரசு உடனடியாகத் தலையிட்டுத் தடுத்து நிறுத்த முயல வேண்டும். அண்மைக் காலங்களில் இந்திய அரசு மெத்தனம் காட்டி வருகிறது. இலங்கைத் தமிழர்களுக்குச் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் சில அமைப்புகள் உணவு மற்றும் மருந்துப் பொருட்களை அனுப்ப முன்வந்தும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்காததை இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்குத் தடையாக இருப்பது மதவாதம், தீவிரவாதம், பயங்கரவாதம் வாக்கு வங்கியைக் கருத்தில் கொள்ளாமல் நடுநிலையுடன் அரசியல் கட்சிகள் செயல்பட்டால் மட்டுமே தேசியம் காக்கப்படும். உண்மையான மதச் சார்பற்ற

தன்மையே இந்திய தேசியத்தைக் காக்கும். இதை உணர்ந்து தேசியம் காப்பதற்குக் காந்தியடிகளின் அணுகுமுறையைத் துணிச்சலுடன் நடுவண் அரசு மேற்கொள்ளுமானால் நல்ல தீர்வு கிடைக்கும்.

15. தமிழிசை வரலாறு

வெற்றியை அறவழியில் பெறுவதே தமிழரின் பண்பாடு. அறவழி என்பது இறை வழிபாட்டின்மூலம் வருவது. இறை வழிபாட்டிற்கு உறுதுணையாக இருப்பது இசை. சங்ககாலத் தமிழர்கள் சிவன், முருகன், திருமால், கொற்றவை முதலிய தெய்வங்களுக்குக் கோயில்களும், பத்தினிக் கோயில்களும் அமைத்தனர். அக்கோவில்களில் தெய்வத்தை இசையால் பாடல்கள் பாடி வழிபட்டனர் என்பதற்கு சான்றாக சங்க நூல்கள் உள்ளன.

இயல், இசை, நாடகம் எனத் தொன்றுதொட்டே தமிழ் மூன்றாகப் பிரிந்திருந்தது. இயற்றமிழில் வல்லவர் புலவர் என்றும், இசைத் தமிழில் வல்லவர் பாணர், பாடினியர் என்றும், நாடகத் தமிழில் வல்லவர் கூத்தர், கூத்தியார் என்றும் கூறப் பெற்றனர். தமிழ் என்று தோன்றியதோ அன்றே இசையும் தோன்றியது என்பர் அறிஞர்.

சங்கத் தமிழ் இசை

பத்துப் பாட்டில் உள்ள சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை என்னும் இரண்டினாலும் தமிழ் இசைவாணர் பற்றிய செய்திகள் பலவற்றை அறியலாம். சிலப்பதிகாரத்து அரங்கேற்று காதையில் இசை ஆசிரியன், குழல் ஆசிரியன், யாழ் ஆசிரியன், மத்தள ஆசிரியன் ஆகியவர்தம் இயல்புகள் கூறப்பட்டுள்ளன. தமிழ் இசை பற்றி அறிய பல நுண்ணிய கருத்துக்கள், முத்தமிழ் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் பொதிந்து கிடக்கின்றன.

குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற ஐந்து வகை நிலங்களுக்கும் தனித்தனியே யாழ் முதலிய இசைக் கருவிகளும், பண்களும் குறிக்கப்பட்டுள்ளன.

"குறுமகள் திணைப்புனத்தில், குறிஞ்சிப் பண் பாடினாள். தினை உண்ண வந்த யானை அப்பண்ணின் இசையில் மயங்கி உறங்கி

விட்டது" என அகநானூற்றில் வரும் செய்தி, குறிஞ்சிநில மக்களின் இசைப் பயிற்சியினை இனிது உணர்த்தும். ஊசல், கந்துகவரி, வள்ளைப்பாட்டு என்டன பெண்களுக்கு உரியவை. குறிஞ்சி நிலப் பெண்களின் குரவைப் பாட்டும், பாலை நில மகளிரின் கொற்றவை வழிபாட்டுப் பாடல்களும் சிலப்பதிகாரத்தில் காணப்படும். கானல் வரிப்பாடல்களும் தமிழ் இசையின் சிறப்பினை நன்கு உணர்த்தும் சான்றுகளாகும்.

தமிழ் இசையில் பண் என்றும், திறம் என்றும் இருவகை உண்டு. பண்களிலிருந்து பிறப்பவை திறங்கள். அவை பண்களுக்கு இனமானவை.. இவற்றின் விரிவை சங்க நூல்களிலும், அவற்றில், இவை பற்றி உள்ள உரைகளிலும் காணலாம். தமிழ் இசைக்கு இலக்கியமாக இப்போது உள்ள தமிழ்நூல்களில் பழமையானது, பரிபாடல் என்பதும், அதற்குப் பண் வகுக்கப்பட்டிருந்தது என்பதும் ஆராய்ச்சியாளர்களின் முடிவு.

அழிந்துபோன அருந்தமிழ் நூல்கள்

நம் தமிழ் நூல்கள் அழிந்த காலத்தையே அறியமுடியாதபோது, அவை தோன்றிய காலத்தை எவ்வாறு அறிந்து கூறுவது?

இவை தவிர பழஞ்சுவடிகளைக் கொண்டுபோய் ஆடிப் பதினெட்டாம் பெருக்கில் ஆற்றில் கொட்டினால் புண்ணியம் என்ற பொய்க் கொள்கை ஒன்று தமிழகத்தில் பரப்பப்பெற்று வந்ததால், தமிழர்கள் தங்கள் கையாலேயே அள்ளிக் கெண்டுபோய் ஆறுகளில் கொட்டிவந்த வழக்கத்தினால் அழிந்து போனவை பல .... பல!" அவையாவன:

சிற்றிசை, பேரிசை, இசைநூல்-இசைநுணுக்கம்-இசை விளக்கம்-பஞ்ச மரபு-பஞ்ச மரபாரதீயம்-பண்ணமைதி-பண்விரி விளக்கம்-பாட்டும் பண்ணும்-ஆளத்தியமைப்பு-கருவியிலக்கணம்-தாள சமுத்திரம்-தாள வகையோத்து-இசைக்கூறு-பாடற் பண்பு முதலியன.

பழந்தமிழ் இசையின் வகைகள்

தமிழ் இசைகளுள் முதன் முதலில் தோன்றியது "தாரம்" என்ற இசையேயாகும் என்று தமிழ் ஆராய்ச்சியாளர் தங்க வயல் லோகிதாசன் தமது "தமிழ் மாலை" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். தமிழ் இசையின் வகைகளாவன :

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பனவாகும்.

இசையை தமிழர்கள் எங்கிருந்து பெற்றார்கள்? இது எல்லோருடைய மனதிலும் எழும் கேள்வி.

இன்று சுனாமி என்றழைக்கப்படும் பேரழிகளால் கொள்ளை கொண்டு போன லெமூரியா கண்டத்திலே வாழ்ந்தவர்கள் சங்கத் தமிழர்கள். இவர்கள் தங்களது இசை நுட்பத்தைப் பறவை மற்றும் விலங்குகளின் ஒலியிலிருந்தே பெற்றனர் என்பதை ஒரு சில ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

வடமொழியில் ஏழு ஸ்வரங்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த எழு வகையான ஒலிகளையும் தமிழர்கள் ஆரியர்கள் இங்கு வருவதற்கு முன்பே அறிந்திருந்தனர். அவை :

1. சட்ஜமம் - மயிலின் அகவல்
2. ரிஷபம் - மாட்டின் கத்தல்
3. காந்தாரம் - ஆட்டின் கத்தல்
4. மத்யமம் - அன்றில் பறவையின் கத்தல்
5. பஞ்சமம் - குயிலின் கூவல்
6. தைவதம் - குதிரையின் கனைப்பு
7. நிஷாதம் - யானையின் பிளிறல்.

இதிலிருந்துதான் 'சரிகமபதநி' என்ற இசை நுணுக்கம் உருவானது என்பதை இசை வல்லுநர்கள் ஒப்புக்கொள்கின்றனர்.

இசையானது ஒன்றால் ஒன்று தோன்றுகின்றன என்பதைத் தமிழர்களே முதன் முதலில் கண்டனர்.

அக்காலத் தமிழர்கள் நாடகத் தமிழையும் இசைத் தமிழையும் இரு கண்களாக எண்ணிப் போற்றினர். இவ்விரு துறைகளையும் கொள்கைகளாக்கி வளர்த்தனர்.

அக்கால மன்னர்கள், கூத்தர், பாணர், பொருநர், வயிரியர், கோடியர், விறலியர், யாழோர் எனப்படவோரைப் பெரிதும் ஆதரித்தும் பரிசுகள் வழங்கியும் வந்தனர்.

இவ்வுண்மையை "ஒண்ணுதல் விறலியர் பூவிலை பெறுகென மாட மதுரையும் தருகுவன்" (புறம். 32) என்னும் வரிகளால் அறிய முடிகிறது.

பாணர்களின் (இசை அறிஞர்களின்) நிலை

பண்டைக் காலத்தில் தமிழ் இசையை வளர்த்தவர்கள் பாணர்கள். அவர்கள் நாடோடிகளாக வாழவில்லை. தமக்கென சிறந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து வாழ்ந்தனர். அவை "மருங்கு வண்டு, சிறந்தார்க்கும் மணிப்பூம் ஆடை அது போர்த்துக் கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்து செல்லும் வைகைப் பேரியாற்றின் கரையோரங்களில் அமைந்த துறைகள்தோறும் அமைந்த இல்லங்களோ பயிர் வண்டு மிழற்றும் பல்வேறு பூத்திரளையுடைய பூங்காக்களும் பைம்பொழில் சோலைகளும் சூழ்ந்த வண்ணமிருந்தன".

இதனை,

"அவிரறல் வையைத் துறைதுறைதோறும்
பல்வேறு பூத்திரள் தண்டலை சுற்றி
அமுது பட்டிருந்த பெரும்பாண் இருக்கையும்"

என மதுரைக் காஞ்சியில் மாங்குடி மருதனார் குறிப்பிடுகின்றார்.

சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் நாயக்கர்கள் ஆட்சி தமிழகத்தில் வலுப்பெற்றது. கி.பி.1529 முதல் கி.பி. 1736 வரை மதுரை, தஞ்சை, செஞ்சி முதலிய பகுதிகளை ஆண்ட நாயக்கர்கள் வடமொழிப் பற்றுடையவர்கள். நாயக்கர்களும் கி.பி.15ம் நூற்றாண்டு முதல் 18ம் நூற்றாண்டு வரை வாழ்ந்த தமிழ்ப்புலவர் பெருமக்களும் முற்றிலுமாக வடநூல்முறைகளைப் பின்பற்றினர். அவர்கள் பாடியவை ஒன்று வடவர் சமயக் கொள்கைகளைக் கொண்டு விற்பனவாக இருந்தது. இரண்டாவதாக தமிழ் இசை வகைகளுக்கு வடமொழிப் பெயர்கள் சூட்டப்பட்டன. வடமொழிப் பாடல்கள் பாடியவர்கள் மட்டுமே மன்னர்களால் பெரும் செல்வந்தர்களால் ஆதரிக்கப்பட்டனர். புகழப்பட்டனர். இதனால் வடவர் கதைகளைப் பாடுவதே சிறப்பென தமிழ்ப் புலவர்கள் கருதினர். தமிழர்களின் வேதமாகிய தேவார திருவாசக திருமந்திரத் திருமுறைகள் ஓரங்கட்டப்பட்டன.

நமது கோவில்களுக்குள் தமிழர் வணங்கிய கடவுள்களான சிவனை ருத்திரன் என்றும் முருகனை தண்டபாணி, பாலசுப்பிரமணி என்றும், பத்தினித் தெய்வம் கண்ணகி கொற்றவை ஆகிய தேவதைகளை துர்க்கை என்றும் திருமாலை, ஹரி, விஷ்ணு, நாராயணன், ராமன், கிருஷ்ணன், கோபாலன், கோவிந்தன் என்றும் மாற்றிவிட்டனர். இதேபோல்தான் தமிழிசையின் பெயர்களை தங்களது வடமொழியில் மாற்றிவிட்டனர் என்பது அறிஞர்கள் கண்ட உண்மை.

தமிழிசை வளர்த்த மும்மூர்த்திகள் :

நாயக்கர்களின் வீழ்ச்சிக்குப்பின் வெள்ளையர்களின் ஆட்சி தமிழகத்தில் துவங்கியது. இக்காலக் கட்டத்தில்தான் ஆதிமூர்த்திகள் என்று போற்றப்படும் இசைவாணர்கள் சீர்காழி முத்துத்தாண்டவர், தில்லை விடங்கன் மாரிமுத்தாப்பிள்ளை, சீர்காழி அருணாசலக் கவிராயர் ஆகியோர் தமிழ் இசைக்கு புத்துயிர் அளித்து சிறப்பித்தனர்.

சர். மு. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் 1944ல் முதல் தமிழ் இசை மாநாட்டைக் கூட்டினார். தமிழ்நாடெங்கும் தமிழிசை முழங்க வேண்டும் என்பது எனது ஆவல் என்று கூறினார்.

''தாய்மொழி மூலம் கல்வி கற்காத காரணத்தால் நாகரிகம் மிகுந்த உலகின் நடுவில் இந்தியா அறியாமை மிகுந்த நாடாக நிற்கிறது'' என்று அன்னிபெஸன்ட் அம்மையார் கூறினார். அதேபோன்றுதான் தமிழர்கள் ''தமிழொடு இசைப்பாடல் மறந்தறியேன்'' என்ற நாவுக்கரசர் பெருமானின் வார்த்தையை மறந்து ஆரிய மொழி மயக்கத்தில் உள்ளனர். அவர்களை விழித்தெழச் செய்ய மதுரை ''திருநாவுக்கரசு இசை ஆராய்ச்சி அறக்கட்டளை'' மேற்கொண்டுள்ள முயற்சியையும், செயலையும் போற்றுவோமாக!

இக்கட்டுரை மதுரை திருநாவுக்கரசு இசை ஆராய்ச்சி அறக்கட்டளை சார்பாக வெளியிடப்பட்ட நூலில் வெளியானது.

16. அரிசனங்களும் தலித் கோவிந்தமும்

ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பதும் அன்பே சிவம் என்பதும் தமிழர்கண்ட சமயக்கருத்தாகும். இதுவே இந்தியா முழுவதும் பரவியிருந்தது என்பதற்கு அகழ்வாய்வின் போது சிந்து சமவெளியில் கண்டெடுக்கப்பட்ட சிவலிங்கங்களே சான்றாக உள்ளன என்பது ஆய்வறிஞர்களின் முடிவு, கல்நெஞ்சங் கொண்டவரையும் ஒரு நொடியில் கனிய வைத்துவிடலாம். எல்லாவற்றிற்கும் அன்பே காரணமாகும். அன்பு செலுத்தும் மனிதர்களை இவ்வுலக மக்கள் தெய்வநிலைக்கு உயர்த்தியிருக்கிறார்கள் என்பது வரலாறு. அன்பும் கடவுளும் ஒன்றுதான். கடவுளும் அன்பும் வேறு வேறு அல்ல என்பது தமிழர் கண்ட உண்மை.

கடவுளின் பெயரால் ஒன்றுபட்டுக்கிடந்த இந்தியச் சமூகம் ஆரியப்படையெடுப்பால் சிதறுண்டு போய் அவர்களின் நயவஞ்சகத்தால் சாதி மதம் என்ற வலைக்குள் சிக்கிக் கொண்டதால் தொழில் அடிப்படையில் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று பிரிக்கப்பட்டது. சமுதாயத்தில் இந்தப் பிரிவுகளால் வேறுபாடுகள் நிலவத் தொடங்கின, இந்தியாவில் ஆங்கிலேயர்கள் பிரித்தாளும் கொள்கையைப் பின்பற்றினர் என்றாலும் அதற்கு முன்னமேயே ஆரியர்கள் சமயத்தின் அடிப்படையில் தங்களின் சனாதன தருமத்தை நிலை நிறுத்துவதற்காக இந்திய மக்களைப் பிரித்தனர் என்பதுதான் வரலாற்று உண்மை.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் படித்தவர்கள் சமூக, சமய, சீர்திருத்தங்களை மேற்கொண்டனர். அதில் தீண்டாமை ஒழிப்பும் முக்கியச் சிக்கலாக முன்னிறுத்தப்பட்டது. காந்தியடிகள் தனது சீர்திருத்தத் திட்டத்தில் தீண்டாமை ஒழிப்பையும் ஒரு பகுதியாகச் சேர்த்திருந்தார். "ஹரிசன்" என்ற செய்தி ஏட்டை நடத்திய அவர் 'ஹரிசன் சேவக் சங்' என்ற அமைப்பையும் ஏற்படுத்தினார். அதன்மூலம் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை உயர்த்திவிடலாம் என்ற கனவு

கண்டார். ஆனால் அது எந்த அளவிற்குப் பயன்பட்டு வருகிறது என்பதைப் படித்தவர்கள் உணர்வார்கள். வாக்கு வங்கி எங்கெல்லாம் உள்ளதோ அங்கெல்லாம் அரசியல்வாதிகளால் உருவாக்கப்படும் புதிய திட்டங்கள் தாழ்த்தப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக தீட்டப்படுவதில்லை இதனை டாக்டர் பீமாராவ் அம்பேத்கர் போன்றவர்கள் உணர்ந்தவர்கள்,

'அரிசன் (கடவுளின் குழந்தை) என்ற சொல்லில் உள்ள 'அரி' என்பது பார்ப்பனர்களின் மூதாதையர் பெயர் என்பதனை உணர்ந்த அம்பேத்கர் 'அரி' என்ற சொல்லை தங்கள் இனத்திற்கு வைத்துக் கொள்வது மானக்கேடு எனக் கருதினார். தங்கள் இன மக்களுக்கு ஏற்பட்டுள்ள சாதிக் கொடுமையை எதிர்த்து 'அனைத்திந்திய பாரதீய தலித் வாசக சபை' என்ற அமைப்பையும் தோற்றுவித்தார். அவரைத் தொடர்ந்து இந்தியாவின் மேற்குப் பகுதியில் சோதிராவ் பூலே 'சத்ய சோதக் சமாஜத்தை' நிறுவினார். கேரளாவில் நாராயணகுரு 'நாராயண தர்ம பரிபாலன யோகம்' என்ற அமைப்பை ஏற்படுத்தித் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளில் சிவவழிபாட்டை மேம்படுத்தும் வகையில் கோவில்கள் பல கட்டி அம்மக்களிடையே தன் உணர்வை ஏற்படுத்தினார். தமிழகத்தில் ஈ.வெ.ரா. பெரியார், வள்ளலார் ஆகியோர் போராடிச் சாதிக் கொடுமைகளைக் கண்டித்தனர்.

அன்று அரிசன் என்ற பெயரைப் பயன்படுத்தியவர்களால் இதுவரை தாழ்த்தப்பட்ட மக்களின் சமய வாழ்க்கையில் தீட்டு என்ற சொல் நீக்கப்படாமலே நிற்கிறது. இக்காரணம் கருதியே தலித் என்ற புதிய சொல்லைத் தங்கள் இனத்திற்கு அம்பேத்கர் பயன்படுத்தினார்.

இந்து மதத்தின் மீது நம்பிக்கையுள்ளவர்களின் எண்ணிக்கை சரிந்து வருவதை ஈடு செய்வதற்காகத் தலித்துகள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீனவர்களைப் பூசாரியாக்கித் திருப்பதி கோவிலில்

தலித் கோவிந்தா மச்சய கோவிந்தா திட்டம் என்பது கொண்டு வரப்பட்டுள்ளது. இச்செய்தி அனைவருக்கும் மகிழ்ச்சியளிப்பதாக இருந்தாலும் மக்களிடையே ஓர் ஐயம் எழுந்துள்ளது. ஏனெனில் அச்செய்தியின் தொடர்ச்சியாகக் கீழ்க்கண்டவாறு வேறொரு செய்தியும் உள்ளது. அதாவது தலித் கோவிந்தா திட்டத்தின் கீழ் திருப்பதி கோவிலிலிருந்து கடவுள் சிலை ஊர்வலமாகத் தலித்துகள் வாழும் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்குப் பயிற்சி பெற்ற தலித் பூசாரிகள் கடவுள் சிலைக்கு வழிபாடு நடத்துவர். இதேபோல் கடற்கரையோரம் உள்ள மீனவர் குடியிருப்புப் பகுதிகளுக்கும் திருப்பதி கடவுள் சிலை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அங்கும் பயிற்சி பெற்ற மீனவர்கள் சிலைக்கு வழிபாடுகள் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று உள்ளது.

தலித்துகள் மற்றும் மீனவர்களுக்குப் பூசாரி பயிற்சி அளிக்கப்பட்டபின் அவர்கள் திருப்பதி கோவிலில் பூசாரிகளாக அமர்த்தப்படுவார்களா? அங்கு அவர்கள் தங்க வைக்கப்பட்டு பூசாரி பயிற்சி அளிக்கப்படுமா? என்பதுதான் இப்போது அந்த இன மக்களுக்கு எழுந்துள்ள ஐயம். அதுமட்டுமல்ல, அவர்கள் தொன்றுதொட்டு வழிபட்டு வரும் சிவ வழிபாட்டை மறைத்துத் திருப்பதி வழிபாட்டைப் புகுத்தி அவர்களை வைணவர்களாக்கித் தங்களுக்கு ஏற்றவர்களாக்கும் முயற்சிதானா? என்ற ஐயமும் எழுந்துள்ளது,

இந்து மதத்தின் மேல் நம்பிக்கையுள்ளவர்களின் எண்ணிக்கை சரிந்து வருவதற்குக் காரணம் இதுமட்டுமன்று. அதற்கு வேறு காரணங்களையும் சுட்டிக்காட்டலாம்,

இந்து மதத்தின் முழுமுதற் கடவுளாக மனித உருவமில்லாத சிவலிங்கமே இருந்தது. இதனை மாற்றிப் பார்ப்பனர்கள் தங்கள் இனத்தாரை முதன்மைப்படுத்தி அதற்கான புராணங்களையும் எழுதி இராமன், கிருட்டிணன், ஆஞ்சநேயர் என்று பொய்ப்பரப்புரை செய்து வருகின்றனர்.

இந்திய மக்களுக்கே உரித்தான பொங்கல் விழா சங்கராந்தி என்று மாற்றி அமைக்கப்பட்டது. அந்தந்தப் பகுதியில் நடந்த விழாக்கள் திட்டமிட்டு மறைக்கப்பட்டு அழிக்கப்பட்டன. எடுத்துக்காட்டிற்கு இந்திய மக்களுக்கு உரித்தான சிவராத்திரி விழா படிப்படியாக அழிக்கப்பட்டு வருகிறது என்பதற்கு அந்த நாளுக்காக மத்திய மற்றும் மாநில அரசுகள் அரசு விடுமுறை அளிக்காததே சான்றாகும்.

ஒரு தெய்வ வழிபாட்டை, மறுத்துப் பல தெய்வ வழிபாட்டை ஏற்படுத்தியது மக்களிடையே நம்பிக்கையைக் குறைக்கிறது.

பார்ப்பனர்கள் மட்டுமே பூசாரிகளாக உள்ளதால் வட்டார மொழிகளில் உள்ள வழக்காறுகள், தெய்வீக இலக்கியங்கள் அழிந்து வருகின்றன. தமிழகத்தில் தேவாரம், திருவாசகம், திருமந்திரம் போன்ற தெய்வீக நூல்களில் உள்ள பாக்களில் மந்திரம் இல்லை என்று கூறி அவர்களுக்கே உரித்தான சமற்கிருதத்தை மட்டுமே வழக்கில் கொண்டு வந்துள்ளனர்.

கிறித்துவ மற்றும் இசுலாம் சமயத்தினர் பல்வேறு பெயர்களில் மசூதிகளும், தேவாலயங்களும் கட்டியிருந்தாலும் அனைத்து வழிபாட்டு இடங்களிலும் உச்சரிக்கப்படுவது பிதாவே, அல்லாவே என்ற ஒரே நாமம்தான். ஆனால் இந்து மதத்தில் பொய்யாகப் பல நாமங்கள் புகுத்தப்பட்டிருப்பதை ஒரு காரணமாகச் சொல்லலாம். இது கருதித்தான் திருமூலர் ஒருருவம் ஒரு நாமம் என்று சொன்னார் போலும்.

மக்களிடையே இந்து மதத்தில் நம்பிக்கை ஏற்பட இங்குச் சில உண்மைகளைக் குறிப்பிட்டாக வேண்டும்.

தங்கள் இனம் உயர்ந்தது என்பதைப் பார்ப்பனர்கள் கைவிடுவதோடு சமற்கிருத மயமாக்கலை ஒழிக்க வேண்டும். கடவுளின் பெயரால் தோற்றரவு (அவதாரம்) என்ற சொல்லைக் கைவிட வேண்டும். கோயில் பூசாரிப் பணி முதல் உயர்கல்வி பயிலும் கல்வி வரை இந்திய இன

மக்கள் அனைவரும் சமம் என்ற நம்பிக்கையை இந்துக்களிடம் அரசு உருவாக்க வேண்டும். அரசியல்வாதிகள் நமது அரசியல் சட்டத்தினை மதித்து உண்மையான மதச்சார்பற்ற தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். இந்துக்களிடம் மனித உருவமில்லாத ஒரே கடவுள் கொள்கையை மீண்டும் கொண்டுவர முயல வேண்டும்.

தோற்றரவு (அவதாரம்) என்ற பெயரில் பார்ப்பனர்களின் முன்னோர்களைக் கடவுளாக்குவதையும் பகவத் கீதை இந்துக்களின் புனிதநூல் என்று பொய்ப் பரப்புரை செய்வதையும் தவிர்க்க வேண்டும். அதற்கு மாறாகப் பிறப்பு, இறப்பு இல்லாத சிவநாமம் சார்ந்த கருத்துகள் அந்தந்த மொழிகளில் இந்தியா முழுவதும் அந்தந்த மக்களிடம் பரப்பப்பட்டு அம்மொழியில் உள்ள சிவ வழிபாடு தொடர்பான இலக்கியங்களை வெளிக்கொண்டு வர வேண்டும். கடவுளின் பெயரால் நடத்தப்படும் பல்வேறு விழாக்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

மேற்கண்ட கொள்கைகள் சரியாகக் கடைப்பிடிக்கப் படுமானால் இந்து மதம் மீண்டும் மக்களிடம் அதிக நம்பிக்கையைப் பெறும்,

பல கடவுள் கொள்கையைக் கடைப்பிடித்ததால் மக்களிடம் ஒற்றுமை குறைந்தது, இது படையெடுப்பவர்களுக்கு ஏற்றதாக அமைந்தது. எங்கெல்லாம் வர்ணாசிரமவாதிகளால் சிவ வழிபாடு அழிக்கப்பட்டதோ அப்பகுதியெல்லாம் இப்போது இந்தியாவுடன் இல்லை என்பது வருத்தப்பட வேண்டிய சேதி, எடுத்துக்காட்டாகக் காந்தாரம் ஆப்கானிஸ்தான் ஆனது. சிந்து மாநிலம் பாகிஸ்தான் ஆனது. ஜாவா, சுமத்திரா, கடாரம் என்பதெல்லாம் இப்போது இந்தோனேசியா என்று அழைக்கப்படுகிறது. திருக்கயிலாயம் என்று அழைக்கப்படும் மானசரோவர் பகுதி இப்போது சீனாவிடம் உள்ளது.

சுருக்கமாகச் சொன்னால் அரிசன் என்றாலும், தலித் கோவிந்தம் என்றாலும் ஒடுக்கப்பட்ட மக்களைத் தான் குறிக்கிறது. ஆனால் அரி என்ற சொல்லிலும், கோவிந்தம் என்ற சொல்லி

லும் ஆதிக்கச் சக்திகளின் பெயர்கள் அடங்கி உள்ளன. இனியும் தலித் என்ற சொல்லைப் பயன்படுத்தி அவர்களைச் சமய நெறியில் வீழ்த்திவிட நினைத்தால் அது நம் தலையில் நாமே மண்ணை வாரித் தூற்றிக் கொண்டதற்குச் சமமாகும். இந்து சமய வாழ்வில் அனைவரும் ஒன்றாக மதிக்கப்பட வேண்டுமானால் வர்ணாசிரம தருமம் அழிக்கப்பட வேண்டும். அதுவே இந்துக்களின் ஒற்றுமைக்கு வழிவகுக்கும்.

17. இதுவா புரளி?

இந்து இயக்கத் தலைவர் ஒருவர் கட்டுரைக்கு ஆதரவாக 'மதமாற்ற மனோபாவம்' என்ற தலைப்பில் தினமணி வாசகர் ஒருவர் (30,07,08) எழுதிய கடிதம் கண்டோம்.

இந்தியாவிற்குள் ஆரியர்கள், கிரேக்கர்கள், மங்கோலியர்கள், அரேபியர்கள், ஐரோப்பியர்கள் என பலரும் படையெடுத்து வந்தனர் என்பது வரலாறு. இவர்களில் கிரேக்கர்கள், மங்கோலியர்களைத் தவிர மற்ற அனைவருமே மதமாற்ற மனோபாவத்துடன் இங்கு வந்தவர்கள் தான். மதமாற்ற மனோபாவ விதைகளை இங்கு முதலில் தூவியவர்கள் ஆரியப் பார்ப்பனர்களே.

இந்தியா ஆதியும், அந்தமும் இல்லா சிவமயமாக விளங்கிய நாடு என்பதை 1921ல் கண்டுபிடிக்கப்பட்ட ஹரப்பா நாகரீக முத்திரைகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஆரியர்கள் இந்தியாவிற்குள் நுழைந்த பிறகு தங்கள் இனத்தை நிலைநிறுத்துவதற்காகவும் இந்தியர்களை தன்வயப்படுத்துவதற்காகவும் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் போன்ற தனிநபர் வழிபாட்டை ஊக்குவித்து புதிய மதமாகிய வைஷ்ணவத்தை உருவாக்கினர். அன்று முதல் இன்றுவரை இந்தியாவில் உள்ள சிவன் கோயில்கள் வைஷ்ணவ கோயிலாக மாற்றப்பட்டு வருகின்றனவே இது மதமாற்ற மனோபாவம் இல்லையா?

சேதுமன்னர்கள் வழிபட்ட சிவத்தலமாகிய சேதுபதியை இராமேஸ்வரம் என்று மாற்றினார்கள். சங்கரன் கோவிலில் அமைந்துள்ள சங்கர நயினார் கோயிலை சங்கர நாராயணன் கோயில் என்று மாற்றியுள்ளார்கள். இதைப் போல் ஏராளமான சான்றுகளைக் கூறலாம். இதுவெல்லாம் மதமாற்ற மனோபாவம் இல்லையா? சுருக்கமாகச் சொன்னால் உலகில் அனைத்து மதவாதிகளும் மக்களை மதமாற்றுகிறார்கள். ஆனால் ஆரிய

பார்ப்பனர்கள் சிவநாமத்தை அழித்து தங்கள் முன்னோர்களின் பெயரால் இந்திய கடவுளையே மதமாற்றி ராமகிருஷ்ண சாம்ராஜ்யத்தை நிறுவ நினைக்கிறார்கள். இதனை ஆரிய திராவிட புரளி என்று கூறமுடியுமா? திருமூலர் காலத்திலேயே இது போன்ற நிகழ்வுகள் நடந்த காரணத்தால் தான் அவர் 'சிவசிவ என்கிலர் தீவினையாளர்' என்கிறார்.

ஜி.யூ. போப், வீரமாமுனிவர், திருவள்ளுவரின் நினைவாக தங்க காசு வெளியிட்ட எல்லீஸ்துரை போன்றவர்களின் தமிழ்ப்பணியை மதக்கண் கொண்டு குறைத்துப் பேசுவதை விடுத்து இந்து சமயத்தில் உள்ள குறைகளைக் களைந்தாலே இந்து சமயம் புத்துயிர் பெறும்.

தினமணிக்கு அன்று இக்கடிதம் எழுதப்பட்டு வெளிவரவில்லை.

18. தமிழருக்கு மலேசியாவில் வெற்றி தமிழ் நாட்டில்.....?

நூல்களைப் படிப்பதில் அதிகம் ஆர்வம் கொண்டிருந்த பாரதியை உறவினர்கள் பலரும் கேலியும் கிண்டலாகப் பேசினாலும், அதைக் கண்டு கொள்ளாமல் மாறாக,

"தமிழ் மக்களுக்கு கடவுள்

நிலமும்

வச்சான் பலமும் வச்சான்

நிகரில்லாத செல்வமும் வச்சான் ஒன்று

வைக்க

மறந்துட்டான் தமிழனுக்கு

புத்தியில்லே புத்தியில்லே''

என்று அவர்களைப் பார்த்து பாடினார். இது ஏதோ அவர்களது உறவினர்களுக்காக பாடப்பட்டது அல்ல. தமிழனை சிந்திக்க வைக்கவே இவ்வாறு பாடினார்.

தமிழர்கள் தாங்கள் வாழும் நிலத்தை குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை என்று பிரித்து ஒவ்வொரு நிலத்திற்கும் ஒரு கடவுளாக வைத்து வழிபட்டார்கள் என்கிறது சங்க இலக்கியங்கள். கடவுள் வழிபாட்டின்போது தமிழர்கள் பல்வேறு விழாக்களை நட்த்தி மகிழ்ந்தனர். குறிஞ்சிக் கடவுள் முருகன் என்பதால் அவனுக்கு ஆண்டில் தைப்பூச நன்னாளிலும் பங்குனி உத்திர திருநாளிலும் வைசாசி விசாக நாளிலும் விழாக்கள் எடுத்து ஊர்தோறும் சிறப்பு பூசைகள் நடத்தி வழிபட்டு வந்தனர். இதனை

திருமுருகாற்றுப்படை, பரிபாடல் முதலிய சங்க நூல்கள் விவரித்து கூறுகின்றன. இவ்வழிபாடு அனைவருக்கும் பொதுவாகவே இருந்தது. இதனை தமிழர் சரித்திரம் (பக்கம் 109) என்னும் நூலில் இலங்கை ந.சி. கந்தையாபிள்ளை,

"பாமரர் முதல் ஞானிகள் வரை ஒவ்வொருவரும் தத்தம் அறிவுக்கு எட்டிய வரையில் முருகக்கடவுளைப் பலவாறு வழிபட்டனர். திருமுருகாற்றுப்படையில் பழமுதிர்சோலையிற் குறத்தியர் செய்து போந்த வழிபாடே மிகப்பழமையுடையது. அதனை இவ்விடத்தில் தருகின்றோம் :

கோழிக் கொடியை நட்டு சிறிய தினையரிசியைப் பூக்களோடு கலந்து பலியாகத்தூவி ஊர்கள் தோறும் எடுக்கும் தலைமையுடைய விழாவிடத்து முருக கடவுள் எழுந்தருளுவார் என்று மக்கள் நம்பினர்" என்கிறார். மக்களை தூக்கத்திலிருந்து அதிகாலையில் எழுப்பக்கூடிய ஆற்றல் கோழிக்கு (சேவல்) இருந்தது. இதனால் கோழி உருவத்தை முருகனுக்கு உகந்த கொடியில் பதித்து வைத்தனர். ஆனால் அந்தக்கோழி தற்காலத்தில் என்ன பாடுபடுகிறது என்பது தமிழருக்கு தெரியாததல்ல. அதே போன்றுதான் முருகனுக்குரிய விழாக்களும் தமிழர்களுக்கு தெரியாமலே மறைக்கப்பட்டு வந்துள்ளன.

களப்பிரர்கள் தமிழகத்தை ஆட்சி செய்தபோது தமிழர் வழிபாடு அழிக்கப்பட்டது என்பது வரலாறு. இதைவிட ஆரியப் பார்ப்பனர்கள் செய்த சூழ்ச்சியால் தமிழர்களின் வழிபாட்டு முறைகளும் விழாக்களும் தடம் புரண்டன. அது இன்றும் தொடர்கிறது.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது தமிழர் பழமொழி. திருமுருகாற்றுப்படையில் "ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்" என்ற அடி வருகிறது. அதிலிருந்து ஊர்தோறும் கோயில்கள் இருந்ததும் அங்கே விழாக்கள் நிகழ்ந்ததும் தெரியவருகின்றன.

முருகக்கடவுளுக்காக தமிழர்கள் நடத்திய விழாக்களில் தைப்பூச விழாவும் ஒன்று. திரை கடலோடியும் திரவியம் தேடிய தமிழர்கள் தாங்கள் வாணிப நிமித்தமாக வெளி நாடுகளுக்கு சென்றனர். அப்போது அங்கு முருகனுக்கு கோயில் கட்டி வணங்கினர். இந்தியாவிலிருந்து கிழக்காசிய நாடுகளுக்கு முதன் முதலில் பயணம் செய்தவர்கள் நாட்டுக்கோட்டை செட்டியார்கள் என்றும் இவர்களைத் தொடர்ந்து ஒரிசா மற்றும் வங்காள மக்கள் கிழக்காசிய நாடுகளுக்குப் பயணித்தனர் என்பதும் வரலாற்றாசிரியர்களின் கருத்து. தமிழர்கள் தாங்கள் தொழில் காரணமாக சென்ற வெளிநாடுகளில் முருக வழிபாட்டையும் விழாக்களையும் தொடர்ந்து நடத்தி வந்துள்ளனர்.

தமிழகத்திலுள்ள அறுபடை வீடுகளில் குடிகொண்டுள்ள முருகப் பெருமானுக்கு தைப்பூச விழா ஆண்டு தோறும் நடைபெறுகிறது. முருகபக்தர்களும் இலட்சக்கணக்கில் பேருந்துகளிலும் நடைபயணமாகவும் சென்று முருகனை வழிபட்டு வருகின்றனர். ஆனால்' தமிழக அரசு இந்த நாளுக்கு அதிகாரப்பூர்வ விடுமுறை அளிக்காதது வருந்தத்தக்கது. விரும்புவர்கள் மத விடுமுறையாக எடுத்துக் கொள்ளலாம் என்ற நிலை உள்ளது.

ஒரு நாட்டில் வாழும் மக்கள் கடவுளுக்கு விழா எடுப்பதே அந்த இன மக்களின் மன நிறைவுக்காக நடத்தப்படுவதாகும். அதோடு மட்டுமல்லாது விழாவின் முக்கியத்துவத்தை வழிபாட்டின் தன்மையை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் குடும்பத்துடன் கோயிலுக்கு செல்கின்றனர். ஆனால் தமிழகத்தில் தைப்பூச விழா, பங்குனி உத்திர விழா, ஆடிப்பெருக்கு, சிவராத்திரி, திருகார்த்திகை பெருவிழா போன்ற தமிழர்களின் விழாக்களுக்கு அரசு முறையாக விடுமுறை அளிக்கப்படவில்லை. இடைக்காலத்தில் ஆரியப்பார்ப்பனர்கள் தமிழர்களின் விழாக்களை மறைத்து தங்களது முன்னோர்களின் வழிபாடாகிய விநாயக சதுர்த்தி, கிருஷ்ணஜெயந்தி, தீபாவளி போன்ற விழாக்களை

தமிழ் மக்களின் மீது சுமத்தி விட்டனர் என்பது வரலாறு. கடந்த நாற்பது ஆண்டு காலமாக தமிழின் பெயரால் ஆட்சி செய்யும் திராவிடக்கட்சிகள் தமிழர்களின் வழிபாடு மற்றும் விழாக்களை உயிர்ப்பிப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் தமிழர்களின் மரபும் அடையாளங்களும் அழிந்து வருகிறது. இதனைக் காப்பாற்ற ஆதினங்களும், மடாதிபதிகளும் முருகபக்தர்களும் முன்வரவேண்டும். இல்லையேல் தமிழர்கள் தொன்று தொட்டு கடைப்பிடித்து வரும் மரபுகளும் விழாக்களும் அழிந்து போவதற்கு வாய்ப்பு உண்டு. தமிழகத்தில் தமிழர் பணத்தில் வளர்ந்து வரும் சில செய்தி ஏடுகள் மற்றும் ஊடகங்கள் தமிழர்களின் விழாக்களை மறைத்து கேரளா, ஆந்திரா போன்ற அண்டை மாநிலங்களில் நடைபெறும் கோயில் விழாக்களை மிகைப்படுத்தி எழுதியும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பியும் தமிழர்களை மூளைச் சலவை செய்து வருகின்றன என்பதனை படித்த தமிழர்கள் படிக்காத தமிழர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய நேரம் இது.

சென்னை சங்கமம் திருவிழா அடுத்த ஆண்டு முதல் தமிழகத்தின் மற்ற நகரங்களிலும் நடத்தப்படும் என்று முதல்வர் கருணாநிதி அறிவிப்பு என்ற செய்தி வரவேற்கத்தக்கதுதான். ஆனால் விழா என்பது தமிழர்களுக்கு கோயில்சார்ந்தது என்பதை மறந்து விடக்கூடாது. சென்னை சங்கமம் விழாவில் ஆயிரத்திற்கு மேலான தமிழக நாட்டுப்புறக் கலைஞர்கள் கலந்து தகொண்டனர். அவர்களிடம் முதல்வர் கருணாநிதி பேசும் போது பழந்தமிழ் இலக்கியங்கள், கலைகள் மறைந்து போகாமல் காக்கும் வகையில் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டுள்ளார். பழந்தமிழ் இலக்கியங்கள் மற்றும் கலைகள் காக்கப்படவேண்டுமானால் தமிழர்களின் வழிபாட்டுமுறையை ஊக்குவிக்கும் வகையில் தமிழர்கள் தொன்று தொட்டு கடைப்பிடித்து வரும் விழாக்களான தைப்பூசம், ஆடிப்பெருக்கு, பங்குனி உத்திரம், சிவராத்திரி போன்ற விழாக்களுக்கான நாளை அரசு விடுமுறையாக அறிவிக்க வேண்டும்.

தமிழர் இலக்கியங்களையும் கலைகளையும் வெறுமனே சங்கமம் நிகழ்ச்சியின் மூலம் வளர்த்து விடலாம் என்று நினைத்தால் அது தும்பைவிட்டு வாலைப்பிடித்த கதையாகி விடும்.

வடமொழி ஆதிக்கத்தால் இன்றும் தமிழக கோயில்களின் வரலாறும் விழாக்களும் மறைக்கப்படுவதை ஆட்சியில் உள்ளவர்கள் கண்காணித்து அந்தக் கோயில்களின் வரலாற்றையும் கோயில் விழாக்களையும் உயிர்ப்பிக்க வேண்டும். தமிழர்களின் தைப்பூசம், சிவராத்திரி, பங்குனி உத்திரம், ஆடிப்பெருக்கு போன்ற விழாக்களுக்கு அதிகாரப்பூர்வமாக அரசு விடுமுறை அளித்து பள்ளிக் குழந்தைகள் அதனை அறியும்படி செய்ய வேண்டும்.

மலேசியாவில் பல்வேறு இடங்களில் தமிழர்கள் முருகப்பெருமானுக்கு கோயில் எழுப்பி வழிபட்டு வருகின்றனர். வருடந்தோறும் தைப்பூச விழாவின்போது காவடி எடுத்து அலகு குத்தி சிறப்பாக வழிபட்டு வருகின்றனர். தங்களின் உரிமையை நிலைநாட்டும் விதமாக அந்நாட்டு அரசுக்கு அங்கு வாழும் தமிழர்கள் கோரிக்கை விடுத்தனர். அதனை ஏற்றுக் கொண்ட அந்நாட்டு அரசு தைப்பூசத் திருநாளை தேசிய விடுமுறை நாளாக அறிவித்துள்ளது. இதுபோன்ற ஒரு நிலை தமிழகத்திலும் வரவேண்டும்.

வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் தங்கள் மரபு வழிவந்த விழாவை தொடர்ந்து நடத்துவதற்காக அந்நாட்டு அரசின் ஒப்புதல் பெற்று உரிமையை நிலைநாட்டலாம் என்றால் தமிழகத்தில் தமிழர்களால் ஏன் முடியாது?

தந்தை பெரியார் தமிழர் வழிபாட்டிற்கு எதிரான எந்த ராமர், கிருஷ்ணர், விநாயக வழிபாட்டை எதிர்த்தாரோ அதே வழிபாட்டிற்காக திராவிடக் கட்சிகள் அரசு விடுமுறை அளித்து அந்த விழாக்களை ஊக்குவித்ததே தவிர தமிழர்கள் தொன்று தொட்டு வழிபாடு நடத்திய விழாக்களுக்கு திராவிடரின் பெயரில் ஆட்சி செய்யும் அரசியல் கட்சிகள் அரசு விடுமுறை அளிக்காதது வேதனைக்குரிய விஷயம்.

தமிழர்களை ஒரு தமிழர் ஆட்சி செய்யும் போது தமிழர்களின் விழாக்களுக்கு அரசு விடுமுறை அளிக்கவில்லையென்றால் பிறர்மீது குற்றம் சுமத்துவது நீதியாகுமா? தமிழரின் பண்பாட்டை காப்பாற்றுவது யார்? பாமரக் குடிமகனா? ஆட்சியாளர் அல்லவா? தமிழர்களின் கோயில்களில் ஆரிய பார்ப்பனர்களின் ஆதிக்கம் மேலோங்கிவிட்ட போதிலும் தமிழர்களின் மறையாகிய தேவாரம் திருவாசகம் அடங்கிய திருமுறையை ராசராச சோழன் மீட்கவில்லையா? அது போன்று தமிழர்களின் விழாக்களை இன்று நாம் ஏன் மீட்கமுடியாது?

திருச்சிற்றம்பலம்.

19. விநாயகர் சதுர்த்தியும் சங்கடகர சதுர்த்தியும்

"விநாயகர் பிரணவத்தின் வடிவம். பிரணவத்தின் திரிந்த வடிவமே பிள்ளையார் சுழி. இந்தச்சுழியைப் போட்டவுடனேயே விநாயகர் வணக்கம் செய்தாகிவிடுகிறது. பிள்ளையார் சுழியை இட்டாலே ஆணவம் அடங்கி இறை நினைவு உண்டாகும். இயற்றப்பெரும் தொழில்கள் யாவும் சிவன் செயலே என்று காட்டும் அடையாளமே பிள்ளையார் சுழி. அதனால்தான் இந்தச் சுழியை இட்டுப் பிறகு எழுதுகின்ற வழக்கமும் தொழில் துவங்குகின்ற வழக்கமும் ஏற்பட்டது என்பது புராணம்" என்று நாளேடுகளும் ஆன்மீகம் என்ற பெயரில் வெளிவரும் வார, மாத இதழ்களும் எழுதி வருகின்றன.

பாவம்... படித்த தமிழனும், படிக்காத பாமரனும் இந்தச் செய்தி எந்தப் புராணத்தில் கூறப்பட்டுள்ளது என்பது பற்றிச் சிந்திக்கவா போகிறான். அல்லது தேடிக் கண்டுபிடிக்கவா போகிறான் என்ற உண்மையை அறிந்து கொண்ட ஆரிய மோகமுடைய எழுத்தாளர்கள் எழுதித் தள்ளுகிறார்கள். யாவும் சிவன் செயலே என்றால், பிள்ளையாரை உள்ளே நுழைத்தது ஏன்? என்று படித்தத் தமிழன் எதிர்த்துக் கேள்வியா கேட்கப் போகிறான்? பாமரத்தமிழன் 'படித்தவன் பாட்டைக் கெடுத்தான்: எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான்' என்று கூறிய பழமொழியை ஏன் எதற்கு எப்படி என்று உணருவது எப்போது? சிவனைக் குறிக்கும் தமிழ் வார்த்தையை பிள்ளையார் சுழி என்று மாற்றியவர்கள் ஆரிய பார்ப்பனர்கள் என்பது பலருக்கும் தெரியாது. 'உ' என்று தமிழர்கள் வணங்கிய உலக நாயகனாகிய சிவநாமத்தைக் குறிக்கும் சொல். உலக நாயகன் என்பதில் 'உ' என்பதும் முதல் சொல். சிவனைக்கருதியே 'உ' என்ற சொல்லை சுவற்றில் எழுதித் தங்கள் தொழிலைத் துவங்கினர். கற்றறிந்த பண்டைய ஞானிகள் ஏடுகளில் 'உ' என்பதினை எழுதிப் பின்பு தங்கள் படைப்புகளை எழுதினர். ஊடகங்கள் இல்லாத அந்நாளில்

ஊருக்கு ஒரு அக்ரஹாரங்களை அமைத்துத் தங்களை உயர்ந்தவர்களாகக் காட்டிக் கொண்டு தங்கள் பொய்ப் பரப்புரையைப் படிக்காத இந்தியர்கள் மற்றும் தமிழர்களிடம் பரப்பி வந்தனர். ஏதும் அறியாத இந்தியத் திருநாட்டின் பூர்வீகக் குடிகளான சிவபக்தர்கள் அவர்கள் கூறிய வார்த்தையை உண்மையானவை என்று கருதி அவர்களுக்கு அடிமைகளாக மாறினர் என்பது வரலாறு.

மத்திய ஆசியா பகுதியில் இருந்து வந்த ஆரியக் கூட்டத்தாரிடம் விநாயகர் வழிபாடு இல்லை. இந்தியாவிற்குள் நுழைந்துவிட்ட ஆரியர்கள் இந்தியர்கள் சிவலிங்கம் வைத்து எங்கும் சிவநாமத்தைச் சொல்லி வழிபடுவதைக் கண்டனர். தங்கள் ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொள்வதற்காக சிவவழிபாட்டையும் திருநீரையும் அழிப்பதற்குப் பல்வேறு முயற்சிகளும் செய்து வந்தனர். வடநாட்டில் குப்தர்கள் ஆரிய பார்ப்பனர்களின் அடிவருடிகளாக மாறினர். அப்பொழுதுதான் ஆரியர்கள் தங்கள் விநாயகர் வழிபாட்டை உருவாக்கி இந்திய மக்களை சிவசிந்தனையிலிருந்து மாற்றினர். புத்த மடாலங்களை குப்தமன்னர்கள் புறக்கணித்தனர். இதனைக் கருதியே பிற்காலத்தில் இந்திய வரலாற்றை எழுதிய ஆரிய பார்ப்பனர்கள் 'குப்தர்களின் காலம் பொற்காலம்' என்று எழுதினர்.

இந்தியாவின் வடபகுதியில் குப்தர்கள் ஆதரவு தந்ததைப் போல் தெற்குப் பகுதியில் தமிழகத்தில் ஆட்சி செலுத்திய பல்லவ மன்னர்களும் அவர்களுக்குப்பின் ஆட்சி செய்த நாயக்க மன்னர்களும் ஆரியப் பார்ப்பனர்களுக்கு விசுவாசிகளாக மாறினர். அந்தக் காலக்கட்டத்தில் தான் விநாயக வழிபாடு தமிழகத்திற்குள் அறிமுகப்படுத்தப்பட்டுப் பின்பு அது இங்குச் செழிப்புறத் துவங்கியது என்பது படித்தவர்களிலேயே பலரும் அறியாத விசயம். போலியான ஆன்மீகத்தின் மூலம் ஆற்றல் மிக்கத் தமிழரை அடிமைப்படுத்திய ஆரியக் கூட்டத்தைத் தமிழர்களுக்கு அடையாளம் காட்ட முன்வந்தவர்கள்தான் தந்தை பெரியாரும் அறிஞர் அண்ணாவும்.

தமிழர்களுக்கென்று சிவவழிபாட்டிற்காக எழுதப்பட்டத் தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருஅருட்பா அடங்கிய திருமுறையில் உள்ள மந்திரங்களை மறைத்துப் புரியாத மொழியில் கணபதி ஹோமம், காயத்ரி மந்திரம் என்று ஆரியப் பார்ப்பனர்கள் கூறும் மாய வார்த்தைகளில் மயங்கிக் கிடக்கும் படித்தத் தமிழனும், பணக்காரத் தமிழனும் திருந்தினால்தானே பாமரத்தமிழனைத் திருத்த முடியும். திருந்துவது எப்போது?

சரி, இனி சங்கடஹர சதுர்த்தி பற்றிப் பார்ப்போம். கடந்த பல ஆண்டுகளாக சிவன் கோவில்களில் பிரதோச நாட்களில் மக்கள் கூட்டம் அலை மோதுகிறது. திருவண்ணாமலையில் இலட்சக்கணக்கான மக்கள் சிவநாமத்தைச் சொல்லிக் கொண்டு கிரிவலம் வருகின்றனர். சிவன் கோவில்களில் கூட்டம் நிரம்பி வழிவதைக் கண்டு பொறுக்க மாட்டாத சுமார்த்தர்கள் (சிவவழிபாட்டை எதிர்க்கும் பிராமணர்களில் சிலர்) ஒரு சில ஆண்டுகளுக்கு முன் தமிழர்களிடையே குறைந்து வரும் விநாயக வழிபாட்டை வலுப்படுத்த சங்கடகர சதுர்த்தி என்ற ஒரு புதிய நிகழ்ச்சியைத் தமிழர்களிடையே புகுத்தியுள்ளனர் என்பது படித்தவர்களுக்கே தெரியாது.

சங்கடகரசதுர்த்தி விரதத்தை மாசி மாதம் கிருட்டினபட்சம் (தேய்பிறை) செவ்வாய்க்கிழமையோடு வரும் சதுர்த்தித் திதியில் துவங்கி ஓராண்டு விதிப்படி அனுஷ்டித்தால் எல்லாத் துன்பங்களும் நீங்கப் பெறுபவர்கள் செல்வம் செல்வாக்கு ஆகிய அனைத்து இன்பங்களையும் அடைவார்கள் என்பது தற்போது சுமார்த்தர்கள் செய்து வரும் பொய்ப் பிரச்சாரம். இதனை நாளிதழ்களும், வார இதழ்களும் ஆன்மீகம் என்ற பெயரால் தமிழர்களிடைய பரப்பி வருகின்றன.

இப்படிப்பட்ட பொய்ப்பிரச்சாரத்தில் விழுந்து விடாமல் இருப்பது அறிவார்ந்த தமிழர்களின் கடமையோடு ஆரியக்கூட்டம் சிவவழிபாட்டை,

அழிப்பதற்கான முயற்சிகளில் இதுவும் ஒன்று என்பதனை புரிந்து கொள்ளவும் வேண்டும். படிக்காத பாமர மக்களிடம் தெரிவிக்கவும் வேண்டும். ஞானசம்பந்தர் கல்லாத மக்களுக்கு கற்றுக் கொடுத்தப் பாடம் வேதம் நான்கிலும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயமே என்பது.

சிவசமயமாகிய இந்து சமயம் இந்தியா முழுவதும் பரவியிருந்தது. ஆனால் பார்ப்பனர்களின் வருகைக்குப்பின் வைணவம், சாக்தம், சுமார்த்தம், கௌமாரம் என்று பல மதங்கள் இந்தியாவில் புகுத்தப்பட்டன. தற்காலத்தில் இந்து மதம் என்ற பிரச்சாரத்தின் கீழ் சிவசமயம் இன்னதென்று தமிழ் மக்கள் அறிய முடியாதபடி குழப்புகின்றனர்.

20. மக்களைப் பிரிப்பது சமூகத்திற்கு உயர்வல்ல

மனித குலத்திற்கு எதிராகப் போர்களை நடத்தி இலட்சக்கணக்கான மக்களைக் கொன்று குவித்த கிரேக்க நாட்டு இளவரசன் அலெக்சாந்தர், பிரான்சு நாட்டின் நெப்போலியன் மற்றும் தற்காலத்தில் வாழ்ந்த ஹிட்லர் முசோலினி போன்றவர்கள் உலக வரலாற்றில் மாவீரர்கள் என்று போற்றப்படலாம். ஆனால் மனிதகுலத்தை அன்பால் வெல்ல முடியும் என்பதை நிரூபித்துக் காட்டிய கௌதம புத்தரே உண்மையான மாவீரன் என்பதை அறிஞர்களும் ஞானிகளும் ஒப்புக் கொள்கின்றனர்.

தமிழர் சமயமும் சமூகமும் அன்பையும் அறத்தையும் அடிப்படையாகக் கொண்டது என்பதற்கு அறம் செய விரும்பு ஆறுவது சினம் என்ற ஔவை மந்திரம் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

ஆனால் அன்னியர்களின் தொடர்பால் இந்தியர்களானாலும் தமிழர்களானாலும் தங்கள் நிலையில் மாற்றங்கள் பல கண்டுள்ளனர். அந்நியர்களின் கொள்கையைக் கண்மூடித்தனமாக அப்படியே கடைப்பிடிப்பதால் இந்திய சமூகம் தீயவைகளைக் கற்க வேண்டிவரும் என்பதை உணர்ந்ததால் தான் இந்தியாவில் புத்தர் முதல் வள்ளலார் வரை வாழ்ந்த பல ஞானிகள் பல சீர்திருத்தக் கருத்துக்களை இளைய தலைமுறைக்கு விட்டுச் சென்றுள்ளனர். சமூகமும், சமயமும் தனது கருத்துக்களை காலத்திற்கேற்றவாறு மாற்றிக் கொள்ள வேண்டுமே தவிர விடாப்பிடியாக இறுக்கிப்பிடித்துக் கொண்டால் அது மனித குலத்தை நிம்மதியாக வாழ விடாது. இதனை உணர்ந்த இராசாராம் மோகன்ராய், தயானந்த சரசுவதி, நாராயணகுரு, சோதிபாபூலே, வைகுண்டசாமி, தந்தை பெரியார் போன்ற ஞானிகள் சமூகத்திற்கும் சமயத்திற்கும் தங்கள் பங்களிப்பை விட்டுச் சென்றுள்ளனர்.

ஆதிதிராவிடர் கோயில் நுழைவுப் போராட்டம் நடந்த 68வது ஆண்டை இளைய தலைமுறையினருக்கு நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறோம். இந்திய சுதந்திரப் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. இந்துக் கோயில்களுக்குள் ஆதிதிராவிடர் நுழைவதை மேல்சாதியினர் கடுமையாக எதிர்த்து வந்தனர். ஆனால் காந்தியடிகளின் கொள்கையை அப்படியே செயல்படுத்துவதில் துடிப்புடன் செயல்பட்டு வந்தவர் மதுரையைச் சேர்ந்த வைத்தியநாதய்யர் இளம் வயது முதலே சாதி வேறுபாடுகளை எதிர்த்தவர்.

கோயில்களில் ஆதிதிராவிட இனமக்கள் நுழையக்கூடாது என்ற சமூகக் கொடுமையைப் போக்க அவரது தலைமையில் 08-07-1939-ஆம் நாள் காலையில் மதுரை சொக்கநாதர் மீனாட்சி அம்மன் திருக்கோயிலில் தாழ்த்தப்பட்ட மக்கள் கோயில் நுழைவு நிகழ்ச்சி நடைபெறும் என வைத்தியநாதய்யர் அறிவித்தார்.

இதற்கு மேல்சாதியினர் பலர் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால் ஆதிதிராவிடர் கோயில் நுழைவு நிகழ்ச்சிக்கு நாங்கள் ஆதரவு தருவோம் என்று பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அறிக்கை வெளியிட்டார். திட்டமிட்டபடி வைத்தியநாத அய்யரும் அவரது ஆதரவாளர்களும் ஆதிதிராவிட மக்களை பூசைப்பொருள்களுடன் அழைத்துச் சென்று வழிபாடு முடித்து வெளியே வந்தனர்.

ஆனால் ஆதிதிராவிடர்கள் கோயிலுக்குள் நுழைந்ததால் கடவுளே கோயிலிலிருந்து வெளியேறி விட்டதாக நடேசய்யர், வெங்கடேசய்யர் ஆகியோர் பொய்ப்பரப்புரையில் ஈடுபட்டனர். இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்தனர். ஆனால், அப்போது முதல்வராக இருந்த ராசாசி ஆளுநர் மூலம் ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்து ஆதி திராவிடர் கோயிலுக்குள் செல்லலாம் என உத்தரவிட்டார். இதனால் இது தொடர்பான வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

அண்மையில் இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் இராமேசுவரம் கோயிலுக்குள் சென்றதால் அவர் முசுலிம் மதத்தைச் சேர்ந்தவர்

என்பதால் தீட்டு ஏற்பட்டதாகக் கூறி அவர் சென்ற பிறகு கோயிலைக் கழுவிவிட்டுப் பூசைகள் செய்வது இந்து மதத்திற்கு வீழ்ச்சியை ஏற்படுத்துமே தவிர வளர்ச்சியை ஏற்படுத்தாது. ஆரிய பார்ப்பனர்கள் அன்று சாதியைக் காட்டினார்கள். சாதி வேறுபாடுகள் மறைந்துவிட்டன. அதனால் இன்று மதத்தை முன்னிலைப்படுத்தி இந்து அறத்திற்கு வீழ்ச்சியை ஏற்படுத்துகின்றனர். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதும் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதும்தான் இந்து மதத்தின் அடிப்படைத் தத்துவம்.

இந்தியாவில் வாழும் அனைத்து சாதியினரும் மதத்தினரும் கடவுளை எந்த வடிவில் வழிபட்டாலும் அவர்கள் அனைவரும் இந்த மண்ணின் மைந்தர். திரைப்படப் பாடகர் சேசுதாசு மதத்தால் கிறித்தவர் என்றாலும் இந்துக் கடவுள் பற்றிய பல பாடல்களை மனமுருகிப் பாடியுள்ளார். மதத்தைக் காட்டி அவரை குருவாயூரப்பன் கோயிலுக்குள் நுழைய அனுமதி மறுப்பது எந்த வகையிலும் நியாயமில்லை. இந்துக் கடவுளின் மீது முழு நம்பிக்கை கொண்டு எந்த சாதியினரும் எந்த மதத்தினரும் கோயிலுக்குள் வருவார்களேயானால் அவர்களைக் கோயிலுக்குள் அனுமதிக்கும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

கோயில் நுழைவுச்சட்டம் 136ன் படி இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் இந்துக் கோயிலில் நுழைய முடியும். அதன்படி பிறப்பால் இந்துக்களாக உள்ளவர்கள் மட்டும்தான் கோயிலில் நுழையலாம் என்பது போன்ற விதிமுறைகள் திருத்தப்படவேண்டும். இந்தியர்கள் வெவ்வேறு மதத்தில் இருந்தாலும் அவர்கள் இந்துக் கடவுளின் மீது நம்பிக்கை வைத்துக் கோயிலுக்குள் வழிபாடு நடத்த முன்வர வேண்டும் என்பதுதான் இந்திய சமய சீர்திருத்தவாதியாக விளங்கிய ஆரிய சமாசத்தைத் தோற்றுவித்த தயானந்த சரசுவதியின் கருத்தாகும்.

பகவத் கீதை மனிதர்களை வணங்கக்கூடிய பார்ப்பன மதத்தினருக்குப் புனித நூல். ஆனால் இந்துக்களுக்கு சிவ வழிபாட்டை

அடிப்படையாகக் கொண்ட எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி மனித நேயத்தை வலியுறுத்தக்கூடிய இறைவனை மட்டுமே போற்றக்கூடிய திருமுறை மற்றும் மக்களை அறவழிக்கு அழைத்துச் செல்லக் கூடிய திருக்குறள் திருமந்திரம் போன்ற அறநூல்கள் அனைத்தும் புனித நூலாகும் என்பதுபோல் உண்மையான பக்தியுடன் கோயிலுக்குள் வரும் அனைத்துத் தரப்பு மக்களையும் அன்புடன் அரவணைத்துக் கொள்வதே இந்து மதத்தின் அடிப்படைக் கொள்கையாகும். ஆனால் ஆரிய பார்ப்பனர்கள் மக்களிடையே வேறுபாடு காட்டி இன்னும் மக்களைப் பிரித்துப் பார்ப்பது நமது சமூகத்திற்குத் தாழ்வே ஒழிய உயர்வு அல்ல.

21. வேதமரபா? அடிமைத்தனமா?

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பிறந்தது தமிழ் மண்ணில்தான். அதே ஆரியர்களின் அடிவருடிகளாக வாழ்ந்த பிற்கால சோழ மன்னர்கள் பிறந்ததும் அதே தமிழ் மண்ணில்தான். அடிவருடிகளாக அல்ல: தமிழருக்கே உரிய அன்பு பாசம், இரக்கம், கருணை அனைத்தையும் கொண்டு ஆரியர்களை அரவணைத்து ஆதரித்த மன்னர்களை தங்களது பசப்பு வார்த்தைகளால் நயவஞ்சகமாக மயக்கி இறுதியில் தமிழர்களையே அடிவருடிகளாக மாற்றினர் என்பது தான் வரலாற்று உண்மை. அது முடிந்துவிட வில்லை இன்றும் தமிழ் மண்ணில் நீடிக்கிறது. இதை வேதமரபு என்று சொல்வதா? அல்லது அடிமைத்தனம் என்று சொல்வதா? தமிழன் அன்புக்கு கட்டுப்படுபவன், அடிமையாக வாழ மாட்டான் என்பது தான் தமிழர் மரபு.

தமிழின் மேன்மையையும் சைவத்தின் உயர்வையும் உலகிற்கு பறைசாற்றியவர்கள் மேலை நாட்டறிஞர்கள் தானே தவிர இங்குள்ள மடாதிபதிகள் அல்லர் என்பதனை தமிழர்கள் நன்கு அறிவர். தமிழும் சைவமும் தற்கால மடாதிபதிகளையோ ஆதின கர்த்தர்களையோ நம்பி இல்லை. தனி மனிதர்களெல்லாம் ஆதினகர்த்தர்களாக மாறிக் கொண்டிருக்கும் காலம் இது.

“சிவ என்ற சொல்லிலுள்ள சகர ஒசை ஆதியில் ஆரிய மொழியிற் கிடையாத கபால ஒலி **(Cerebral)** எனப்படும் அத்தகைய ஒலிகள் திராவிடச்சார்பால் ஆரிய மொழியிற் புகுந்தன என்று பேராசிரியர் ராப்சன் கூறுகிறார்”. **(Professor Rapson says, “The Cerebrals are foreign to Indo-European languages, while they are characteristic of Dravidian Languages”)** என்று தமிழர் சமயம் என்ற தனது நூலில் காசுப்பிள்ளை குறிப்பிடுகிறார்.

தமிழ் மொழியில் வரும் சொற்களில் எழும் ஒலியை ஆழ்ந்து ஆராய்ந்து தமிழ் மொழியின் சிறப்பை மேலை நாட்டவர்கள் உலகிற்கு எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். ஆனால் இங்குள்ள சில அறிவு ஜீவிகள் வேதங்களும் அவற்றின் முடிவான உபநிடதங்களும் ஆகமங்களும் வடமொழியிலேயே உள்ளன என்று தாமும் நம்பி தமிழனையும் நம்ப வைக்க முயற்சிக்கிறார்களே அதுதான் வேதனைக்குரிய விஷயம். தமிழில் ஆகமம் உண்டு என்று அவர்கள் சொல்ல வேண்டாம். தமிழில் இல்லை என்று சொல்லுவதற்கு இவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது. தமிழில் திருமுறை அகத்தில் நினைத்தும் புறத்தில் பாடியும் கிரியைகள் பூசைகள் செய்யக்கூடாது என்று தேவார மூவர் எங்காவது சொல்லியிருக்கிறார்கள் என்று இவர்களால் நிரூபிக்க முடியுமா?

“சிவாச்சாரியார்கள் திருமுறைகளில் ஈடுபாடு காட்ட வேண்டும். திருமுறை நேயர்களும் வடமொழி கற்றல் வேண்டும்'' என்று திருவாடுதுறை ஆதினகர்த்தரின் வேண்டுகோள் ஏற்புடையது தான். ஆனால் சிவாச்சாரியார்கள் என்பவர்கள் பசுத்தோல் போர்த்திய புலிகள் என்பதனை தமிழர்கள் நன்கு அறிவர். இது இன்றைக்கு நேற்றல்ல திருமூலர் காலத்திலேயே இருந்திருக்கிறது. அதனால் தான் அவர் ‘சிவ்சிவ என்கிலர் தீவினையாளர்' என்று இவர்களைப் பார்த்துப் பாடுகிறார்.

ஒரு இனத்தை அழிக்க வேண்டுமானால் முதலில் அவர்களுடைய மொழியை அழி என்ற உத்தியை முதன் முதலில் கடைப்பிடித்தவர்கள் ஆரியர்கள் தான் என்பதனை உலக வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் தெரியவரும்.

“சீர்கெழு செந்தமிழ் தனித்தியங்குஞ் சால்புடைய தென்பதைக் கடைச்சங்க காலம் வரையிலுள்ள நூல்கள் சான்று பகர்ந்து நிறுவுகின்றன. இடைப்பட்ட காலத்திலேயெழுந்த நூல்கள் வடமொழியாம் பணிபூண்டு சிறிது சிறிதாகச் செவ்வி மங்கத்

தொடங்கின. இலக்கத்தினும் மொழியென்பது பதமும் பகுபதமுமாகிப் பரவியது. கடவுள் நெறி நூல்களெல்லாம் வடமொழியுருவத்துடன் தமிழருக்குத் திரும்பின. சில நூல்களும் தமிழ்நூல்களாக (முதல் நூல்களாக) இருந்தும் வடமொழியின் பெயர்ப்பெனச் சிலரை மயங்கச் செய்தன''. இதனைக் கூறுவது வேறுயாருமல்ல. தமிழரின் இருண்டு கிடந்த வாழ்க்கையில் ஒளியேற்றிய மறைமலையடிகள் தான்.

ஆதியிலே தமிழகத்திற்குள் வந்த ஆரிய பார்ப்பனர்கள் நல்ல தமிழர்களாகத் தங்களை மாற்றிக் கொண்டு தமிழரின் கடவுள் நெறியையும் ஏற்றுக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர். இதற்குச் சான்றாக விளங்குபவர் ஞானசம்பந்தப் பெருமானைக் கூறலாம்.

''வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே" என்று ஞானசம்பந்தப் பெருமானும், "ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் ஜோதியை யாம்பாட'' என்று மாணிக்க வாசகரும் பாடுகின்றனர். ஆனால் இவர்கள் கருத்தை தற்கால சமஸ்கிருதவாதிகள் ஏற்றுக் கொள்வதில்லை ஏன்? இதற்கும் மறைமலை அடிகள் விளக்கம் தருகிறார்.

"தி.பி (கி.பி.) எட்டாம் நூற்றாண்டு வரையிலுஞ் சைவத்திற்கும், வைணவத்திற்கும் மாறுபாடு பெரிதுமில்லையாம். இரு சமயத் தெய்வங்களும் அவ்விரு சமயத்தவராலும் வணங்கப்பட்டு வந்திருக்க, வடக்கிலிருந்து வந்து குடியேறிய திராவிட ஆரியப் பார்ப்பனரும், அவருடன் கலந்து கொண்ட தமிழ்ப் பார்ப்பனரும் ஒருங்கு சேர்ந்து, தமிழ் மக்களின் ஒற்றுமையைச் சிதைத்து அவரைத் தமக்கு அடிமைகளாக்கிக் கொள்ளும் தீய எண்ணமே தலைக்கேறித் தமிழ்ப் பொதுமக்களுக்குத் தெரியாத சமஸ்கிருதம் என்னும் இறந்துபட்ட வடமொழியைத் தமக்கே உரியதாக்கிக் கொண்டு, பிறவியேயில்லாத முழுமுதற்கடவுளாகிய திருமாலுக்குப் பல பிறவிகளைக் கற்பித்து, பொய்யும் புனைச் சுருட்டும் நிரம்பத்

தாம் அம்மொழியிற் கட்டிவிட்ட புராணக் கதைகளில் திருமாலின் பிறவிகளை உயர்த்திச் சிவபிரானை மக்களினுங்கடைப் பட்டவராகத் தாழ்த்தி, வைணவர்க்கு முற்காலத்திலில்லாத வெண்மண் செம்மண் குறியையும் அவரது நெற்றியுற்றீட்டி, இவ்வாற்றால் வைணவர் சைவரொடு பெரிதும் இகலிக்கலாம் விளைக்குமாறு செய்து விட்டனர்'' என்கிறார்.

அன்று கொற்றவை மங்கள தேவி கண்ணகி, வழிபாட்டை அழித்தவர்கள் அன்றிலிருந்து இன்று வரை தமிழையும் சிவ வழிபாட்டையும் அழிக்க முயற்சி செய்து வருகின்றனர். இதனை நன்கு அறிந்து கொண்ட தமிழர்கள் "ஈசனை பெண்ணாக்கி பெண்ணை பெருமாளாக்கியவர்கள்'' என்ற பழமொழியை பின்பற்றினர் எனத் தெரிகிறது.

திருக்கோயில் குடமுழுக்கு விழாவினை வேதாகம சாத்திரங்களின் படி நடத்த வேண்டுமா? அல்லது திருமுறைகளைப்பாடி நடத்தலாமா? என்ற கேள்விக்கு யாழ்ப்பானத்து ஆறுமுக நாவலர் வரலாறு என்னும் நூலில் சிவாகமும் சிவதீக்ஷையும் என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை பதில் தருகிறது அக்கட்டுரையின் ஒரு பகுதி இதோ,

"வேதம் சிவாகமம் என்னும் இரண்டும் ஈசுர வாக்கென்பதும். அவற்றுள்ளே வேதம். வைஷ்ணவர், வேதாந்திகள், சாங்கியர், யோகர். [illegible]ஞ்சகர். நையாயிகர் முதலிய பலர்க்கும் பொதுவாகலின் பொது நூல் என்பதும் சிவாகமம் சைவருக்கே உரிய நூல் ஆதலின் சிறப்பு நூல் என்பதும். இதில் சொல்லப்பட்ட சிவதீக்ஷையே முத்திக்குச் சாதனம் என்பதும், வேதம் உலகோர் பொருட்டும். ஆகமம் சத்திநிபாதமுடையவர் பொருட்டும் செய்யப்பட்டன என்பதும். ஆகலின் வேதத்தினும் ஆகமஞ் சிறந்தது என்பதும், சிவாகமத்திற் சொல்லப்பட்ட பிரகாரமே சைவாலயங்கள். நடத்தப்படல் வேண்டும் என்பதும். சைவ நூற்றுணிபு இவற்றிற்குப் பிரமாணம். சூதசங்கிதை பத்மபுராணம், சிவஞானசித்தியார், ஞானப்பிரகாச சுவாமிகள் இயற்றிய சி[illegible]கமமாதியான்மியம், புண்டரீகபுராணம் முதலியவற்றிக்காண்க"

என்று கூறியுள்ளார்.

தமிழர்களின் இவ்வளவு உயர்ந்த கருத்தினை ஆரிய பார்ப்பனர்கள் ஏற்க மறுத்து தங்கள் மொழியின் ஆதிக்கத்தையும் கொள்கைகளையும் தமிழ் மக்களின் மீது திணிக்க முயன்றுள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டே அப்பர்

"வேதம் ஓதில் என்? சாத்திரம் கேட்கில் என்?
நீதிநூல் பல நித்தம் பயிற்றில் என்?
ஓதி அங்கம் ஓர் ஆறும் உணரில் என்?
ஈசனை உங்குவார்க்கு அன்றி இல்லையே''

என்றும்,

"சாத்திரம் பல பேசும் சழக்கர் காள்!
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்!
பாத்திரம் சிவம் என்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளும் மால்பேறர் ஏ!''

என்றும் பாடுவதால் அன்றே சிவ வழிபாட்டை ஆரியர்கள் எதிர்த்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு திருமுக்கூடலூர் மணிமுத்தீசுவரர் திருக்கோயில் குடமுழுக்கு விழாவின் முடிவில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில் எட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில் ஒன்று அறநிலையத்துறை விதிகளின்படி கோயில் கருவறைக்குள் சிவனடியார்கள் எந்தச் சூழலிலும் செல்லக்கூடாது. அர்ச்சகர்கள் மட்டுமே சென்று ஆகம விதிப்படி தவறாமல் பூஜை செய்ய வேண்டும் என்பது,

மேற்கண்ட தீர்மானம் அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களுக்கு மட்டும் என்றால் கட்டுப்பாட்டில் இல்லாத

பலநூறு கோயில்களில் சிவனடியார்கள் தான் பூஜைகள் செய்கின்றனர். அங்கு இறைவன் அருள் பாலிக்கமாட்டாரா?

ஆகமம் என்பதெல்லாம் ஆரிய பார்ப்பனர்கள் தமிழர்களின் சிந்தனையை மழுங்கடிக்க மேற்கொண்டு வரும் முயற்சியே தவிர வேறொன்றுமில்லை.

பண்டைத் தமிழர் திருவிழாக் காலங்களில் தேவாரம் திருவாசகப் பாடல்களை ஓதிக் கொண்டு தெருவில் செல்வது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. இதனை பிராமணர்கள் கடுமையாக சாடியும் சண்டையிட்டும் வந்துள்ளனர். இதனை திருவெண்ணெய்நல்லூர் ஆலயத்திலுள்ள கல்வெட்டுகளில் ஒன்று தெளிவுபடுத்துவதாக ஆறுமுக நாவலரவர்கள் கூறுகிறார்.

12,11,1301ல் பதித்த கல்வெட்டு ஒன்றில் "437/21 தேவாரம் ஓதிக் கொண்டு திருவிழாக்களில் தெருவழியாகப் போகும் உரிமைகளின் பொருட்டு ஒரு சண்டையில் உயிர் துறந்த திருப்பூவணமுடையார் இலங்கேசுவரனுக்கு வெண்ணெய் நல்லூர் கைக்கோளர்கள் பெருமான் ஆலால சுந்தரப்பெருமான் கட்டளையின்படி திருச்சின்னம் முழுக்க சிறுமுறி தந்தது ருதிரோத்காரி வைகாசி 22ந் தேதி" அரசன் பெயரில்லை என்றுள்ளது. தெருக்களில் கூட தமிழர் வேதமாகிய திருமுறையை பாட அனுமதிக்காத ஆரிய பார்ப்பனர்க்ள் கோயில் கருவறைக்குள் எப்படி பாடுவார்கள் பாட அனுமதிப்பார்கள்? வடமொழிக்காக வக்காளத்து வாங்கும் அறிவு ஜீவிகள் இதனைப்புரிந்து கொள்வது எப்போது?

ஆரிய பார்ப்பனர்களால் தடுக்கப்பட்ட பிற்பட்டோர் மற்றும் தலித்துக்களை கோயிலுக்குள் அழைத்துச் சென்று தமிழர்கள் தமிழ் வேதம் திருமுறையை மீண்டும் கருவறைக்குள் கொண்டு செல்வதற்கான காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

ஆறுமுக நாவலரும் மறைமலை அடிகளும் தங்கள் வாழ்நாளில் திருமுறை ஓதி பல நூறு கோயில்களுக்கு குடமுழுக்கு

நடத்தியிருக்கின்றனர். இதனை மெய்ப்பிக்கும் வகையில் தற்போதும் சிவனடியார்களால் நடத்தப்பட்டு வருகிறது. நடத்துவதில் தவறில்லை.

இறை வழிபாடு என்பது உள்ளும் புறமும் மனிதனை மகிழ்ச்சியடையச் செய்வது. வழிபாடு புரியாத மொழியில் பூசைகள் நடக்கும் பொழுது அதனை மனம் ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் தாய்மொழி மனிதரை மேம்படுத்துகிறது. இதனை மறைமலையடிகளாரின் வாழ்வும் பணியும் என்ற நூலில் "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்று தாயுமானவர் கூறுவது காண்க. "உள்ளும் புறமுங் கசிந்தூற்றெழ நெக்குடைந்து குதிகொள்ளுஞ் செந்தேறல்' இங்ஙனம் இயங்குவதை வழிபட்டுணர்ந்து உள்ளத்திலே ஊன்றியுணர்ந்து போற்றுவதனால் உண்மையுணர்வு தலைப்படுகிறது. வழிபடுவோரின் உயிராற்றல் (ஆன்மசக்தி) மேம்படுகிறது. அதனால் தான் மாணிக்கவாசகர்,

"தினைத்தினை யுள்தோர் பூவினில் தேன் உண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெழும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும்
குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ!"

என்று பாடுகிறாரோ. இக்கருத்தை. படித்து தெளிந்ததால் தான் தமிழ் கற்றறிந்த மேலைநாட்டு பாதிரியார், ஜி.யூ. போப் "திருவாசகத்தை நான் படித்த போது அது என் எலும்பையெல்லாம் உருக்கியது" என்கிறார்.

ஒரு இனம் மற்றொரு இனத்தை ஆதிக்கம் செலுத்தும் போது அதை தடுக்க இயலாதவர்கள் மரபு என்கிறார்கள். ஆதிக்கத்தை எதிர்ப்பவர்கள் அடிமைத்தனம் என்கிறார்கள்.

திருச்சிற்றம்பலம்.

22. கண்ணகி கோயில் - வழி கிடைக்குமா?

தேனி மாவட்டத்தில் தமிழக எல்லைப் பகுதிக்குள் அமைந்துள்ளது கண்ணகி கோயில். ஒவ்வொரு ஆண்டும் சித்திரை முழு நிலவு நாளன்று மட்டும் பக்தர்கள் இங்கு வழிபாடு நடத்த அனுமதிக்கப்படுகின்றனர். இந்த விழாவில் ஏராளமான தமிழர்கள் கலந்து கொண்டு கண்ணகி கோயிலில் வழிபாடு நடத்துகின்றனர்.

கண்ணகி கோயில் அமைந்துள்ள இடம் அக்காலத்தில் திருச்செங்கோடு மலை என்றும் வெண்வேலன் குன்று என்றும் அழைக்கப்பட்டதாகச் சிலப்பதிகாரச் செய்திகளிலிருந்து அறியலாம். அக்காலத்தில் சேர நாட்டு மன்னனாக விளங்கிய சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் அமைத்தான். விழா நடத்தினான். இவ்விழாவில் அண்டை நாட்டு மன்னர்களும் ஆரியர்களின் ஒரு பகுதியினரும் இலங்கை மன்னர் கயவாகுவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தமிழக அரசியல்வாதிகளில் ஆத்திகர்களும் இருக்கிறார்கள், நாத்திகர்களும் இருக்கிறார்கள். ஆத்திகர்களாக இருந்தாலும் நாத்திகர்களாக இருந்தாலும் இவர்களிடையே மூடப்பழக்கம் ஒன்று உண்டு.

ஆண்டுதோறும் வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவிடத்தில் விழா நடத்தப்படுகிறது. இவ்விழாவில் கலந்து கொண்டால் பதவி பறிபோகும் என்ற ஒரு மூட நம்பிக்கையால் நமது அரசியல்வாதிகள் யாரும் நீண்ட காலமாக அவ்விழாவில் பங்கு கொள்வதில்லை. ஒருவேளை இதுபோன்ற ஒரு மூடநம்பிக்கையால் கண்ணகி கோயிலில் வழிபட்டாலோ அல்லது கண்ணகி கோயிலை உருவாக்கி நல்ல நிலைக்குக் கொண்டு வந்தால் தமக்குத் தீது வந்துவிடுமோ என்று தவறாக எண்ணுகிறார்களோ

அல்லது தமிழர்களின் அடையாளங்களை அழிக்க முயற்சிக்கும் செயலோ என்னவோ தெரியவில்லை.

அண்மையில் நடந்து முடிந்த கண்ணகி கோயில் விழாவில் தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு நடத்தினர். ஆனால் அங்குக் கேரள மாநிலக் காவல் துறையினர் மற்றும் அலுவலர்களின் வன்கைப்பற்றல் அதிக அளவில் இருந்ததாகச் செய்திகள் வந்துள்ளன.

கோயில் வளாகத்தில் கேரள பக்தர்கள் வழிபடும் கோயில் உள்ள இடத்தில் தென்னங்கீற்றாலான தோரணங்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் கண்ணகி கோயில் அமைந்துள்ள இடத்தில் தோரணங்கள் கட்டுவதற்குக் கேரள மாநிலக் காவல்துறை வருவாய்த்துறை மற்றும் கானகத்துறை அலுவலர்கள் இசைவளிக்க மறுத்து விட்டனர்.

கேரளக் காவல்துறையினர் அதிக அளவில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு அம்மாநிலப் பக்தர்களுக்கு வழிகாட்டும் விதமாக மலையாளத்தில் எழுதப்பட்ட தட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. ஆனால் தமிழில் எழுதி வைக்கப்பட்டிருந்த தட்டிகள் அனைத்தையும் கேரளக் காவல்துறையினர் அகற்றி விட்டனர். அதுமட்டுமல்லாமல் தமிழகக் காவல்துறையினர் கோயில் வளாகத்துக்குள் நுழைந்தபோது அவர்கள் கேரளக் காவல்துறையினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர். பின்னர் இரு மாநில அலுவலர்கள் பேசிய பிறகே அவர்கள் அனுமதிக்கப்பட்டனர் என்ற செய்தி வருத்தத்தை அளிக்கக் கூடியதாகும்.

இதேநிலை நீடித்தால் எதிர்காலத்தில் பத்தினித் தெய்வமான கண்ணகியை வழிபடும் உரிமை பறிபோய்விடும் எனப் பக்தர்கள் பேசுவதைக் கேட்க முடிந்தது.

தமிழர்கள் ஏற்கனவே முல்லைப்பெரியாறு காவிரி பாலாற்று சிக்கலில் தங்கள் உரிமைகளை இழந்திருக்கும் இவ்வேளையில் கண்ணகி

கோயில் வழிபாட்டு உரிமையையும் இழந்துவிடாமல் பாதுகாத்துத் தருவது அரசின் கடமையாகும்.

தமிழக இந்து அறநிலையத்துறைச் சார்பாகப் பல்வேறு பணிகள் நடந்து வருவதை மக்கள் அறிவர். ஆனால் தமிழர்களின் பண்பாடு சார்ந்த கோயில்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்பதை அண்மையில் வந்துள்ள செய்திகள் வெளிப்படுத்துகின்றன.

மதுரை திருமலைநாயக்கர் மகாலை மேம்படுத்த ரூ.3 கோடி நிதி ஒதுக்கீட்டிற்கு அரசு இசைவளித்திருப்பதாக அமைச்சர் தங்கம் தென்னரசு அண்மையில் தெரிவித்துள்ளார். இதேபோன்று நாமக்கல் ஆஞ்சநேயருக்கு தங்கத்தேர் ரூ15 கோடி செலவில் செய்யப்பட்டு தேர் வெள்ளோட்ட நிகழ்ச்சியும் நடைபெற்றுள்ளது. அதில் சில அமைச்சர்களும் கலந்து கொண்டனர் என்ற செய்தி வெளியாகியுள்ளது. இதுபோன்று கண்ணகி கோயிலைப் பேணிக்காக்க அரசு எந்த ஒதுக்கீடும் செய்யாதது ஏன்? என்பது போன்ற வினா தமிழர்களிடையே எழுந்துள்ளது.

தமிழக - கேரள கானகத்துறைக்கு இடையே தமிழக எல்லையில் தேனி மாவட்டம் கூடலூர் நகராட்சிப் பகுதியில் அமைந்துள்ளது கண்ணகி கோயில். கேரள எல்லை வழியாகச் செல்லாமல் தமிழக எல்லைப் பகுதியான லோயர்கேம்ப் அருகிலுள்ள பழியன் குடிசை வழியாக நடந்து சென்ற பக்தர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு அதிகமாக இருந்தது. இப்பாதை வழியாகச் சென்றால் கேரள அரசு தமிழகப் பக்தர்களைத் தடுத்து நிறுத்த உரிமையில்லை. கோயில் அமைந்திருப்பதும், கோயிலுக்குச் செல்லும் வழியும் தமிழக எல்லைக்குள் இருப்பதால் பக்தர்கள் எப்போதும் சென்று அச்சமின்றி வழிபட்டு வர முடியும். இதற்குத் தமிழக அரசு பழியன் குடிசை வழிப்பாதையைச் சீரமைத்துக் கொடுக்க முன்வரவேண்டும் என்பது பக்தர்களின் வேண்டுகோளாக உள்ளது. இந்து அறநிலையத்துறை பல்லாயிரம் கோடி செலவழித்துப் புதிய கோயில்களை உருவாக்குவதை விட

நமது முன்னோர்கள் வழிபட்ட கோயில்களைப் புதுப்பிப்பதால் தமிழர்களின் பண்பாடு பாதுகாக்கப்படும்.

ஆதிக்கச் சக்திகளின் பேச்சைக் கேட்டு அப்படியே இந்து அறநிலையத்துறை செயல்படுமானால் தமிழர்களின் பண்பாடு சார்ந்த கோயில்கள் அழிக்கப்பட்டுவிடும் என்பதை ஆட்சியாளர்கள் உணரவேண்டும். இதுபோன்ற அறியாமைச் செயல்களினால் கடந்த காலத்தில் நால்வர் பாடல் பெற்ற திருத்தலங்களெல்லாம் வழிபாடு இன்றியும் ஒரு நேர பூசைகூட இல்லாமல் பாழடைந்தும் இளைய தலைமுறையினர் அறிய முடியாத வகையிலும் சிதைந்து காணப்படுகின்றன.

கண்ணகி கோயிலை உயிப்பித்துவிட்டால் அதையாராலும் அகற்ற முடியாது. கோயிலை உயிர்ப்பிப்பதா? வேண்டாமா? என்பதைத் தமிழக அரசுதான் முடிவு செய்ய வேண்டும்.

23. சைவம் - ஆதீனம் - ஆறுமுகசாமி

சைவம் சிவம் தொடர்பானது பின்பு சைவம் தமிழர் சமயமாக மலர்ந்தது பண்டைத் தமிழர்கள் முழு முதல் கடவுளாக வழிபட்ட தெய்வம் சிவன். இக்காலத்தில் சுனாமி என்று சொல்லப்படும் பேரழியால் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் உலகம் சிதறுண்டபோது லெமூரியாக் (பண்டைத் தமிழகம்) கண்டத்தில் தோன்றிய மனித இனமும் சிதறுண்டு போனது. ஆனால் சிவ வழிபாடு உலக முழுவதிலுமிருந்த மனிதர்களிடையே நீடித்திருந்தது என்பதனை ஆய்வாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

சிவமதம் இந்திய நாடன்றி அமெரிக்கா, கிரேக்கம் முதலிய நாடுகளிலும் பரவியிருந்தது. மோசே, கடவுளருளிய பத்து கட்டளைகளைச் சிவன் மாதத்தின் ஆறாம் நாள் வெளியிட்டார் என்று சொல்லப்படுகிறது. மோசேயின் காலம் கி.மு. 1500 எகிப்தை அடுத்த நாடுகளில் சைவ சமயம் வழங்கியதென்பதற்கு இது சிறந்த சான்றாகும். மிகப் பழைய சிவாலயமொன்று அண்மையில் அமெரிக்காவில் கொலரடோ ஆற்றோரத்திலுள்ள பீடபூமியிற் கண்டுபிடிக்கப்பட்டது என்று இலங்கைத் தமிழறிஞர் ந.சி. கந்தையாபிள்ளை தமது தமிழர் சரித்திரம் என்ற நூலில் பதிவு செய்துள்ளார்.

உலகம் முழுவதும் பரவியிருந்த சிவவழிபாடு காலப்போக்கில் தோன்றிய பல்வேறு மதச் சிந்தனைகளால் ஆங்காங்கே சிதைவுறத் தொடங்கியது. உலகின் தென்கோடி முனையாகிய லெமூரியாவில் தோன்றி உலகம் முழுவதும் பரவியிருந்தது என்பதனை அறிந்த மாணிக்கவாசகர் தமது திருவாசத்தில் “தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி” என்று பாடியதில் வியப்பில்லை

சைவம் எந்தத் தமிழ் மண்ணில் தோன்றியதோ அதே மண்ணில் சிவவழிபாட்டிற்குப் பல்வேறு காலக்கட்டங்களில் சிக்கல்கள் பல நேர்ந்துள்ளன. அது இக்காலத்திலும் நீடிக்கிறது.

களப்பிரர்களின் காலத்தில் சைவம் தாழ்வுற்றாலும் அது ஒரு சில நூற்றாண்டுகளே நீடித்தது. களப்பிரர்களின் காலத்துக்குப் பிறகு சைவத்தைத் தழைக்கச் செய்த பெருமை திருமூலரையே சாரும். அவர்தான் முதன் முதலில் சைவத்திற்குக் கேடு வந்ததை உணர்ந்து "சிவசிவ என்கிலர் தீவினையாளர்" என்கிறார். இவருக்குப் பிறகு தோன்றிய தேவாரம் மற்றும் திருவாசகம் பாடிய ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர் போன்றோர் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் சென்று சிவ வழிபாட்டை மேன்மையடையச் செய்தனர்.

ஆதினம் என்ற சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர் ஞானசம்பந்தர். ஞானசம்பந்தர் பார்ப்பனர் குலத்தைச் சேர்ந்தவர் என்றாலும் தமிழர்களின் சிவ வழிபாட்டின் உண்மையை உணர்ந்த காரணத்தால் சிவபக்தியில் மூழ்கி "நல்லார் நாமம் நமசிவாயவே" என்று பாடிப் புகழ்ந்தார். ஞானசம்பந்தர் மதுரையில் தோற்றுவித்த ஆதின மடம் இன்றும் உள்ளது என்பது அனைவருக்கும் தெரியும். ஞானசம்பந்தர், அப்பர் அவரைத் தொடர்ந்து வந்த நாயன்மார்கள் சைவத்தைப் பாதுகாக்கப் பல்வேறு வழிகளில் தங்கள் வாழ்க்கையையே ஒரு போராட்டக் களமாக ஆக்கிக் கொண்டனர் என்பதைச் சேக்கிழார் அளித்த பெரிய புராணச் செய்திகளிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

ஆறுமுகசாமி சிதம்பரத்தில் தீட்சிதர்களை எதிர்த்து நடத்திய போராட்டம் மாட மாளிகையில் வாழ்ந்த மன்னனுக்கு வர மறுத்த சிவபெருமான் குடிசையில் வாழ்ந்த பூசலார் என்ற சிவனடியார் உள்ளத்தில் புகுந்தார் என்ற பெரிய புராணச் செய்தியை நினைவூட்டுகிறது. மக்களின் ஆதரவால் மட்டுமே அவர் தன்னுடைய எண்ணத்தைச் செயல் வடிவத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

சிவனடியார் ஆறுமுகசாமிக்குத் தமிழறிஞர் நிதி உதவித் திட்டத்தின்கீழ் வாழ்நாள் முழுவதும் மாதந்தோறும் ரூபாய் மூவாயிரம்

நிதி உதவியும், ரூ.15 மருத்துவப்படியும் வழங்க முதல்வர் கருணாநிதி உத்தரவிட்டுள்ளார் என்ற செய்தி மகிழத்தக்கது.

நீண்ட போராட்டத்திற்குப் பிறகு சிதம்பரம் நடராசர் கோவில் சிற்றம்பல மேடையில் நமது வேதம் தேவாரம், திருவாசகம் பாடிய ஆறுமுகசாமிக்கு வயது 79. ஆனால் அவரைக் காட்டிலும் வசதி படைத்த செல்வாக்குமிக்க இளம் வயதுடைய ஆதின கர்த்தர்களும் மடாதிபதிகளும் தமிழகத்தில் உள்ளனர். அவர்கள் போராட்டத்தில் கலந்து கொள்ளாமல் அவருக்கு ஆதரவு தெரிவிக்காமல் சைவத்தையும் இந்து சமயத்தையும் காப்பாற்றுவோம் என்று கூறினால் அது அரசியல் நோக்கத்திற்காகவா? அல்லது தன்னலத்திற்காகவா? என்பதனைப் பொதுமக்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

பிற்காலத்தில் வந்த சைவ மடாதிபதிகள் சைவத்தை முறையாக உணர்ந்தவர்களாக இல்லை என்பதை உணர்ந்த தமிழறிஞர் காசுப் பிள்ளை கீழ்க்கண்டவாறு கூறியிருப்பது உண்மையாக இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது. அவர் கூறியதாவது :

"பொதுவாகச் சைவனென்று தன்னைச் சொல்லிக் கொள்கின்றவன் தனது சமயத்தின் உயர்ந்த பிரமாண நூல் இன்னதென்று அறியாதவனாக இருக்கிறான். அவன் அறியாமையினால் விளையும் காமியப் பயனையும், பொருளையும் சுமார்த்தர்கள் (சிவவழிபாட்டை எதிர்க்கும் பார்ப்பனர்களில் ஒரு பிரிவினர்) பெற்றுக் கொள்வது மிகவும் இரங்கத் தக்கதாயிருக்கிறது" என்கிறார்.

எது எப்படியோ ஆறுமுகசாமி சிதம்பரம் சிவன் கோவிலில் தீட்சிதர்களுக்கு எதிராகப் போராடி வெற்றி பெற்றதைப் பார்க்கும்போது 'தன் கடன் அடியேனையும் தாங்குதல். என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற அப்பரின் வரிகள் தான் நினைவுக்கு வருகிறது.

24. புத்தர் தன் மகனுக்கு வழங்கியது என்ன?

இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் புத்தர் பிறந்த இரண்டாயிரத்து 551-வது ஆண்டு விழா ஒரு பக்கம் அம்பேத்கர் ஒரு இலட்சம் ஒடுக்கப்பட்ட மக்களுடன் புத்த மதத்தைத் தழுவிய ஐம்பதாவது ஆண்டு விழா ஒரு பக்கம் கொண்டாடப்பட்டு வருவது பற்றி நாளேடுகளிலும் வார ஏடுகளிலும் செய்திகள் வந்த வண்ணம் உள்ளது.

மக்கள் தனக்காகக் கோயில் கட்டவும் சிலைகள் வடித்து வழிபடவும் புத்தர் தான் வாழும் காலத்தில் அனுமதிக்கவில்லை. மாறாக தன் கொள்கைகள் மக்களிடத்தில் நிலையாக நின்று உலகம் இன்பமயமானதாக விளங்க வேண்டும் என்று எதிர்பார்த்தார்.

மனைவிக்கும் வறுமைக்கும் பயந்து துறவிகளானவர்கள் ஏராளம், ஏராளம். ஆனால் சித்தார்த்தன் என்ற புத்தர் ராசகுடும்பத்தைச் சேர்ந்தவர். இளவரசனாக முடி சூட்டி ஆட்சி பீடத்தில் அமர்ந்து நாட்டை ஆள வேண்டியவர். தன் அன்பான மனைவி, அழகான குழந்தை, அரண்மனை வாழ்வு என எல்லாவற்றையும் துறந்து இரவோடு இரவாக அரண்மனையை விட்டுத் துறவியாக வெளியேறியவர்.

கயாவில் உள்ள (இன்றைய பாட்னா) மான் பூங்காவில் தன் போதனைகளை முதல் முறையாக எடுத்துரைத்தார். அப்பகுதியிலேயே நீண்ட காலம் பிச்சைப் பாத்திரத்துடன் தெருத்தெருவாக சென்று பிச்சை எடுத்தும் தனது போதனைகளை மக்களுக்கு எடுத்துரைத்தும் வந்தார். புத்தரின் போதனைகள் மக்களை வெகுவாக ஈர்த்தது. ஏராளமானோர் இளைஞர்கள் உட்பட புத்த பிட்சுகளாக மாறி புத்தர் கொள்கைகளை மக்களிடம் பரப்பினர்.

ஆரியர்களின் பசப்பு வார்த்தைகளில் மயங்கிவிட்ட இந்திய மன்னர்கள் பல்லாயிரக்கணக்கில் ஆடு மாடு போன்ற விலங்குகளை

யாகத்தீயில் இட்டு வெற்றி விழாக்களைக் கொண்டாடிய காலம் அது. பாடலிபுத்திர மன்னன் பிம்பிசாரன் தனது வெற்றிக்காக வேள்வி பூசைகள் செய்ய வேண்டும் என்று ஆரிய வேத விற்பன்னர்கள் மன்னனை வேண்டினர். அதன்படி அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

இதைக் கேள்விப்பட்ட புத்தர் பிம்பிசாரனுடைய அரண்மனைக்கு வருகிறார். வேள்வி நடத்தும் இடத்திற்குச் செல்கிறார். அங்கு அவர் பார்த்த காட்சி மனதை நெருடச் செய்தது.

வேள்வித் தீ வானை நோக்கி சீறிக் கொண்டு எரிந்தது. மந்திர உச்சாடன் பலத்தது பலர் சேர்ந்து ஒரு குரலாகி "தேவர்களே பிம்பிசாரனுடைய இந்த வேள்வியால் மன்னனுடைய பாவங்கள் தொலைய, உங்களுடைய மனது மகிழ்ச்சியுற இதோ இந்த உதர மாமிசபர்தமான இந்த முதல் ஆட்டை அக்னியில் பலியிடுகிறோம்'' என்று ஆட்டை பலியிட முயன்றனர். அரசனின் அனுமதி பெற்று சித்தார்த்தர் சிறிது நேரம் யோசித்து விட்டு, "மன்னவா நீர் இந்நாட்டின் அதிபதி அனைத்து பறவைகள், விலங்குகள், மானிட வர்க்கத்தையும் காப்பாற்ற வேண்டிய பிரதிநிதி நீ ஆரியர்களின் பொய்யான வேள்வியை நம்பி எந்த உயிரையும் கொன்று விடலாம். ஆனால் கொடுக்க முடியுமா?'' என்றார் இதைக் கேட்ட பிம்பிசாரன் எழுந்து ஓடோடி புத்தரின் கால்களில் விழுந்து வணங்கி அங்கு உயிர்ப்பலிக்காக நிறுத்தப்பட்டிருந்த ஆடு மாடுகளை அவிழ்த்து சுதந்திரமாக வெளியே அனுப்ப உத்தரவிட்டான்.

பிரம்மா விஷ்ணுவின் பெயரால் உயிர்பலியிடும் பொய்யான வேள்வியை இந்திய மன்னர்களிடம் புகுத்திய அதே ஆரியர்கள்தான் பிற்காலத்தில் புத்தர் விஷ்ணுவின் அவதாரம் என்று சொல்லி சிவமயமாக இருந்த இந்திய மண்ணிற்கும் களங்கம் ஏற்படுத்தினர்.

பாடலிபுத்திரத்தில்தான் தன் முதல் பரப்புரையை துவக்கினார் புத்தர். சாதிகள் மலிந்து கிடந்த சமுதாயத்தை மாற்ற முனைந்தார்.

துறவறம் பூண்டு சென்ற தன் மகன் புத்தரை நீண்டகாலம் காணாது மிக வேதனையுடன் இருந்தார் மன்னர். தன் அமைச்சர் ஒருவரை அனுப்பி புத்தரை உஜ்ஜயினிக்கு அழைத்து வர வேண்டினார். சென்ற அமைச்சரோ அங்கிருந்த நிலையைக் கண்டு தானும் புத்தபிச்சுவாக மாறினார். செய்தி ஏதும் கிடைக்காத மன்னர் மீண்டும் ஒரு அமைச்சரை அனுப்பினார். அவரும் புத்தரிடம் சென்று பிட்சுவாக மாறினாலும் மன்னர் அனுப்பிய செய்தியை புத்தரிடம் கூறினார். தன் தந்தையின் வேண்டுகோளுக்கு இணங்க கௌதம புத்தர் உஜ்ஜயினி வந்தார்.

இளவரசர் வருகிறார் என்பதை அறிந்த நகர மக்கள் பாதைகளை எல்லாம் அலங்கரித்தார்கள். மங்கள இசைகளை இசைத்து வரவேற்றனர்.

அரண்மனையின் எதிரே, பிச்சைப்பாத்திரத்துடன் புத்தர் வந்து நின்றார். வரவேற்கக் காத்து நின்ற மன்னர் (புத்தரின் தந்தை) கண்களில் நீர் வழிய பிச்சையிட்டார். பிச்சையை வாங்கிக் கொண்டு புத்தர் . திரும்பினார்.

எதிரே அவருடைய மகன் ராகுலன் வந்து நின்றான். ஒரு கனம் மகனைப் பரிவுடன் பார்த்தார்.

பிறகு மௌனமாகவே நடக்கத் துவங்கினார். ராகுலன் அவரைப் பின் தொடர்ந்தான். அரண்மனையைக் கடந்ததும் "அப்பா எனக்குள்ள உரிமையைக் கொடுங்கள்" என்றான் ராகுலன்.

புத்தர் திரும்பிப் பார்த்தார். அலட்சியப்படுத்தும் முறையில் ஏதும் சொல்லாமலேயே சென்றார். ராகுலன் தயங்கவில்லை அன்னையின் போதனை அவனது இளம் உள்ளத்தைத் திடமாக்கியிருக்கிறது. தொடர்ந்து நடந்தான்.

"அப்பா எனக்குள்ள உரிமையைக் கொடுங்கள்" ராகுலனின் குரல் மேலும் வலுத்தது. இந்த முறையும் புத்தர் நிற்கவில்லை,

திரும்பவில்லை., பதிலும் சொல்லவில்லை. நடந்து கொண்டிருந்தார். ராகுலன் சலிக்கவில்லை தன் உரிமைக்குரலை எழுப்பிக் கொண்டேயிருந்தான்.

புத்தருடன் அவருடைய பிரதான சீடர் சாரிபுத்திரரும் பத்தாயிரம் பிக்குகளும் அவரைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்தார்கள்.

''அப்பா, எனக்குள்ள உரிமையைக் கொடுங்கள்'' ராகுலன் நகர எல்லைக்கு வந்தும் தன் வேண்டுகோளை நிறுத்தவில்லை.

மகனைத் திரும்பிப் பார்த்த புத்தர் "என்ன வேண்டும் ராகுலா உனக்கு?'' என்று கேட்டார். ''என்னையும் சங்கத்தில் சேர்த்துக் கொண்டு துறவறம் ஏற்க அருள்பாலிக்க வேண்டும்'' என்றான்.

"சாரிபுத்திரரே ராகுலனுக்கு துறவு செய்து வைக்க ஏற்பாடு செய்யுங்கள்" என்றார் புத்தர். எல்லோரும் பிரமித்துப் போனார்கள்.

"உலகம் துன்பமயமானது. ஆசையே அழிவிற்குக் காரணம் என்ற புத்தரின் போதனையை இன்றைய உலகம் சிந்திக்குமா?

25. கிளிஞ்சல் விளக்கு

சங்க காலப் பாடல்களில் ஒரு தொகுப்பாக விளங்குவது நற்றினை. இதில் கடற்கரை சார்ந்த மீனவ மக்களின் வாழ்க்கை முறை விளக்கப்பட்டுள்ளது. அதாவது கடற்கரையில் வாழும் மீனவர்கள் கடலில் சென்று மீன் பிடித்துவந்து தாங்கள் வாழும் பகுதியில் அவற்றை மணற்பரப்பில் இட்டு பிறகு விளக்கொளியில் உறங்குவார்கள் என்று கூறப்பட்டுள்ளது. அவ்விளக்கிற்கு நெய்யாகப் பயன்படுவது மீன் கொழுப்பாகும். கலசமாவது கிளிஞ்சலாகும். இதுவே தற்போது சிற்றூர்களில் கிளியாஞ்சட்டி என்று அழைக்கப்படுகிறது.

குறுந்தொகை என்ற மற்றொரு சங்க இலக்கியத்தில் உறையூர் முதுகூத்தன், நல்ல பஞ்சினாலாகிய திரியினால் தமிழ்ப் பெண்கள் விளக்கேற்றினர் என்ற சிறப்பைப் 'பஞ்சு வெண்திரிச் செஞ்சுடர்' (குறுந்தொகை 353) எனப் பாராட்டுகின்றார்.

இவ்விளக்கு ஏற்றுவது நாள்தோறும் நடைபெறுகின்ற நிகழ்ச்சியே என்றாலும் மாரிக்காலத்தே (ஐப்பசி, கார்த்திகை மாதங்களில்) அவ்விளக்கை அழ்குபட வரிசையாக ஏற்றி வைத்துப் பழந்தமிழ் மக்கள் நல்விழாக் கொண்டாடினர். இவ்விழாவினைப் பற்றி அகநானூற்றில் ஔவையார், நக்கீரர் போன்ற புலவர்களும் (அகம் 11, 141) பிற்காலத்தில் வந்த ஞானசம்பந்தர் போன்ற சமயத்தலைவர்களும் நன்கு பாராட்டிப் போற்றுகின்றனர். இவ்விழாவே தற்பொழுது கார்த்திகை தீபத்திருவிழா என்று அழைக்கப்படுகிறது என்று அ.மு. பரமசிவானந்தம் தமது தமிழ்நாட்டு விழாக்கள் என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

இந்தியாவில் குடியேறிய ஆரியர்கள் முதலில் வடபகுதியில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டி தமிழர்களின் பண்பாட்டை சிதைவுற செய்தனர். பின்பு இந்தியாவின் தென்பகுதியில் தங்கள் ஆதிக்கம்

பரவியபோது தமிழர்களின் கார்த்திகை தீபத்திருவிழாவைக் குறிவைத்து அதனை அழிக்க புதிதாக புகுத்தப்பட்டதே தீபாவளி

"பரதமுனிவரின் நாட்டிய சாத்திரம் முதல் தீபாவளித் திருநாள் வரை எந்த ஒரு விளைவுக்கும் மூலத் திராவிடத் தொடர்பும் தமிழடிப்படையும் இருந்தும் அவை வடமொழி மேற்பூச்சினை அல்லது வண்ணத்தைக் காட்டுகின்றன" என்பார் தமிழறிஞர் தமிழண்ணல்

கண்ணன் நரகாசூரன் என்பவனை மக்கள் நலன் கருதி கொன்றானாம் இறக்கும் தருவாயில் இருந்த சூரன், தான் இறந்த நாளை நாடு கொண்டாட வேண்டும் என்று கேட்டுக்கொண்டானாம் அதன்படி கண்ணன் வரம் தந்தான் என்றும், அந்நாளே தீபாவளியாகக் கொண்டாடப்படுகிறது என்று ஆரியர்கள் கதை கூறுவர். இதுவல்ல உண்மை ஆரியர்கள் தங்களை எதிர்த்தவர்களை தஸ்யூக்கள் என்றும் அசுரர்கள் என்றும் அழைத்தனர். மக்களைப் பிளவுபடுத்துபவதற்காக வருணாஸ்ரம தர்மத்தைப் புகுத்தினர் தமிழர் நாகரீகம் ஆரிய கூட்டத்தால் அழிக்கப்படுவதை உணர்ந்து அவர்களை எதிர்த்தவர்களைக் கொன்றனர் அந்த நாளை சிறப்பாகக் கொண்டாடினர் தங்களுக்கு ஆதரவாக இருந்த பூர்வீக இந்தியர்களையும் கொண்டாடும்படி செய்தனர். அதுவே இன்று அனைவராலும் மதம் சார்ந்த விழாவாக தீபாவளி என்று அழைக்கப்படுகிறது.

தமிழகத்திற்கு வந்த ஆரியர்கள் சிறுபான்மையர் எனினும் அவர்கள் தமிழர்களின் சமய துறையில் தோற்றுவித்த மயக்கமும் மாற்றமும் அவற்றால் ஏற்பட்ட தமிழரின் தாழ்வும் அவர்களின் சாதனையாகும். நமக்கு வேதனை தருவதாகும்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று வாழ்ந்து வந்த மக்களை பல குலங்களாக்கி பாழ் செய்யும் உட்பகையைப் புகுத்தி அவர்களை சின்னாப்பின்னப்படுத்தி தங்கள் மேல் ஆதிக்கத்தை நிலைநாட்டினர். இவ்வாறு ஏமாளி மக்கள் மீது ஏற்றங்கொண்ட

பார்ப்பனர் கல்வித்துறையைத் தமக்கே உரியதாக்கிக் கொண்டு ஏனையரோடு கலந்து வாழாது தனித் தெருவில் வாழ்ந்து தங்களுக்கு தாமே வசதியையும் ஏற்படுத்திக் கொண்டார்கள். 'பார்ப்பனர் அல்லாதாரை அசுரர்' என குறிப்பிட்டனர் என்கிறார் தமிழ் அறிஞர் தி வை. சொக்கப்பா.

'தீபாவளி' என்பது வடமொழி சொல். ஆரியர்கள் முதலில் நமது தெய்வப் பெயரை வடமொழியாக்கினர். ஊர்ப் பெயர்களை மாற்றினர் பின்பு தமிழர்களுக்கு வடமொழி பெயர்களை சூட்டினர். லக்ஷ்மி, ஜானகி, ஷண்முகம், பார்வதி, சரஸ்வதி, ஸ்ரீதேவி, ஸ்ரீதர், சகஸ்ரநாமம், புருஷோத்தமன் என்பதெல்லாம் ஆரியர்கள் தமிழ் மக்கள் மீது புகுத்திய வடமொழிப் பெயர்கள். இதுபோன்றே தமிழர்களின் விழாவாக இருந்த தீபத் திருவிழாவை (கார்த்திகைத் திருவிழா) தீபாவளி திருநாளாக மாற்ற முயன்றனர். தீபாவளியை ஏற்றுக் கொண்ட தமிழர்கள் தங்கள் முன்னோர்கள் ஏற்படுத்திய கிளிஞ்சல் விளக்கு வழிபாட்டை கைவிட விரும்பவில்லை அதுவே தற்காலத்தில் கார்த்திகைத் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. கார்த்திகை மாதம் முழுவதும் வீடுகளில் சிவபெருமானையும் முருகனையும் மனதில் கொண்டு விளக்கு ஏற்றி வழிபட்டு வருகின்றனர்.

திருக்கார்த்திகை விழா தான் தீபாவளி விழா என்று ஆயிற்று. தீப-ஆவளி என்றால் விளக்கு வரிசை என்றுதான் பொருள். இரண்டும் இந்திய நாடு முழுவதும் ஒரே பண்பாடாக இருந்த தொன்மைமிக்க காலத்தில் ஒரே விழாவாக கொண்டாடப்பட்டு பின்பு பல்வேறு காரணங்களால் இரண்டு விழாக்களாகப் பிரிந்தன. இவற்றுள் தீபாவளியை மட்டும் வடவர் கொண்டாட, தீபாவளி, திருக்கார்த்திகை இரண்டையும் தமிழர்கள் கொண்டாடுகின்றனர்.

தமிழர்கள் குறிஞ்சிக் கடவுள் முருகனுடன் தொடர்புடைய விழாவாக கார்த்திகை தீப விழாவைக் கொண்டாடினர். திருவண்ணாமலை கார்த்திகை தீபம் இன்று ஓங்கிய சிறப்புடையது. முத்தொள்ளாயிரத்தில்

ஆபுகு மாலை அணிமலையில் தீயே போல்' என்று சொக்கப்பனை கொளுத்தப்படும் சிறப்பு சுட்டிக் காட்டப்படுகிறது 'குன்றின் மேலிட்ட விளக்கு' என்ற பழமொழி இவ்விழாவினின்றும் பிறந்ததேயாகும் என்று கூறும் தமிழறிஞர் தமிழண்ணல், "திருக்கார்த்திகை தீபாவளி இரண்டும் பெயரொற்றுமை வேறு சில ஒற்றுமைகளினாலேயே ஒன்றாகிவிடுமா?" என்ற வினாவை தமிழர்கள் முன் வைத்துள்ளது சிந்திக்கத்தக்கது.

26. பசியும், விளையாட்டும்

நீண்ட நாட்களுக்குப் பிறகு நண்பர் ஒருவரை சந்திக்க நேரிட்டது தன் குடும்பத்தாருடன் வந்த அவரது பையனிடம் என்ன படிக்கிறாய் என்றேன். அவன் ஆங்கிலத்தில் "போர்த்" (நான்காம் வகுப்பு) என்றான். ''கங்குலி யார் தெரியுமா?'' என்று கேட்டேன். அதற்கு ''கங்குலி மட்டைப்பந்து விளையாட்டு வீரர்'' என்றான். தொடர்ந்து அவனிடம் திருக்குறளை எழுதியது யார் தெரியுமா? என்றேன். அதற்கு அவன் "அதுவெல்லாம் அப்பாவுக்குத் தான் தெரியும்'' என்றானே ... நான் அதிர்ந்து போனேன். நமது குழந்தைகள் எப்படி வளர்கிறார்கள் என்பதற்கு இது ஒரு சிறு எடுத்துக்காட்டு.

மட்டைப்பந்து விளையாட்டு வெள்ளையர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு விளையாட்டு. உலகில் எத்தனையோ விளையாட்டுகள் உள்ளன. ஆனால் மட்டைப்பந்து விளையாட்டை மட்டுமே மக்கள் அதிகம் ரசித்தும் பேசியும் மகிழ்ந்தும் வருகின்றனர். ஆனால் அது கொடுப்பது உண்மையான மகிழ்ச்சியா என்றால் இல்லை. ஆம் அது ஒரு போதையான மகிழ்ச்சி.

மட்டைப்பந்து ரசிகர்களுக்கும் போதைக்கு அடிமையான குடிகாரர்களுக்கும் வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. படித்தவர்கள் நான்கு அல்லது ஐந்து பேர் அலுவலகத்திலோ அல்லது வேறு எங்கு கூடினாலும் அவர்கள் பேச்சில் மட்டைப்பந்து பற்றியும் அதில் பங்கு கொண்டு ஆடுபவர்களின் ஆட்டம் பற்றியும் பேசுகிறார்கள். அதோடு மட்டுமல்ல சில ஆட்டக்காரர்கள் தோல்வியடைந்து விட்டால் அது குறித்து ஆழ்ந்து கவலைப்படுவதுடன் தனிமையில் ரசிகர்கள் தாங்களாகவே பைத்தியக்காரர்களைப் போல் பேசிக்கொள்வதையும் பார்க்க முடிகிறது.

இந்தியர்களிடம் குறிப்பாக தமிழக இளைஞர்கள் விளையாடுவதற்கு சடுகுடு என்ற கபடி, கிட்டி, குண்டு விளையாடுதல், சப்பாக்கல் விளையாட்டு, கோகோ போன்ற விளையாட்டுக்களில் ஒருவரை

ஒருவர் தொட்டும், கட்டிப்பிடித்தும் விளையாடுவதால் விளையாடுபவர்களின் உள் உணர்வுகள் பாசத்தையும் நட்பின் நெருக்கத்தையும் அதிகப்படுத்துகின்றன. விளையாடும் நேரம் தவிர மற்ற நேரத்தில் அந்த விளையாட்டு பற்றி பேசி நேரத்தை வீணாக்குவதற்கு வழி இல்லை மேலும் மட்டைப் பந்து விளையாட்டு தற்போதைய இளைஞர்களை சூதாட்டத்திற்கு சமமான விளையாட்டாக மாற்றியிருக்கிறது என்பது கவலைப்பட வேண்டிய செய்தி படித்தவர்களைப் பார்த்து படிக்காதவர்களும் இந்த விளையாட்டின் பால் ஈர்க்கப்பட்டிருக்கிறார்கள். விளையாட்டு வீரர்கள் தாங்கள் அணியும் உள்ளாடை போன்றவற்றில் பொறிக்கப்படும் விளம்பரங்களின் மூலம் ஏராளமாக பொருளீட்டி கோடீஸ்வரர்களாகி விடுகின்றனர். ஆனால் இந்த விளையாட்டை தொலைக்காட்சியில் கண்டும், பேசியும் தங்களது நேரத்தை வீணடிக்கும் இளைஞர்கள் ஏராளம் இது போன்ற போதை விளையாட்டுகளிலிருந்து இளைஞர்களை மீட்க நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக அரசு விளையாட்டு வீரர்களுக்கு லட்சக்கணக்கில் பணம் அளித்து சிறப்பிப்பது பிற துறையினரை இது பாதிக்காதா என்பது பற்றி சிந்திக்க வேண்டும்.

சீனா, பாகிசுதானைவிட இந்தியாவில் பசியால் வாடுவோரின் எண்ணிக்கை அதிகம் என்று அண்மைப் புள்ளி விபரம் தெரிவிக்கிறது. தவிர மகாராட்டிரம், ஆந்திரம் குசராத் போன்ற மாநிலங்களில் வறுமையால் வாடும் உழவர்கள் தற்கொலை செய்து கொள்வது தொடர் நிகழ்ச்சியாக உள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் குசராத் மாநிலத்தில் மட்டும் 403 உழவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்று அந்த மாநில அரசே தெரிவித்துள்ளது. உழவர்களின் விளைபொருள்களுக்கு கிடைக்கும் தொகை முதலீட்டைவிடக் குறைவாக இருப்பது மற்றும் எளிதான முறையில் போதிய அளவு வேளாண்மைக்கான வங்கிக் கடன் கிடைக்காததே இதற்கு காரணம் என்று இது பற்றி ஆய்வு செய்த சமூக சேவகர் பரத் சின்சாலா கூறியுள்ளார். உழவர்களின் வறுமையை நீக்காமல் விளையாட்டு வீரர்களுக்கு லட்சக்கணக்கில் பணத்தை போட்டி போட்டுக் கொண்டு மத்திய மற்றும் மாநில அரசுகள் கொடுப்பதால்

யாது பயன்? உழவர்கள் சிறப்பாக வாழ அரசு நடவடிக்கை எடுத்து அவர்களின் வாழ்க்கை தரம் உயரும் போது தான் நாடும் செழிக்கும் அவர்களது விளைபொருள்களுக்கு போதுமான பணம் கொடுத்து அரசே விலைக்கு வாங்க முன்வரவேண்டும்.

பசியும் பட்டினியும் உலகில் பல நாடுகளில் காணப்படுகின்றன. ஆனால் உலகில் பொருளாதாரத்தில் வேகமாக வளர்ந்து வரும் நாடுகளின் பட்டியலில் இரண்டாம் இடத்தில் இந்தியா இடம் பெற்றாலும் பசியால் வாடுவோரின் எண்ணிக்கையைக் குறைப்பதில் அதன் நடவடிக்கைகள் வேகமாக இல்லை. நாட்டில் பசியால் வாடுவோரின் எண்ணிக்கை சீனா, பாகிசுதானைக் காட்டிலும் அதிகமாக உள்ளது என்று ஓர் ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

பன்னாட்டு உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் 2007-ம் ஆண்டுக்கான உலக அளவில் பசியால் வாடுவோரின் குறியீட்டு வேறுபாட்டை ஆய்வறிக்கையாக வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையின்படி தற்போது இந்தியாவில் பசியால் வாடுவோரின் எண்ணிக்கை 25.03 புள்ளியாக உள்ளது. இது 1990-ம் ஆண்டில் 33.73 புள்ளியாக இருந்தது. இது தற்போது குறைந்துள்ளது என்றாலும் பாகிசுதான், சீனா ஆகிய நாடுகளைவிட இந்தியா பின்தங்கியுள்ளது. இந்தியாவில் வேளாண்மைத்துறை வளர்ச்சி மற்ற துறைகளைக் காட்டிலும் மிகவும் பின்தங்கியுள்ளது என்று அந்த ஆய்வறிக்கை தெரிவிப்பதால் இந்திய ஏழை உழவர்கள் வஞ்சிக்கப்படுகின்றனர் என்று கருத இடமுண்டு.

விளையாட்டு விழாக்களை ஊக்கப்படுத்துகிறோம் என்ற பெயரில் பல கோடிக்கணக்கான உருபாயை அரசு செலவழிப்பதால் பயன் ஒன்றும் இல்லை என்பதற்கு கடந்த காலங்களில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளை ஆராய்ந்தால் இந்தியாவின் நிலை என்ன என்பது தெரியவரும். உலக மயமாக்கல் என்ற நிலையால் இந்திய ஏழை உழவர்கள் மேலும் பல இன்னல்களுக்கு ஆளாகி இருக்கின்றனர்.

வறுமையில் வாடும் கூலித் தொழிலாளிகளுக்கும் ஏழை உழவர்களுக்கும் பெண் தர மறுக்கிறார்கள். அதிலும் சிற்றூர்ப் புறங்களில் பெண்கள் அனைவரும் பள்ளியில் மேல்நிலை வகுப்பை முடித்து விடுவதால் வேளாண் சார்ந்த தொழில் செய்யும் ஆண்களை திருமணம் செய்து கொள்ள மறுக்கின்றனர். மாத ஊதியம் பெறும் வெள்ளை சட்டை தொழில் சார்ந்த கணவன்மார்களையே அவர்கள் விரும்புகின்றனர். அரசு உழவர்களையும் தொழிலாளர்களையும் காப்பாற்ற உடனடி நடவடிக்கை எடுக்க தவறுமானால் அதன் விளைவு எதிர்காலத்தில் வேறு விதமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

"இந்திய பூர்வீக மக்கள் வழிபட்ட சிவ நாமத்தை அழிப்பதற்காக பொய்ப்புராணங்களின் மூலம் அவதாரம் என்ற பெயரில் ஆரியக் கூட்டத்தாரால் புகுத்தப்பட்ட இராமன், கிருஷ்ணன் என்ற மனிதர்களையும் ஆஞ்சநேயர் என்ற குரங்கையும் கடவுளாக வழிபடும் வரை தமிழர்களாகிய நாம் சூத்திரர்கள் மட்டுமல்ல மூடர்களும் கூட".

- குச்சனூர் கிழார்.



கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே ஒழிவாய் ஒழிவாய்
மெய்வாய் விழிநாசியொடும் செவியாம்
ஐவாய் வழிசெல்லும் அவா வினையே.

– அருணகிரிநாத சுவாமிகள்

அருள்தரும் பழமுதிர்ச்சோலை



புண்ணியம் பெருக்கும் வழி

ஆரியமோகம் ஏறிய தமிழர்காள்
அறிவைப் பறிகொடுத்து அலையாதீர்!
அந்நிய வாடை சூழ்ந்த தமிழர்காள் – நம்
மண்ணின் மகிமையை மறவாதீர்!
தினமும் சிவசிவ என்று சொல்லி
திருநீறணிந்து நமது வேதம்
தேவாரம் திருவாசகம் ஓதி
அறநெறியில் வாழ்ந்திட
சகல தோஷமும், நோயும் நீங்கி
அருள் செல்வம் புண்ணியம்
பெருகி குருவருள் கிட்டும்
பொய்யில்லை அடியார் கண்ட உண்மை.

- குச்சனூர் கிழார்.